

கோகுலம்
GOKULAM
ஜனவரி '94 ரூ. 3.00
அதிசய அம்பிகா!

DIAMOND COMICS PRESENTS





CARTOONIST PRAN'S

CHACHA CHAUDHARY CHALLENGE OF RAAKA

FREE! Percy A PREMIUM CANDY 4 PERCY CANDIES AND CLASSIC CAR STICKER

NEW DIAMOND COMICS 1st DEC. 93









NEW DIAMOND COMICS 15th DEC. 93



FREE! REVOLVING INDIA WITH THIS COMIC





DIAMOND COMICS PVT. LTD. 2715, DARYAGANJ, NEW DELHI-110002

DISTRIBUTORS: Madras: • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road. • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). **Hyderabad:** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar., **Bangalore:** • Sapna Book Stall, Gandhi Nagar. • A.K. Agencies, Rajaji Nagar. • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road.



கோகுலம்

1994
ஜனவரி மாத
இதழ்
மலர் : 11
இதழ் : 12



அருமைச் சிறுவர் சிறுமியரே...

அன்பு வணக்கம்.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அனுப்பியிருப்பவர்களுக்கெல்லாம் இதன் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற இதழில் வெளியான கதை கட்டுரைகளைப் பாராட்டி ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. தொடர்கதை மிகவும் விறுவிறுப்பாக இருக்கிறது என்று சில சிறுவர் சங்கங்களும், பல தம்பி தங்கையரும் பாராட்டியிருக்கிறார்கள். கூத்தபிரான் எத்தனை ஆண்டு அனுபவம் உள்ளவர் என்பதைக் கவனிக்கும் போது இது பெரிய அதிசயம் இல்லை.



இந்த இதழில் உங்கள் பொது அறிவுக்குப் பயன்தரக்கூடிய பல கட்டுரைகள் உள்ளன.

'என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்' என்ற தலைப்பில் சில தம்பி தங்கைகள் தங்கள் அனுபவங்களைக் கூறியிருக்கிறார்கள். இதே போன்ற அனுபவம் உங்கள் எல்லோருக்கும் இருக்குமே. உங்கள் அனுபவத்தை ஒரு இன்லெண்ட் லெட்டரில் எழுதி அனுப்புங்கள். மேலே "என்னைப் புகைப்படம் எடுத்தார்கள் பகுதிக்கு" என்று எழுதிக் கோடிடவும். இதில் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். நாங்கள் கேட்ட பிறகு புகைப்படம் அனுப்பினால் போதும்.



கோகுலத்தில் தங்கள் பெயர் வர வேண்டும் என்ற ஆசையால் ஏற்கெனவே மற்ற பத்திரிகைகளில் வெளியானவற்றை சிலர் அனுப்பி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சில படைப்புகள் கடந்த சில இதழ்களில் வெளியாகியுள்ளதைப் பலரும் சுட்டிக்காட்டி எழுதியுள்ளார்கள். எழுத்தாற்றலை வளர்த்துக் கொண்டு புகழ்பெற வேண்டும் என்ற உண்மையான ஆர்வமுடையவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடக் கூடாது. இது அவர்களுடைய வளர்ச்சியைப் பாதிக்கும். இனி கோகுலத்திற்கு எழுதும் தம்பி தங்கைகள் தங்கள் படைப்புகள் தங்களாலேயே எழுதப்பட்டவை என்பதை உறுதிசெய்து எழுதி அனுப்ப வேண்டும்.

இடமில்லாத காரணத்தால், "உங்கள் நூலகம்" இந்த இதழில் வெளிவரவில்லை.

இந்த இதழுடன் உங்கள் கோகுலத்திற்கு 11 வயது பூர்த்தியாகிறது. அடுத்த இதழில் புதிய பகுதிகளை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

எல்லோருக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள். இந்தப் புத்தாண்டில் உலக மக்கள் அனைவரும் போர், வெள்ள, பூகம்ப அபாயமின்றி அமைதியாக வாழ அருள்புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டுவோம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்.)

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும். - பாரதியார்.

கோகுலம்


1994 ஜனவரி


இந்த இதழில்




★ வீரன் ரோமுலஸ் தீரன் ரீமஸ் பக்கம் 45

★ ரோபோ தெரியுமா? பக்கம் 29





✱ ஆமைக்குப் பற்கள் உண்டா?
பக்கம் 81



✱ ஆழ்கடலின் அற்புதங்கள்
பக்கம் 21



✱ பகுபாலிக்குப் பெருவிழா!
பக்கம் 17

பொங்கல் போனஸ்!

அப்பாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பொங்கலுக்கு வந்த போனஸ் பணத்தை என்ன செய்ய எனக் குழம்பினார்.

அப்பா வேலை பார்த்த பாக்டரியில் இந்த ஆண்டு பொங்கல் போனசாக ரூபாய் ஆயிரம் தருகிறார்கள். அந்த மகிழ்ச்சியான செய்தியைக் குடும்பத்தினரிடம் கூறி அவர் மகிழ்ந்தார்.

''பொங்கல் போனசில் எனக்கு ஸ்கூல் போக சைக்கிள் வேண்டும்'' என்று உடனே ராதிகா விண்ணப்பம் போட்டாள். அவள் செல்ல மகள்.

''எனக்கு ரொம்ப நாளா காலுக்கு வெள்ளிக் கொலுசு வேணும்னு கேட்டிண்டிருக்கேன். அதை வாங்கிக் கொடுத்துடுங்க'' என்று தன் விண்ணப்பத்தை வைத்தாள் கிருத்திகா. அவள் இரண்டாவது பெண், ''போடி, முதல்ல எனக்கு சைக்கிள். வர வருஷம் உனக்குக் கொலுசு''

''ஏன்? வர வருஷம் நீ சைக்கிள் வாங்கிக்க. இப்ப எனக்கு கொலுசு.''

''போடி''

''நீ போடி.''

அப்பா எவ்வளவு சொல்லியும் அவர்களை சமாதானம் செய்ய முடியவில்லை. அழுது அடம்பிடித்தனர். அவருக்கு ஏண்டாப்பா போனஸ் கொடுக்கிறார்கள். அதை ஏண்டாப்பா இவர்களிடம் வந்து கூறினோம் என்றாகி விட்டது. கோபத்தில் அவர் இருவர் முதுகிலும் கிள்ளினார். முடிவில் கண்டிப்பான குரலில் பெண்களிடம் சொன்னார்.

''அப்பா இப்ப வேலைக்குப் போறேன். சைக்கிளா? கொலுசா? நீங்களே ஒரு முடிவு பண்ணுங்க. சாயங்காலம் பணத்தோட வர்றேன். இரண்டு பேருமே பிடிவாதம் பண்ணினா இருவருக்குமே ஏதும் வாங்கித் தர மாட்டேன். அம்மாவுக்குப் புடவை வாங்கிடறேன். ஆமாம் சொல்லிட்டேன்.''

மாலை பாக்டரியிலிருந்து சந்தோஷத்துடன். பூ, பழம், இனிப்புகள், பலகாரம் என விதம்விதமாக வாங்கி வந்தார் அப்பா. வீடு அமைதியாக இருந்தது! என்ன ஆச்சு? இருவரும் சண்டை போட்டு ஓய்ந்து விட்டார்களா?

'அம்மா.. ஓடியாங்க... நம்ப அப்பா வந்துட்டார்...'

கூடத்தில் அமைதியாகக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த ராதிகாவும், கிருத்திகாவும் ஒரே குரலில் மகிழ்ச்சியாகக் கூறினர்.



மூன்று ரொட்டிகள்!

பசியுடன் இருந்த ஒரு விவசாயி ஓட்டலுக்குச் சென்றான். முதலில் ஒரு ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டான். அவனுடைய பசி அடங்கவில்லை. இரண்டாவதாக மறுபடி ஒரு ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டான். அப்போதும் அவன் பசி அடங்காமலேயே இருந்தது.

உடனே கோபத்துடன் விவசாயி மூன்றாவதாக மறுபடியும் ஒரு ரொட்டியை வாங்கிச் சாப்பிட்டான். அப்போதும் கூட அவன் பசி அடங்கவில்லை.

விவசாயி, கோபத்துடன், ''சே, இந்தப் பாழாய்ப் போன ரொட்டியைச் சாப்பிடுவதால்தானே பசி அடங்காமல் அவதிப்படுகிறேன்? இம்முறை ரொட்டி வாங்கக் கூடாது. மாறுதலாக ஒரு தோசையை வாங்கிப் பார்க்கிறேன்'' என்று தோசை வாங்கிச் சாப்பிட்டான்.



புயலுக்குப் பின் ஏற்பட்ட அமைதியாக இருக்குமோ? அப்பாவால் எதையும் நம்ப முடியவில்லை.

வாங்கி வந்தவற்றை மெதுவாக மேசை மேல் வைத்து விட்டு, ராதிகா, கிருத்திகாவைப் பார்த்து, ''ரெண்டு பேரும் கடைசியா என்ன முடிவு பண்ணியிருக்கீங்க..?'' என்று கேட்டார் அப்பா.

''சைக்கிளா? கொலுசா?''

''ராதிகா அக்காவுக்கே சைக்கிள் வாங்கிக் கொடுத்துடுங்கப்பா'' என்றாள் கிருத்திகா.

''வேண்டாம்ப்பா.. கிருத்திகாவுக்கே கொலுசு வாங்கிடுங்க. சைக்கிள் அடுத்த வருஷம் வாங்கிக்கலாம்!'' - இது ராதிகா!

''நிஜமாகவா சொல்றீங்க?'' என்று தன் காதையே நம்ப முடியாமல் கண்கள் விரிய அப்பா கேட்டார்.

''நிஜம்மாவே நிஜம்மா...'' கோரஸாய் சொன்னார்கள் இருவரும்.


அப்பா புன்னகைத்தார்.

''காலையில் உங்க சண்டையை பார்த்ததும் நான் மனசுல என்ன நினைத்தேன் தெரியுமா? யார் விட்டுக் கொடுக்கறாங்களோ அவங்களுக்கு மட்டும் கேட்டதை வாங்கித் தரலாம் என்று இருந்தேன். ஆனால் இப்ப இருவருமே விட்டுக் கொடுத்துட்டீங்க. அதனால முதல்ல ராதிகாவுக்கு சைக்கிள். அதிலே நீங்கள் ரெண்டு பேருமே பள்ளிக்கூடம் போகலாம். அப்புறமா என் நண்பரின் நகைக் கடையில் ஒரு வெள்ளிக் கொலுசு வாங்கித் தரேன். இதற்கான பணத்தை மாதா மாதம் கொடுத்துடறேன். இப்ப சந்தோஷம்தானே?''

''ஹைய்யா... நல்ல அப்பா...'' என்றவாறே இருவரும் ஓடி வந்து அப்பாவின் கைகளை அன்போடு பிடித்துக் கொண்டனர்.

அவர்கள் வீடே சந்தோஷத்தினால் நிறைந்து இருந்தது.

– எ.எஸ். ராஜ்




விவசாயி ஏற்கெனவே மூன்று ரொட்டிகள் தின்றிருந்ததால், இப்போது ஒரு தோசையைத் தின்றதும் அவனுடைய பசி அடங்கியது.

''தோசையைத் தின்றால், பசி அடங்கும் என்பது முன்பே தெரிந்திருந்தால் முதலிலேயே ஒரு தோசை மட்டும் சாப்பிட்டுப் பசியாறியிருப்பேனே? இப்போது மூன்று ரொட்டிகள் வீணாய்ப் போனதே!'' என்று கூறித் தலையில் அடித்துக் கொண்டான்.

– பா. ஜெயக்குமார், வந்தவாசி.

என்னைப் போட்டோ எடுத்தார்கள்!

அன்றாட வாழ்க்கையில் நிகழும் மகிழ்ச்சியான சம்பவங்களை அழியாப் பதிவுகளாக்கிப் பாதுகாக்கப் புகைப்படங்கள் எடுத்துக் கொள்கிறோம். அதிலும் செயற்கரியன செய்து பாராட்டுப் பெறும் பொன்னான வாய்ப்புகள் மிக அரிதாகவே வாய்க்கும். அவற்றைப் போட்டோ எடுத்து நினைவில் நிறுத்த யாருக்குத்தான் ஆசை வராது? அவ்வாறு பிறரால் பாராட்டப்பட்டுப் போட்டோவும் எடுக்கப்பட்ட தங்களது இனிய அனுபவங்களை விருதுநகர், கள்ளிக்குடி ஊர்களைச் சேர்ந்த தம்பி தங்கையர் ஆறுபேர் இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.



ஒரு அழகான சடை நாய்க்குட்டி தார்த் தொட்டிக்குள்ளே நின்று கூப்பாடு போடுது!
- ஜெயகாந்தன்.

அன்னிக்கி ஞாயிற்றுக் கிழமை, ஸ்கூலுக்கு விடு முறை. காலை 10 மணிக்கு டியூஷனுக்காக சைக்கிளில் மாஸ்டர் வீட்டுக்குப் போயிட்டிருக்கேன். எங்க ஊருக் கும் அந்தப் பக்கத்துச் சிறு டவுனுக்கும் மத்தியிலே ஒரு சிறிய தார்க்கிடங்கு. ரோடு போடப் பயன்படுத்துற தார்ப் பீப்பாய்களை ரோட்டின் ஓரமாக் கட்டியிருந்த அந்தச் சிமிண்ட் தொட்டியிலே ஊத்தி, ஸ்டாக் பண்ணி வச்சிருக்காங்க. நான் சைக்கிளில் போய்க்கிட்டிருக் கப்போ ஒரு நாய்க் குட்டியின் அவலமான அழுகைக் குரல் கேட்டு சைக்கிளை விட்டு இறங்கினேன். சுற்று முற்றும் தேடிப் பார்த்தா, ஒரு அழகான சடை நாய்க் குட்டி அந்தத் தார்த் தொட்டிக்குள்ளே நின்று கூப்பாடு போடுது! இளகின தாருக்குள்ளே நான்கு கால்களும் முக்கால்வாசி உயரத்துக்கு உள்ளே பதிஞ்சிட்டதாலே, வெளியே வர முடியாமே தவிச்சிட்டிருந்தது அது. எனக்கு ரொம்பப் பரிதாபமாப் போச்சு. எப்படியாச்சும் அதைக் காப்பாத்தணும்னு துடிச்சேன். தொட்டியின் ஓரத்துலே போயிப் பார்த்தா, என் கைக்கு எட்டாத தூரம். கொஞ்ச நேரம் யோசனை பண்ணிப் பார்த்தேன். ஒரு சின்ன ஐடியா வந்தது. உடனே வீட்டுக்கு வேகமாத் திரும்பி வந்தேன். மூலையில் கிடந்த பழைய குடைக் கம்பை எடுத்துக் கிட்டு பழைய இடத்துக்குப் பறந்தேன். வளைஞ்சிருந்த குடைக்காம்பின் கைப்பிடியை நாய்க்குட்டியின் நடு முதுகுக்கு நேரா நீட்டி, வெளியே இழுத்துட்டேன். ஆனா அதோட நாலு கால்லேயும் அடி வயிற்றுப் பக்க மும் தார் அப்பிக் கெடந்தது. டியூஷனுக்குக் கூடப் போகாமே நாய்க் குட்டி யைக் கேரியர்லே வச்சிக்கிட்டு வீட்டுக்கு வந்தேன். மேல் ஒட்டியிருந்த தாரை அப்புறப்படுத்த அரை பாட்டில் மண்ணெண்ணெயும் சின்னச் சவுக் காரக் கட்டியும் செலவாச்சு! அந்த அழகான நாய்க்குட்டியைக் காப்பாத் திட்டேன். அன்னிக்கி சாயங்காலமே அந்த நாய்க்குட்டியின் சொந்தக்காரர் எப்படியோ தகவல் தெரிஞ்சிக்கிட்டு எங்க வீடு தேடி வந்துட்டாரு. அவர் பக்கத்து ஊருக்குப் புதுசா வந்திருக்கிற பாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசராம். என் னைப் பாராட்டிட்டு நாய்க்குட்டியை வாங்கிட்டுப் போயிட்டாரு. கஷ்டப் பட்டுக் காப்பாத்தினே நாய்க்குட்டி, கையை விட்டுப் போயிட்ட கவலை எனக்கு. ஆனா மறுநாள் சாயங்காலம் எனக்கு ஒரு மகிழ்ச்சியான அனு பவம் காத்திருந்திச்சி! கையில் நாய்க்குட்டியைப் பிடிச்சிட்டு, தோளில் கேமிராவோட வாக்கிங் வந்திட்டிருந்த அந்த பாரஸ்ட் ஆபீசர், டியூஷ னுக்குப் போயிட்டிருந்த என்னை அடையாளம் தெரிஞ்சிக்கிட்டு நிறுத்தி னாரு. தன்னோட செல்லமான நாய்க்குட்டியை என் பக்கத்தில் நிறுத்தி என்னைப் போட்டோ எடுத்துக்கிட்டார். ஒரு வாரங் கழிச்சி போட்டோ காப்பி ஒன்னை மறக்காம எனக்கும் கொடுத்தனுப்பிச்சாரு. அந்தப் போட்டோவை இப்பவும் ரொம்பப் பத்திரமா வச்சிருக்கேன்.

- எஸ். ஜெயகாந்தன்.



அது மே மாசக் கோடை விடுமுறை. நாங்க குடும்பத்தோட கேரளா டூர் போயிருந்தோம். மலம்புழா அணையைச் சுத்திப் பார்த்துக்கிட்டு வந்தோம். அணைக்கு முன்புறம் அழகான பார்க். கண்ணைக் கவரும் வித விதமான சிலைகள். அதிலே ஒரு பெரிய ராட்சத மீனின் சிலை. அதன் வாய் வழியா உள்ளே நுழைஞ்சி வால் வழியா வெளியே வர மாதிரி அப்படியொரு பிரம் மாண்டமான அமைப்பு! அங்கே மூணு வயசு பாப்பா ஒண்ணு, அதோட அப்பா அம்மா ரெண்டு பேரோடேயும் வந்திருக்கு. பாப்பாவின் அப்பா கையிலே கேமரா வச்சிருக்காரு. அந்தப் பாப்பாவை மீனின் வாய் வாசலில் நிறுத்தி, ஒரு போட்டோ எடுக்க ணும்னு ரொம்பவும் முயற்சி பண்ணிட்டிருந்தாங்க. ஆனா அந்தக் குட்டிப்பாப்பா தனியா நிக்கிறதுக்குப் பயந்து அலறி அப்பா அம்மா கிட்டே ஓடிப் போகுது. கொஞ்ச நேரம் நான் அந்த விளையாட்டை வேடிக்கை பாத்துக்கிட்டு நின்னேன்.



குட்டிப்பாப்பா தனியே நிற்க பயந்து அலறிக்கிட்டிருந்தது. -பி. விஜயலட்சுமி.

எனக்கு ஒரு யோசனை தோணிச்சி. கோயம் புத்தூரிலே நான் ஆசையா வாங்கி வச்சிருந்த அந்தச் சின்னப்பூ விசிறியை எடுத்தேன். விரிச்சா மயில் தோகை மாதிரி விரியுற அழகான வண்ணப் பனையோலை யால் செஞ்சது அது. அதை நான் விரிச்சிப் பிடிச்சி மீன் சிலையின் முன்னால் போய் நின்னுக்கிட்டு பேபிக்கு அழகு காட்டினேன். உடனே விசிறியின் கவர்ச்சியிலே என்கிட்டே ஓடி வந்து நின்னது. அதைக் கேமிராவின் பக்கம் முகம் திருப்பி நிறுத்தி விட்டு, அவங்க அப்பாவை ரெடியாகச் சொன்னேன். அவர் ரெடியானதும் நான் ''சரட்''டுன்னு விலகிக் கிட்டேன். உடனே கேமிரா 'கிளிக்' ஆனது. பேபியோட பெற்றோருக்கு ரொம்பச் சந்தோஷம்! என் சாமார்த்தியத்தை மெச்சிப் போன பேபியின் அப்பா என்னையும் பாப்பாவையும் அதே மீன் சிலைக்கு முன்னாடி நிறுத்தி இன்னொரு போட்டோவும் எடுத்தாங்க. என் அட்ரஸைக் கேட்டு வாங்கிக்கிட்ட அவங்க, மறக்காம எனக்கொரு காப்பியை அனுப்பி வச்சாங்க!

- பி. விஜயலட்சுமி

மாணவ மாணவிங்க ஒவ்வொருத்தரும் ஆளுக்கொரு மரம் நட்டுப் பராமரிச்சிப் பாதுகாக்கணும். சிறப்பான முறையிலே மரம் வளர்த்துப் பாதுகாக்கிறவங்களுக்கு ஆண்டு விழா நடக்கிறப்போ பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் - இது எங்க தலைமை ஆசிரியரோட அறிவிப்பு. அதன்படி எல்லோருக்கும் பள்ளித் தோட்டத்திலேயும் விளையாட்டு மைதானத்தைச் சுற்றியும் இடம் ஒதுக்கி, மரக்கன்றுகளையும் கொடுத்தாங்க. நான் ஆர்வத்தோட ஒரு வேம்பு, ஒரு புளியங் கன்று ஆக ரெண்டு கன்றுகளுக்குப் பொறுப்பு ஏத்துக்கிட்டேன். அந்த ரெண்டு கன்றுகளையும் என்னோட கண்போலப் பாதுகாக்க ஆரம்பிச்சேன். எங்க ஸ்கூல் ஏரியாவிலே உப்புத் தண்ணீர்தான் கெடைக்கும். அதனாலே குடிப்பதற்காக வீட்டிலிருந்தே வாட்டர் பேக்கில் குடிதண்ணீர் கொண்டு போவோம்.

நான் எனக்காக ஒரு வாட்டர் கேனும், என் அருமைச் செடிகளுக்காக இன்னொரு வாட்டர் கேனும் கொண்டு போவேன். மதிய உணவு சாப்பிட்டதும் பாத்திரம் கழுவிய தண்ணீரைக் கூடக் கீழே ஊத்தாமே என் செடிகளுக்கு ஊத்துவேன். ஆடு, மாடு கடிச் சிடாமே முள்வேலி கட்டிப் பாதுகாத்தேன்.



நான் வளர்த்த மரங்களுக்கு மத்தியிலே என்னை நிறுத்திப் போட்டோவும் எடுத்தாங்களே! - எஸ். அழகர்சாமி.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமின்னு சொல்லுவாங்களே, அந்த மாதிரி என் செடிகள் ரெண்டும் வளர்ந்து என் உயரம் வந்து விட்டன! மத்தவங்களோட செடிகள் நல்ல பராமரிப்பு இல்லாததாலே கூனிக் குறுகி நின்னப்போ, என்னோட கன்றுகள் செல்லப் பிள்ளைங்க மாதிரி சிரிச்சிக்கிட்டு உயர்ந்து நின்றன! அப்புறம் என்ன? அந்த

ஆண்டுக்கான மரம் வளர்ப்புப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் எனக்குத்தான் கிடைச்சது! அது கூட எனக்கு அவ்வளவு பெரிசில்லே, நான் வளர்த்த என் மரங்களுக்கு மத்தியிலே என்னை நிறுத்திப் போட்டோவும் எடுத்தாங்களே, அந்த வாய்ப்பு லேசில் கிடைக்குமா?

- எஸ். அழகர்சாமி.



கோலத்தின் தலைமாட்டில் என்னை நிறுத்தி வண்ணப் போட்டோ எடுத்ததுதான்!
- சி. தனலட்சுமி.

வீட்டுலேயும் சரி, பள்ளியிலேயும் சரி; விழா என்றால் எனக்கு ரொம்ப குஷி. தோரண அலங்காரம், வண்ணக் கோலம் போடுறது ஆகிய வேலைகளுக்கு நானா முன் வந்து பொறுப்பு ஏத்துக்குவேன். என் தோழிங்க உதவியோட அந்தப் பணிகளைச் செஞ்சி முடிக்கிற வரைக்கும் எனக்கு வேற வேலையே ஓடாது.

ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி எங்க ஸ்கூல்லே ஆண்டு விழாவுக்கு நியமிக்கப்பட்ட கலைக்குழுவுக்கு நான்தான் தலைமைப் பொறுப்பு, ஏத்துக்கிட்டேன். மற்ற அலங்காரப் பணிகளை எல்லாம் முடிச்ச பின்னாடி, விழா மேடைக்கு முன்புறம் பெரிய ரங்கோலிக் கோலம் போடுற வேலையை ஆரம்பிச்சோம். விழாவுக்கு வருகிறவர்களைக் கவர்கிற மாதிரி பிரம்மாண்டமான ரங்கோலி ஒன்னைப் போடணும்கிறது என் ஆசை. என்ன வடிவம் போடலாம்னு யோசிச்சேன். கடைசியில் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரிய 'அவுட் ஸ்கெச்'சை எங்க டீச்சர்களின் உதவியால் போட்டு முடிக்க, அதில் பல்வேறு வண்ணப் பொடிகளை வச்சி மலை, நதி, கடல், பீடபூமி இப்படி அலங்காரம் பண்ணினேன். கோலம் நான் எதிர்பார்த்ததை விட ரொம்ப அழகா அமைஞ்சிட்டது. விழாவுக்கு வந்த விருந்தினர்கள் எல்லோருமே அதப் பார்த்து அசந்து போய் நின்னுட்டாங்க. போட்டது யாருன்னு விசாரிச்சி என்னைக் கூப்பிட்டு மனசாரப் பாராட்டினாங்க. அதைக் காட்டிலும் எனக்குப் பெரிய சந்தோஷம், அந்தக் கோலத்தின் தலைமாட்டிலே என்னை நிறுத்தி வண்ணப் போட்டோ எடுத்ததுதான். அதைத்தான் என்னோட கலையார்வத்துக்குக் கெடைச்ச பெரிய பரிசா மதிக்கிறேன்.

- சி. தனலட்சுமி.



என்.எஸ்.எஸ். திட்டத்திலேயே சேராத எனக்குக் கிடைச்ச பெருமையை நினைக்கப் பூரிச்சிப் போனேன்!
- ஆர். பாலமுரளி கிருஷ்ணா

நான் ஒன்பதாம் கிளாஸ் படிச்சிக்கிட்டிருக்கப்போ எங்க ஸ்கூல்லே என்.எஸ்.எஸ். என்ற நாட்டு நலப்பணித் திட்டம் ஆரம்பிச்சாங்க. அதுலே சேரணும்னு எனக்கு ரொம்ப ஆசை. திட்ட அலுவலரா இருந்த எங்க ஸ்கூல் மாஸ்டர் கிட்டே போயி என் விருப்பத்தைச் சொன்னேன். ஆனா அவர், "நீ பிளஸ் ஒன்னுக்கு வரப்போ பாக்கலா"மினு சொல்லிட்டாரு. எனக்கு ஏமாத்தம் தான். ஆனாலும் என்.எஸ்.எஸ். நண்பர்களோடே தான் எப்பவும் சுத்திக்கிட்டிருப்பேன் நான். ஒரு நாள் திட்ட அலுவலர் பொறுப்பிலே இருந்த எங்க மாஸ்டர், பத்து நாள் கேம்ப் ஒன்னு போடணும். பக்கத்து ஊர்களிலே நாம சர்வீஸ் பண்ற மாதிரி ஏதாவது வேலைகள் இருக்கான்னு என்.எஸ்.எஸ். நண்பர்கள் கிட்டே விசாரிச்சிக்கிட்டிருந்தார். அப்போ பக்கத்திலே இருந்த நான் எங்க ஊர்லே பராமரிக்காமே கெடக்குற சின்னத் தெப்பக்குளம் பத்திச் சொன்னேன். அன்னிக்கி மாலையிலே என்னோடவே எங்க ஊருக்கு வந்து தெப்பக்குளத்தை விசிட் பண்ணுன எங்க மாஸ்டர், அந்த முகாமை எங்க ஊரிலேயே நடத்துறதுக்கு முடிவு பண்ணிட்டார். எங்க ஸ்கூல் என்.எஸ்.எஸ். மாணவர்களின் சேவையாலே கவனிப்பாரில்லாமே கெடந்த தெப்பக்குளம் தூர் வாரப்பட்டது. கரையை ஒசத்திட்டாங்க. படிக்கட்டுகள் செம்மையாயிட்டது. நிறைவு விழாவிலே எங்க ஊர்ப் பெரியவங்க என்.எஸ்.எஸ். மாணவர்களின் சேவையை ரொம்பவும் பாராட்டினாங்க. அப்போ எங்க மாஸ்டர் என்னை மேடைக்கிக் கூப்பிட்டாரு. "இந்தப் பணி நடக்குறதுக்கு மூல காரணமே இந்த மாணவன் தான்"னு என்னை அறிமுகம் பண்ணி வச்சாரு. எங்க கிராமத் தலைவருக்கு ரொம்பச் சந்தோஷம். என்னைப் பாராட்டிப் பக்கத்தில் நிறுத்தி, எங்க மாஸ்டரையும் கூட நிக்கச் சொல்லி போட்டோ எடுக்கச் சொன்னாரு. என்.எஸ்.எஸ். திட்டத்திலேயே சேராத எனக்குக் கெடைச்ச அந்தப் பெருமையை நெனச்சிப் பூரிச்சிப் போயிட்டேன் நான்.

- ஆர். பாலமுரளி கிருஷ்ணா.



யோகாசனங்களை செய்து காட்டி போட்டோவும் எடுக்க ஏற்பாடு செஞ்சாங்க. - ஆர்.எஸ். கிேதாராணி.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கான யோகாசனப் போட்டி ஒன்றுக்கு எங்க நகரின் 'லயன்ஸ் கிளப்' அமைப்பு ஏற்பாடு பண்ணி, முறையான அறிவிப்பும் கொடுத்தாங்க. என்னுடைய கிளாஸ் டீச்சர் அந்தப் போட்டியில் கலந்துக்க என்னை செலக்ட் பண்ணினப்போ, எனக்கென்னவோ மலைப்பா இருந்தது. வேண்டாம் என்று டீச்சரிடம் சொன்னேன். ஆனா எங்க உடற்கல்வி டீச்சர் எனக்குத் தைரியம் சொன்னாங்க உற்சாகமா துணிவா இருக்க போதுமான அளவுக்கு பேசி என்னை போட்டியிலே கலந்துக்க இணங்க வச்சிட்டாங்க. நல்ல முறையில் பயிற்சியும் தந்தாங்க. போட்டி நடைபெற்ற போது யோகாசனத்துக்கு ஏத்த என்னுடைய உடல்வாகு எனக்கு ரொம்ப உதவியா இருந்துச்சு. எங்க டீச்சர்கள் எதிர்பார்த்தபடியே நகரப்பள்ளி மாணவிகளுக்கான போட்டிகளில் எனக்கே முதற் பரிசும் பாராட்டுப் பத்திரமும் கெடைச்சது. நான் வெற்றி பெற்றதா அறிவிப்பு செய்த போது அதை என்னால் நம்பவே முடியலே. மறுநாள் காலை நான் பரிசுகளோடு தலைமை ஆசிரியரைச் சந்திச்சப்போ என்னைப் பாராட்டினாங்க. என்னுடைய சிநேகிதிகளெல்லாம் என்னை கைகுலுக்கி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தாங்க. அன்றைக்கு பள்ளி அரங்க மேடையில் தலைமை ஆசிரியை எல்லோருக்கும் முன்னாடி என் திறமையை எடுத்துச் சொன்னதோடே, சில யோகாசனங்களைச் செய்து காட்டவும் சொன்னாங்க. அதோடு அந்தப் பயற்சி எல்லாவற்றையும் போட்டோவும் எடுக்குறதுக்கு ஏற்பாடு பண்ணினது எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சியைத் தந்தது. மறக்க முடியாத ஆனந்த அனுபவம் அது.

- ஆர்.எஸ். கீதாராணி.

பேட்டி, படங்கள் :
குரு. சீனிவாசன்.

பொறாமை தந்த பரிசு!

பொன்னன் ஒரு மீனவன். ஒருநாள் அவன் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றான். நடுக் கடலில் வலையை வீசினான். எடுக்கும் பொழுது நிறைய மீன்கள் கிடைத்தன. ஒவ்வொன்றாய் எடுக்கும் போது ஒரு மீன் மட்டும் அதிகமாகத் துள்ளியது.

''ஐயா மீனவரே, என்னை விட்டு விட்டால் உங்களுக்கு ஓர் அதிசயப் பரிசைத் தருவேன்'' என்று கெஞ்சியது மீன்.

''என்ன அது?'' எனக் கேட்டான் பொன்னன்.

''என்னிடம் மீன் தேவதை விட்டுச் சென்ற ஒரு சிப்பி இருக்கிறது. நாம் என்ன கேட்கிறோமோ அதை அது தரும்.''

''உண்மையாகவா!'' என்று பொன்னன் வியப்புடன் கேட்டான்.

''நிச்சயம் என்னை நம்புங்கள். நான் சென்று சிப்பியை எடுத்து வருகிறேன். உங்களுக்கு என் வார்த்தையில் நம்பிக்கை இல்லையென்றால், நான் வரும் வரை என் மனைவியைப் பிடித்து வைத்து இருங்கள்'' என்றது மீன்.

பொன்னன் சம்மதித்தான்.

பொன்னன், மனைவி மீனை வைத்துப் பிடித்துக் கொள்ள, கணவன் மீன் மட்டும் கடலுக்குள் சென்றது. சற்று நேரத்தில் திரும்பி வந்தது. ''இதோ சிப்பி. இதற்கு சக்தி மூன்று முறைதான். ஏற்கெனவே இரண்டு முறை நான் பயன்படுத்தி விட்டேன். அதனால் இன்னும் ஒரே ஓர் முறை தான் இதைப் பயன்படுத்தலாம்'' எனக் கூறியது மீன்.


பொன்னன் அதைப் பெற்றுக் கொண்டான்.


''ஐயா ஏராளமான மீன்கள் உங்கள் வலையில் உள்ளனவே. அவைகளையும் விட்டு விடுங்களேன்'' எனக் கெஞ்சியது மீன்.

''நீ சொல்வது உண்மையானால் விட்டு விடுகிறேன். அதுவரை இங்கேயே இரு'' என்று கூறிய பொன்னன், ''சிப்பியே பொற்காக தா'' என்று கேட்டான். அடுத்த நிமிடம் பொற்காசுகள் கொட்டின. பொன்னன் மகிழ்ந்து தான் பிடித்த மீன்களை எல்லாம் கடலில் விட்டு விட்டு வேக வேகமாகப் படகைச் செலுத்தினான்.

திடீரென்று காற்று நின்று விட படகு நகரவில்லை. பொற்காசுகளோ குவிந்து கொண்டே இருந்தன. அதை நிறுத்தி விட்டால் இன்னொரு முறை பயன்படுத்த முடியாது என்பதை எண்ணிப் பார்த்த பொன்னன் அப்படியே வேகவேகமாகத் துடுப்புப் போட்டான். காற்று வீசாததால் படகு மிக மெதுவாகவே நகர்ந்தது. இதற்குள் படகு முழுவதும் பொற்காசுகள் குவிந்து படகு நீருக்குள் மூழ்கத் தொடங்கியது. அப்பொழுதும் பொற்காசுகள் கொட்டுவதை நிறுத்த மனமில்லாத பொன்னன் துடுப்பைத் தவற விட்டான். பொற்காசுக் குவியல் முகத்தையே மூடி விட வேறு வழி இல்லாது ''போதும் நிறுத்து'' என்றான். பொற்காசு கொட்டுவது நின்றது. இருந்தும் அதனால் எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. பொற்காசுக் குவியலின் கனத்தால் படகு வேகமாக மூழ்கி விட்டது! பொறாமையால் பொன்னன் தனது முடிவைத் தானே தேடிக் கொண்டான்.

– கே. யுவராஜ்





தென்னம் பிள்ளை!

அம்மாவின் கண்களில் நீர் நிறைந் தது.

''என்னால பத்துப் பாத்திரம் தேய்க் கவே முடியறதில்லே சங்கர். கைவிரல் எல்லாம் தேஞ்சு போச்சு. அப்பா இல்லாத உன்னை இத்தனை வருஷமும் காப் பாத் திட்டேன். உனக்குப் படிக்க முடிய லேன்னா, ஏதாவது ஒரு கைவேலை யைக் கத்துக்க. அலி இரும்புக் கடையில் கணக் கெழுத பையன் வேணுமாம். வேலாயுதத்தின் மளிகைக் கடைக்கு நாணயமான சிறுவன் தேவை யாம். டெய்லர் நடேசன் கிட்டே, தையல் கத்துக்க ஒரு பையன் வேணுமாம். வேலை செஞ்சு சம்பாதிக்கக்கிட்டே ஒரு தொழி லையும் கத்துக்கலாம். இப்போ சம்பளம் குறைச்சலா இருந்தா லும் பின்னால் இந்த அனுபவத்தை வைச்சு நீயே தனியா தொழில் செஞ்சு பிழைச்சுக்கலாம். என்னைக் காப் பாத்தி நீயும் வாழலாம் சங்கர்'' என்று அழு தாள் அம்மா.

சங்கரின் மனம் இரங்கவில்லை. ஊர் சுற்ற வெளியே கிளம்பிவிட்டான். அவன் மாலை யில் திரும்பி வந்தபோது அம்மா படு கிடையாகப் படுத்துக் கிடந்தாள். சமைக்க வில்லை. அவளால் முடிய வில்லை. காய்ச் சல் கொதித்தது.


நிலைமையின் விபரீதத்தை அப் பொழுது தான் சங்கர் உணர்ந்தான். பசி பறந்து விட்டது. அம்மாவை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போக, காசு ஏதாவது கிடைக்குமா என்று வீட்டை அலசிப் பார்த் தான். பைசா காசு கூடக் கிடைக்கவில்லை. அம்மா, வீட்டு வேலை செய்து வந்த இரண் டொரு வீடுகளில் சென்று கடன் கேட்டுப் பார்த்தான். ''உங்கம்மாவால் இரண்டு மாசமாகவே சரியாக வேலைக்கு வர முடிய வில்லை. இருந்தாலும் நாங்கள் மூன்று மாத சம் பளத்தை ஏற்கெனவே கடனாகத் தந்து இருக்கிறோம்'' என்று அவர்கள் கைவிரித் தனர்.

சங்கர் கலங்கிப் போனவனாகத் திரும் பிக் கொண்டிருந்தான். வழியில் தேங் காய்க் கடை சுக்கூர்பாய் அவனை அழைத்தார்.

''தம்பி உங்க வீட்டுல இருக்கிற பத்து தென்னை மரங்களும் காய்க்க ஆரம்பிச் சிடுச்சின்னு அம்மா சொன்னாங்க. போய்ப் பார்த்தேன். பறிக்க ஏதுவா தேறி இருந்தது. மொத்தம் அறுபது காய் பறிச்சேன். இந்தா முப்பது ரூபாய். இதை அம்மாவிடம் கொடு'' என்று ரூபாயைக் கொடுத்த சுக்கூர், ''ஏன் தம்பி, இந்த மரங்களெல்லாம் உன்னுடைய ஐந்தாவது பிறந்தநாள் அன்று வைச்சதாமே! அவைங்க கூட காய்ச்சு, வைச் சவங்களுக்குப் பயன்தர ஆரம்பிச்சிடிச்சு. ஆனால் பெற்ற பிள்ளையான நீ, அம்மா வின் கண்ணீரைத் துடைக்காது இன்னமும் பொறுப்பற்ற பிள்ளையாவே இருக்கியே?'' என்று கேட் டார்.

வைத்த தென்னம் பிள்ளைகள் கூடப் பயன் தரத் தொடங்கி நன்றிக் கடனைத் தீர்க்க ஆம்பித்து விட்டன! பெற்றபிள் ளையான நாம் இனியும் ஊர் சுற்றலாமா? சங்கர், நடேசனின் தையல் கடைக்கு தொழில் கற்று வரக் கிளம்பினான்.

– பா. ஜெயக்குமார், வந்தவாசி.



பிளேடு எப்படி உருவானது?

கற்கால மனிதர்களுக்கு ஷேவ் செய்து கொள்ளும் வழக்கம் உண்டா? ஏன் இல்லாமல், தாராளமாக உண்டு. பின்னே ஏன் அவர்கள் முகம் கரடு முரடாக இருப்பதாக ஓவியங்களில் வரையப் படுகிறது என்கிறீர்களா? சுறாமீனின் பல், வழவழப்பாக்கப்பட்ட சிக்கி முக் கிக் கல் இவற்றை வைத்துக் கொண்டு ஷேவ் செய்து கொண்டால், முகம் என்ன பள பளவென்றா மின்னும்?

ரேஸர் கண்டுபிடிக்கப்படாத அந் நாளில் வடஅமெரிக்காவைச் சேர்ந்த சில பழங்குடியினர் ஷேவ் செய்து கொண்ட விதத்தைக் கேட்டால் நமக்கு மயிர்கூச் செரியும். தங்கள் விரல்களாலேயே முகத் திலுள்ள ரோமங்களை ஒவ்வொன்றாக நீக்குவார்களாம்! எப்படித்தான் வலி யைத் தாங்கினார்களோ?

தாமிரம், தங்கம் ஆகிய உலோகங் களால் தகடுகள் செய்யத் தொடங்கிய பின், அவைகளை மெலிதாகத் தேய்த்து அவற்றால் சவரம் செய்து கொள்ள ஆரம் பித்தனர். சக்ரவர்த்தி நெப்போலியனுக்கு ஷேவிங் என்றாலே அலர்ஜியாம். இருக் காதா என்ன? ஷேவிங்கிற்கு ஆகும் நேரத் தையும், அதில் உள்ள அபாயத்தையும் நோக்கினால் நெப்போலியன் பயம் அர்த் தமற்றது என்று சொல்ல முடியாது இல் லையா?

ரோமானியர்கள்தான் முதன் முதலில் ஷேவிங் சம்பந்தப்பட்ட உருப்படியான ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்தனர். வெதுவெதுப்பான நீரில் நனைக்கப்பட்ட முடி, தன் நீளத்தைப் போல மூன்றி லொரு பங்கு அதிகம் நீள்கின்றது என்ப தும், அத்தகைய ரோமத்தை ஷேவ் செய் வது சுலபமானது என்பதும்தான் அந்தக் கண்டுபிடிப்பு!

சரியான ரேஸரைக் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணர்ந்திருந்தனர். எந்த உலோகம் உல கின் எந்த மூலையில் கண்டுபிடிக்கப்பட் டாலும், அது ஷேவிங்கிற்கு ஏற்றதா என்று உடனே பரிசோதிக்கப்பட்டது. எஃகு ஓரளவிற்கு ஷேவிங்கிற்கு உகந்தது என்று உணர்ந்தனர். ஆனாலும் பிளேடின் ஷேவ் செய்யப்படும் பக்கம் அடிக்கடி வளைந்து தொல்லை கொடுத்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கி லாந்திலுள்ள ஷெஃபீல்ட் என்னும் இடத் திலும், ஜெர்மனியிலும் எஃகில் பிளேடு கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப் பட்டன.

உற்பத்தி செய்யப்பட்ட பிளேடுகள் கூர்மையாக இருந்ததால் ஷேவிங்கை முன்பை விட விரைவாகச் செய்து கொள்ள முடிந்தது. ஆனால் ஷேவிங் கால் ஏற்பட்ட அபாயங்கள் குறையவில்லை.

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜீன் ஜாக்வெல் பெரட் என்ற கத்தி விற்பவர், நாவிதர் ஒருவரிடம் ஷேவ் செய்து கொண்டு, தோல் வியாதியோடு வீடு திரும்பினார். பாதுகாப்பான ரேஸர்களின் அவசியத்தை உணர்ந்த அவர் தீவிரமாக யோசித்தார். மரத் துண்டுகளுக்கிடையே பிளேடைப் பொருத்தி ஷேவ் செய்து கொள்வது ஓரளவு பாதுகாப்பானது என்பதைக் கண்டுபிடித்தார்.

பிறகு வில்லியம் ஹென்சன் என்ற ஆங்கிலேயர் 1874-ஆம் ஆண்டில் ரேஸர் கைப்பிடியும், பிளேடும் 90 டிகிரியில் இருந்தால் சௌகரியம் என்பதையும் கண்டறிந்தார்.



பாட்டில் மூடிகளைத் தயாரிக்கும் கம்பெனி ஒன்றில் விற்பனைப் பிரதிநிதியாகப் பணியாற்றி வந்தவர் ''கிங்காம்ப் கில்லெட். மக்கள் பாட்டில் மூடிகளை அடிக்கடி தொலைத்து விட்டு வேறு மூடிகள் வாங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்த கில்லெட்டிற்கு ஒரு ஐடியா வந்தது. அடிக்கடி கூர் தீட்டப்பட வேண்டிய பிளேடுகளுக்குப் பதில் ஒருமுறை உபயோகித்தவுடன் எறிந்துவிடக் கூடிய பிளேடுகளை ஏன் தயாரிக்கக் கூடாது? என்பதுதான் அது. விஞ்ஞான அறிவு நிரம்ப இல்லாத காரணத்தால் வில்லியம் நிக்கர்சன் என்ற விஞ்ஞானியையும் தன் முயற்சிக்குக் கூட்டு சேர்த்துக் கொண்டார். டிஸ்போசபிள் பிளேடுகள் பெருமளவில் தயார் செய்யப்பட்டன. வீட்டிலேயே ஷேவ் செய்து கொள்வது, தினசரி ஷேவ் ஆகிய பழக்கங்கள் பரவலானது இந்தக் கால கட்டத்தில்தான்.

1928-ல் ஜோசப் ஸ்கிக் என்ற ஓய்வு பெற்ற ராணுவ கர்னல் எலெக்ட்ரிக் ஷேவரைக் கண்டுபிடித்தார். இதனால் க்ரீம், ப்ரஷ் போன்றவற்றை உபயோகிக்கும் அவசியம் குறைந்தது. இப்போது இரட்டை பிளேடு ரேஸர்கள் கூடக் கிடைக்கின்றன. இன்னும் ரேஸர்களில் என்னென்ன மாறுதல்களெல்லாம் ஏற்படப் போகிறதோ?

போனசாக ஒரு தகவல். திருப்பதியில்இதுவரை மொட்டை அடிக்கக் கத்திகளையே பயன்படுத்தி வந்தனர். இப்போது டிஸ்போசபிள் பிளேடுகளைக் கொண்டு மொட்டை அடிக்கும் யோசனை ஏற்கப்பட்டு, இதற்கென வெளிநாட்டு ரேசர்களும் பிளேடுகளும் இறக்குமதி செய்யப்பட உள்ளன. திருப்பதியைத் தொடர்ந்து பழனிக்கும் இது அறிமுகமாகலாம்.



- த. அ. மு.



உன் கண்ணுக்கு மட்டும்!

செல்வன் மிகவும் அறிவுடையவன். நல்லவனுக்கு நல்லவனாகவும், கெட்டவனுக்குக் கெட்டவனாகவும், நடந்து கொள்வான். மாலையில் ஒரு மளிகைக் கடையில் வேலை பாத்தபடி படித்தும் வந்தான்.

ஒருநாள் செல்வன் கடைத் தெருவிற்குச் சென்று கொண்டிருந்தான். தெருவோரம் சிறு கூட்டம். கூட்டத்திற்கு நடுவே ஒரு தேன் வியாபாரி. தேனை விற்றுக் கொண்டிருந்தான். செல்வன் தேனைச் சிறிது கையில் தடவி ருசி பார்த்தான். வெல்லம் கலப்படம் செய்யப்பட்டுள்ளது தெரிந்தது. ''ஏன் இப்படிக் கலப்படம் பண்ணி மக்களை ஏமாற்றுகிறாய்?'' என்று கேட்டான் செல்வன்.

தேன் வியாபாரி, ''உன் கண்ணுக்கு மட்டும் வெல்லம் தென்படுகிறதா?'' என்று கேலியாகக் கேட்டுச் சிரித்தான்.

செல்வனுக்குக் கோபம் வந்தது. இவனுக்கு எப்படியாவது பாடம் கற்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

சில நாட்கள் சென்றன. செல்வன் வேலை செய்து வந்த அதே மளிகைக் கடைக்கு தேன் வியாபாரி வந்தான். கடைக்கு வந்த தேன் வியாபாரியைப் பார்த்த செல்வன், ''என்ன வேண்டும்? என்று கேட்க, அதற்கு அவன் ''இரண்டு லிட்டர் மண்ணெண்ணெய் வேண்டும்'' என்றான்.

அவன் கையில் வைத்திருந்த கேனை வாங்கிக் கொண்டு, உள்ளே போய் அவன் கேட்ட அளவு மண்ணெண்ணெயை ஊற்றி வந்து கொடுத்தான் செல்வன். பணத்தைக் கொடுத்து விட்டு, மண்ணெண்ணெயை வாங்கிச் சென்றான் தேன் வியாபாரி. மனைவியிடம் மண்ணெண்ணெயைக் கொடுத்தான். அவள் ஸ்டவ்வில் ஊற்றிப் பற்ற வைத் தாள். ஆனால் அது பற்றிக் கொள்ள மறுத்தது. எப்படிப் பற்றிக் கொள்ளும்? செல்வம்தான் நீர் கலந்து கொடுத்திருந்தானே? மனைவியிடம் திட்டு வாங்கிக் கொண்டே தேன் வியாபாரி செல்வனுடைய கடைக்கு வந்து விபரத்தைச் சொன்னான்.

செல்வன், ''என்ன! மண்ணெண்ணையில் நீர் கலப்படமா! எங்கே அதிலிருந்து நீரைச் சிறிது எடுத்துக் காட்டு பார்க்கலாம்? உன் கண்ணுக்கு மட்டும் நீர் தெரியறதா?'' என்றான்.

தேன் வியாபாரி தலை குனிந்தான். தன் தவறையும் உணர்ந்தான். ''நாம் ஒருவனை ஏமாற்றினால், நம்மை ஒருவன் ஏமாற்ற இருப்பான் என்பதை மறக்காமல் இருந்து வியாபாரம் செய்யுங்கள்'' என்று அறிவுரை கூறிய செல்வன் நல்ல சுத்தமான மண்ணெண்ணெயைக் கொடுத்து அனுப்பினான்.

- ஆ. செல்வராஜ், மாத்தூர்.

அம்மாவே இப்படித்தான்!

கௌதம் மனம் புழுங்கினான்.

இந்த அம்மா ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? எப்போதுமே அண்ணன் பாலா மீது அம்மாவுக்குத் தனி அன்புதான்.

பள்ளி விட்டு வந்ததும், ''பாலா முகம் கழுவு. பாலா டிரஸ் மாத்து. பாலா நாளைக்கு என்ன ஹோம்வொர்க்?'' என்று எப்போதும் வீட்டில் பாலா... பாலா என்ற குரல்தான். பாலா மீதுதான் அம்மாவுக்கு என்னமாய் ஓர் கரிசனம்!


நானும்தான் இருக்கிறேன் ஒரு நாளாவது என்னைக் குளிக்க வைத்தோ, ஆசையாய்த் தலைசீவிப் பவுடர் அடித்தோ, அன்பாய் சாப்பாடு ஊட்டியோ பள்ளிக்கு அனுப்பியிருக்கிறார்களா?

இத்தனைக்கும் படிப்பில் பாலாவை விட நான்தான் கட்டி. வகுப்பில் எப்போதும் முதல் ரேங்க் எடுத்தும் இந்த அம்மாவின் கவனத்தை என்னால் கவர முடியவில்லையே!

அம்மாவும் சரி அப்பாவும் சரி எப்போதும் இந்த பாலாவைத்தான் கவனிக்கிறார்கள். அவனுக்குத்தான் பாடம் சொல்லித் தருகிறார்கள்.

என்ன கௌதம் படிச்சிட்டியா? ஹோம் ஒர்க் எல்லாம் முடிச்சுட்டாயா?' என்று ஒரு பேச்சுக்காகவாவது என்னை எப்போதாவது கேட்டிருக்கிறார்களா?





''ஏன் சார் இப்படி அடிக்கிறீங்க?''
''ஏன் லேட்டுன்னா, ரயில் பஞ்சராயிடிச்சுன்னு சொல்றான்!''

- சீர்காழி வி. ரேவதி

நினைக்க நினைக்க மிகவும் வேதனையாக இருந்தது கௌதமிற்கு.

காலாண்டுத் தேர்வு மதிப்பெண் பட்டியலைக் கையெழுத்துக்காக அப்பாவிடம் கொடுத்தான் கௌதம். வாங்கிப் பார்த்த அப்பாவுக்கு ஒரே அதிர்ச்சி. எல்லாப் பாடங்களிலும் பெயில்! எல்லாம் ஓரிலக்க மதிப்பெண்கள்.

தவறாமல் முதல் மதிப்பெண் பெறும் கௌதமா இப்படி?

''என்ன கௌதம் இது?'' ஆச்சரியமாய்க் கேட்ட தந்தையைப் பொருட்படுத்தாமலே நின்றிருந்தான் கௌதம். அவன் முகத்தில் எந்தவிதமான சலனமும் இல்லை.

'நடந்தது என்ன' என்பதை சற்று நேரத்திலேயே யூகித்து விட்டாள் புத்திசாலியான அம்மா.

அன்று மாலை தோட்டத்தில், செடிகளுக்கு நீரூற்றுவதற்காக கௌதமையும் அழைத்துக் கொண்டு சென்றாள் அம்மா.

தோட்டத்தில் அம்மாவின் செய்கை வேடிக்கையாய் இருந்தது கௌதமிற்கு.

பூச்சி அரித்து, நலிவுற்று வளர்ச்சி குன்றியிருக்கும் செடிகளையெல்லாம் விட்டு விட்டு, செழித்து வளமாய் வளர்ந்து கொண்டிருக்கும் செடிகளாகப் பார்த்துப் பார்த்து பூச்சி மருந்து தெளித்து, உரம் வைத்துக் கொண்டு சென்றாள்.

'களுக்'கென்று சிரித்து விட்டான் கௌதம்.

''என்ன கௌதம்? செடிகளுக்கு நீர் ஊற்றாமல் சிரித்துக் கொண்டிருக்கிறாய்?''

''ஒன்றுமில்லேம்மா... நீங்கள் செய்வதைப் பார்த்தால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அதான்...!''

''என்னது...!'' ஒன்றும் புரியாததைப் போல் கேட்டாள் அம்மா.

''பூச்சி அரித்து வளர்ச்சி குன்றியவைகளை விட்டு விட்டு வளமாய் வளரும் செடிகளாய்ப் பார்த்துப் பார்த்து மருந்து தெளித்து உரம் வைக்கிறீர்களே! அதை நினைத்துத்தான்!''

''ஓ, அதுவா... இந்த வளமான செடிகள் நான் தங்களைக் கவனிக்கவில்லை என்று தவறாக எண்ணித் தங்கள் வளர்ச்சியைக் குறைத்துக் கொண்டு விடக் கூடாதே?''

''அது எப்படிம்மா முடியும்...?''

''ஏன் முடியாது? அறிவு வளர்ச்சி குன்றிய அண்ணனைக் கவனிப்பதைப் போலத் தன்னையும் கவனிப்பதில்லை என்ற முடிவில் காலாண்டுத் தேர்வுகளை வேண்டுமென்றே அலட்சியமாய் எழுதி, முதல் மாணவனாக வரும் நீ கடைசி மாணவனாக மாற முடிந்துள்ள போது, இந்த வளமான செடிகளாலும் ஏன் தங்கள் வளர்ச்சியைக் குறைத்துக் கொள்ள முடியாது?''


தாயின் வார்த்தைகளைக் கேட்ட கௌதமிற்கு நெஞ்சில் 'சுரீர்' என்றது.

பூச்சி அரித்து, நலிவடைந்து, வளர்ச்சி குன்றிய செடிகள் மீது தனிக் கவனம் செலுத்துவது இயல்புதானே. அதுதானே முறையானதும் கூட. பெற்றோரின் இந்த அணுகுமுறையைத் தவறாக எடுத்துக் கொண்டு, நம்மை நாமே அழிக்கத் துணிந்தது எவ்வளவு மடத்தனமானது? எல்லாவற்றிற்கும் மேலாக பாரபட்சமில்லாத, தூய்மையான பெற்றோரின் அன்பையே தவறாகக் கருதி நம்மைக் குறைத்துக் கொண்டு விட்டோமே என்று நினைத்த போது மனம் கூசித் தலைகுனிந்து நின்றான் கௌதம்.

''என்ன கௌதம் என் வேலை முடிந்து விட்டது. போகலாமா?'' என்றாள் அம்மா.

''போகலாம்மா. இனி என் வேலை தான் பாக்கி இருக்கு. இன்றிலிருந்து நானும் அண்ணனைக் கவனிப்பதில் உங்களுக்கு உதவியாக இருப்பேன்'' என்றான் மனத் தெளிவோடு கௌதம்.

- மு. நடராசன்



பகுபாலிக்குப் பெருவிழா!

உலகம் முழுவதும் பல நாடுகளில் பிரும்மாண்டமான தெய்வச் சிலைகள் இருக்கின்றன. மதங்கள் கால வெள்ளத்தால் தேய்ந்து மறைந்து போன காரணத்தால் அவைகளில் பல இன்று வரலாற்றுச் சின்னங்களாகவே நிலைத்து விட்டன. இப்படி அல்லாது, இன்றும் மக்களால் வணங்குவதற்கு உரிய பிரும்மாண்டமான சிலைகள் ஒரு சில உள்ளன. அவைகளில் மிக உயரமான சிலைதான் நமது நாட்டில் கர்நாடக மாநிலத்தில் அமைந்துள்ள கோமதேஸ்வரர் சிலை.

இந்தப் புனிதமான சிலைக்கு ஒரு சுவையான வரலாறும் உண்டு. இப்பொழுது பிரச்னைக்கு ஆளாகியிருக்கும் அயோத்தி என்ற இராஜ்யத்தை ஒரு காலத்தில் விருஷபநாதர் என்ற மன்னர் நீதி நெறி தவறாது ஆண்டு வந்தார். இவருக்கு இரு மனைவியர். பெரிய மனைவிக்கு நூறு பிள்ளைகள். மூத்தவன் பெயர் பரதன். இளைய மனைவிக்கு இரண்டு குழந்தைகள். மூத்தவன்தான் பகுபாலி.

அரச குமாரர்களுக்குக் கல்வி போதிப்பது பெரிய பிரச்னையாக இருக்கவே, அரசர் தானே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பரதனும், பகுபாலியும் மிகச் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனர். ஒருமுறை, மனித வாழ்க்கை என்பது எந்த அளவுக்கு நிலையில்லாதது என்பதை அறியும் வாய்ப்பு அரசருக்குக் கிடைத்தது. அவர் கண் முன்னால், அவையில் நடனமாடிக் கொண்டிருந்த ஒரு மங்கை, நடனமாடிய நிலையிலேயே திடீரென்று மரணமடைந்தாள். அரசருக்கு வாழ்க்கை வெறுத்தது. அயோத்திக்கு மன்னனாக பரதனையும்,



பதன்புரா என்ற சிறு நகரத்திற்கு மன்னனாக பகுபாலியையும் ஆக்கிவிட்டு மன்னர் உலகைத் துறந்து தவம் செய்யக் கிளம்பி விட்டார்.

தந்தையைப் போலவே நீதி நெறி தவறாது அரசாண்ட பரதனுக்கு காலப் போக்கில் பல நாடுகளையும் வென்று சக்ரவர்த்தியாகும் பேராசை எழுந்தது. படையெடுத்து சுற்றுப்புற அரசுகளை அடிமைப் படுத்தினான். தம்பி பகுபாலி ஆண்ட பதன்புரா மட்டுமே பாக்கி. சக்ர வர்த்தி ஆகவேண்டும் என்ற பேராசை பரதனின் சகோதர பாசத்தைக் கூட வென்று விட்டது!

பகுபாலி மிகச் சிறந்த வீரன். கம்பீரமான உருவம் கொண்டவன். அண்ணனிடம் பாசம் மிக்கவன். நீதி நெறி தவறாது பதன்புராவை ஆண்டு வந்தான். போரை வெறுப்பவன்.

பரதன் வந்து பதன்புராவை முற்றுகை இடவே பகுபாலி வேறு வழியின்றி அண்ணனைக் காண வந்தான். சண்டை வேண்டாம் என்றும், அண்ணன் விரும்பினால் அவன்தானே பதன்புராவைக் கொடுத்து விடுவதாகவும் கூறினான். தம்பியின் யோசனையை பரதன் ஏற்கவில்லை. கத்தி முனையிலேயே வெற்றியால் பதன்புராவை ஏற்கத் துடித்தான். நூற்றுக் கணக்கான மனித உயிர்களைப் பலி கொடுக்க விரும்பாத பகுபாலி அண்ணனுடன் பேசி, இருவரும் மட்டும் போரிட இணங்க வைத்தான். பரதனும், பகுபாலியும் மட்டும் சண்டையிட்டனர். ஐம்பத்தெட்டு வகைச் சண்டைகள் நடந்தன. எல்லாவற்றிலும் பரதனை வென்று வெற்றிவீரனாக பகுபாலியே சிறந்தான். பரதன் தம்பிக்கு அடிமையானான். அதை விரும்பாத பகுபாலி, அண்ணனையே அரசனாக்கி விட்டு துறவு பூண்டு தவம் புரியக் காட்டுக்குச் சென்றான். கடுந்தவம் புரிந்து முக்தியடைந்து கோமதேஸ்வரராகி சமண சமயத்தின் 24வது தீர்த்தங் கராக உயர்வு பெற்றார்.

பேரரசனாகத் திகழும் வாய்ப்பும் வீரமும் பெற்றிருந்தும் எல்லாவற்றையும் துறந்து போற்றுதற்கு உரிய



தெய்வமாகிவிட்ட கோமதேஸ்வரருக்கு, இதுவரை யாருமே செய்யாத அளவுக்கு பிரம்மாண்டமான சிலை ஒன்றைச் செய்ய சவுண்டராயர் என்ற பக்தர் விரும்பினார். அவர் தலவணபுரத்தை ஆண்ட கங்க வம்ச மன்னர் ரச்சமல்லனின் அமைச்சர்.

ரத்தினகிரி என்ற மலையைத் தேர்ந்தெடுத்து அதிலேயே பிரும்மாண்டமான கோமதேஸ்வரின் சிலை, தவம் செய்ய நின்ற நிர்வாண திருக்கோலத்தில் பாம்பும் செடி கொடிகளும் பின்னிய நிலையில் அமைக்கப்பட்டது.

சிலைக்கு அபிஷேகம் செய்து பிரதிஷ்டை முடிந்த பிறகு பூஜை செய்ய வேண்டியதுதான். சவுண்ட ராயர் சிலையின் பிரதிஷ்டைக்கு ஒரு நல்ல நாளைக் குறித்து சுற்றுப்புற மன்னர்களுக்கு எல்லாம் அழைப்பு அனுப்பினார். லட்சக் கணக்கில் மக்களும், அரசர்களும் திரண்டனர். சிலைக்கு அபிஷேகம் செய்ய பிரும்மாண்டமான அண்டாக்களில் பால் இரத்தின கிரிக்குக் கொண்டு வரப்பட்டது. பால் அபிஷேகம் தொடங்கியது. ஆனால் அத்தனை பாலும் வழிந்து பிரும்மாண்டமான சிலையின் இருப்புவரை மட்டுமே வந்துது நின்றன! பாதம் வரை அபிஷேகம் செய்தபிறகே பூஜைகளைத் தொடங்க முடியும். சவுண்ட்ராயர் துடித்துப் போனார்.

அந்த நிலையில் குடுகுடு கிழவி ஒருத்தி சிறுகிண்ணதில் பாலை நிரப்பிக் கொண்டு ஏற முடியாது ஏறி ரத்தினகிரி மலை உச்சிக்கு வந்து, கிண்ணத்தைக் கொடுத்து அபிஷேகம் செய்ய வேண்டினாள். எல்லோரும் சிரித்தனர். ''அண்டா அண்டாவாகப் விட்ட பால் எல்லாம் சிலையின் இடுப்புவரை மட்டுமே வழிந்து நின்று விட்டன. இவளுடைய ஒரு சின்னக் கிண்ணப் பால் நெற்றிவரை கூட வராதே!'' என்று கேலி செய்தனர்!


சவுண்டராயர், நகைப்புக்கு இடையே அந்தக் கிண்ணத்துப் பாலை வாங்கி அபிஷேகம் செய்யச் சொன்னார். என்ன அதிசயம்! அந்தச் சின்னக் கிண்ணத்துப் பால், பிரும்மாண்டமான கோமதேஸ்வரின் தலையில் இருந்து

இடுப்பில் வழிந்து, விடுவிடுவென்று கால் வரை ஓடி, பாதங்களை அலம்பித் தரையிலும் இறங்கி நின்றது!

''கவுண்டராயரே உண்மையான அன்புக்கும் பக்திக்கும் ஈடு இணை ஏதுமில்லை என்பதை இனியாகிலும் உணர்வீர்!'' என்று அசரீரி கேட்டது.

பகுபாலியின் அழகுமிக்க பிரும் மாண்டமான சிலை நிறுவப்பட ஆண்டு கி.பி. 981. இதுநிறுவப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன. இருந் தும் இந்த அழகுச் சிலையின் கம்பீர மான உருவ அமைப்பும் முகத்தில் தவழும் அமைதியும் தனிச் சிறப்புடன் இருக்கின்றன. இது ஒரே கல்லில் வடிக்கப்பட்டது. உயரம் 57 அடி. இது அமைந்துள்ள சிரவண பெலகுலா என்ற ஊர், கர்நாடக மாநிலத்தின் ஹாசன் மாநிலத்தில் உள்ளது. வானத்தை இடித்தபடி, இயற்கைச் சுழல்களுக்கு நடுவே நிற்கும் இந்த தெய்வீகச் சிலை சமணர்களுக்கு ஒரு புனிதத் தலம். கோமேதேஸ்வர ருக்கு வேணூறு, கற்கலா, சிரவணகுடா, பஸ்தி ஹள்ளி, தர்மஸ்தலா போன்ற இடங்களில் சிலை இருந்தாலும், சிரவணபெலகுலாவில் அமைந்துள்ள இதுவே பல சிறப்புகள் கொண்டதாகக் கருதப்படுகிறது.

இந்தப் புனிதமான பகுபாலிக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஓர் முறை புனித அபிஷேகத் திருவிழா நடைபெறு கிறது. சிலையின் உயரத்திற்கு மேல் பிரும்மாண்டமான சாரங்கள் கட்டப் பட்டு பால், தயிர், பன்னீர் மற்றும் 108 நறுமணப் பொருள்களால் அபிஷேகம் செய்கிறார்கள். 16 நாட்கள் நடை பெறும் இந்தத் திருவிழாவை ''மகா மாஸ்திகாபிஷேகம்'' என்கிறார்கள். உலகெங்கும் இருந்து சமண சமயத்தைச் சார்ந்த பெரியோர்களும், மக்களும் இலட்சக் கணக்கில் கூடு கிறார்கள். இந்த ஆண்டு டிசம்பர்மாதம் 2 ஆம் நாள் முதல் 18 நாள் வரை இந்த ''மகாமாஸ்திகாபிஷேகம்'' நடைபெற உள்ளது.



பின்வாங்காதவர்!

காந்திஜியும் நேருவும் ஒருமுறை பாதயாத்திரை செய்தனர். வழியில் ஒரு பள்ளம். நேரு, சிறிது தூரம் பின்னால் சென்று ஒரே ஓட்டமாக ஓடி அதைத் தாண்டிக் கடந்து விட்டார். காந்திஜி அப்படிச் செய்யவில்லை. நீளமான மரப்பலகையொன்றைக் கொண்டு வரச் சொல்லி அதைப் போட்டுக் கடந்தார்.

அப்பொழுது நேரு, "தாங்களும் கூட இப்பள்ளத்தைத் தாவித் தாண்டியிருக்கலாமே என்னைப் போல?" என காந்திஜியிடம் கேட்டார்.

"பள்ளத்தைத் தாண்ட நீங்கள் எவ்வளவு தூரம் பின்னால் சென்று ஓடி வந்தீர்கள் தெரியுமா? நான் பின்வாங்க விரும்பவில்லை. இருந்த இடத்திலிருந்தே முன்னேற விரும்புகிறேன்" என்றாராம் காந்திஜி, சிரித்தவாறு!


– ஆர். ஆமினா பீவி, நீடூர்.


ஆழ்கடலின் அதிசயங்கள்



உலகின் மேற்பரப்பில் 71 சதவீதம் கடல்; 29 சதவீதம் நிலப் பரப்பு. கடல்களின் மொத்தப் பரப்பு சுமார் 361 மில்லியன் சதுர கிலோ மீட்டர். இதில் நிறைந்துள்ள நீரின் அளவு சுமார் 1000 மில்லியன் கன கிலோ மீட்டர்.

ஒவ்வொரு நாட்டையும் ஒட்டிய கடற் பகுதிகளை இப்படிப் பிரித்திருக்கிறார்கள்:









சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு, 'பெர்டினாண்டு மெகல்லன்' என்னும் மாலுமி, பசிபிக் பெருங்கடலின் ஆழத்தை ஆராய்ந்தார். அவர் ஒரு பீரங்கிக் குண்டை ஒரு கயிற்றில் கட்டி கடலில் இறக்கினார். அது இப்போதுள்ள அளவுப்படி 360 மீட்டர் சென்றது. அதுதான் பசிபிக்கின் ஆழம் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால், பசிபிக்கின் சராசரி ஆழம் 4214 மீட்டர் என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். கடலின் ஆழம் ஃபாதம் என்ற அளவில் குறிப்பிடப் படுகிறது. ஒரு ஃபாதம் என்பது 1.8 மீட்டர்.

கடலின் ஆழத்தை இப்போது எப்படி கண்டுபிடிக்கிறார்கள்? கப்பலின் அடியில் இருந்து, ஒரு கருவியின் மூலம் ஒலியை எழுப்புகிறார்கள். அந்த ஒலியின் அலைகள் கடலின் அடியில் உள்ள தரையில் மோதி எதிரொலித்து வரும் நேரத்தைக் கொண்டு அதன் ஆழத்தைக் கண்டுபிடிக்கிறார்கள்.




பசிபிக் பெருங்கடலில் உள்ள ஆழமான பகுதி ஒன்றில் எவரெஸ்ட் சிகரத்தை வைத்தால்கூட அது மூழ்கிவிடும். பசிபிக் கடலில் க்வாம் தீவின் அருகே உள்ள இடம்தான் அதிகபட்ச ஆழம். சுமார் 10,924 மீட்டர்.







இதுவரை மனிதன் கடலுக்குள் இறங்கிய மிக ஆழமான இடம் பசிபிக் பெருங்கடலில் இருக்கிறது. 1960 ஆம் ஆண்டு, ஜனவரி 23-இல், ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த பிக்கார்ட் என்பவர், ட்ரையஸ்ட் என்னும் நீர்மூழ்கிச் சாதனம் ஒன்றில் அமர்ந்து, செங்குத்தாக பசிபிக் கடலுக்குள் 10914.3 மீட்டர் ஆழம் இறங்கினார். அவர் இறங்கிய இடம் மெரியானா ட்ரெஞ்ச் எனப்படுகிறது.



எல்லா கண்டங்களின் நிலப்பரப்பையும் சேர்த்தால்கூட பசிபிக் பெருங்கடலின் பரப்புக்குச் சமமாகாது. பசிபிக் என்றால் அமைதி என்பது பொருள்.

கடல் நீரினுள் சூரிய ஒளி புகும்போது, அதிலுள்ள சிவப்பு நிறக் கதிர்களை நீர் கிரகித்து விடுவதால் கடல் நீலநிறமாகத் தெரிகிறது. பொதுவாக, கடலின் நிறம் நீலம்தான் என்றாலும், அது வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு சமயங்களில் மாறுபட்ட நிறங்களுடன் காணப்படுகிறது.






உலகின் உச்சியில் இருக்கிறது ஆர்க்டிக் பெருங்கடல். வடதுருவம் இங்கேதான் இருக்கிறது. ஆர்க்டிக் பெருங்கடலின் நீர் உறையக்கூடியது. ஆனால், இங்கே உறையும் பனிக்கட்டியில் உப்பு இருக்காது. ஏனென்றால், கடல் நீர் உறையும் போது, எல்லா உப்புகளும் அகற்றப்படுகின்றன. இதன் பெரும் பகுதி ஆண்டு முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும்.

செங்கடல், ஆப்பிரிக்காவும் அரேபியாவுக்கும் இடையில் இருக்கிறது. ஏராளமான சிவப்பு நிறமுள்ள நுண்ணிய கடல்தாவரங்கள் நிறைந்து இருப்பதால், நீர் சிவப்பு நிறமாகத் தோன்றும். எனவே, அது செங்கடல் என்று ஆகிறது. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைப்பதுதான் சூயஸ் கால்வாய்.






சீனாவை அடுத்துள்ள கடல் மஞ்சள் கடல் எனப்படுகிறது. மஞ்சள் நதி, லோயஸ் என்னும் இரு ஆறுகள், மஞ்சள் நிற மண்ணை நீருடன் அடித்துக் கொண்டு வந்து, கடலில் கலந்து விடுவதால், அந்த நீர் மஞ்சள் நிறமாகத் தோன்றுகிறது. எனவே, அது மஞ்சள் கடல்.



கருங்கடல் நீரில், கறுப்புநிற இரும்பு சல்பைடு கலந்து, அந்தக் கடலைக் கறுப்பாக்கு கிறது. எனவே அது கருங் கடல்.

பூமியில் இருப்பதைவிட உயரமானதும் நீளமானதுமான மலைத்தொடர்கள் கடலுக்குள் உள்ளன. அட்லாண்டிக் பெருங்கடலுக்குள், உலகிலேயே மிக நீளமான மலைத் தொடர் ஒன்று இருக்கிறது. ஹவாய் தீவு, கடலுக்கு அடியிலிருந்து 10058 மீட்டர் உயரம் உள்ள ஒரு மலையின் உச்சிதான்! கடலுக்குள் ஆறுகள் மாதிரியான விசையுள்ள நீரோட்டங்கள் இருக்கின்றன. இந்த நீரோட்டங்களில், வழக்கமாக உள்ள, உப்பின் அளவும் சீதோஷ்ணமும் மாறுபட்டிருக்கும்.




கடலில் அலைகள் ஏன் எழும்புகின்றன? சந்திரனின் ஈர்ப்பு விசையால், சந்திரனின் மிக அருகிலும், வெகுதொலைவிலுமாக கடலில் இரண்டு இடங்களில் நாள் ஒன்றுக்கு இரண்டு ஏற்ற, வற்றங்கள் ஏற்படு கின்றன. இதனால் கடல்நீர் பொங்கி, நிலப் பரப்பினால் தடுத்து நிறுத்தப்பட்டு, காற்றின் துணையுடன் அலைகளாக எழும்புகிறது.






1883, ஆகஸ்ட் 27-இல், இந்தோனேஷியா வைச் சேர்ந்த 'க்ராக்கடோவா' என்ற எரிமலை வெடித்த போது, கடலில் 41 மீட்டர் உயரத்திற்கு அலைகள் எழுந்தன. இவைதாம் மிக உயரமான அலைகள். இதனால் 36000 பேர்கள் பலியானார்கள்.

1946 ஏப்ரல் 1-இல், ஒரு பூகம்பத்தின் விளைவாக ஹவாய் தீவுகளைச் சூழ்ந்துள்ள கடலில் அலைகள் எழுந்தன. அவை 185 கி.மீ. நீளமும், 16 மீட்டர் உயரமும் இருந்தன!




கடலில் உள்ள உப்பு, பல ஆறுகளால் பல கோடி ஆண்டுகளாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. கடல்நீரில் பலவிதமான உப்புகள் கலந்துள்ளன. ஒரு லிட்டர் கடல் நீரில் சாதாரண உப்பு உள்ளிட்ட 35 கிராம் பலதர உப்புகள் இருக்கின்றன. கடலில் உள்ள சாதாரண உப்பையெல்லாம் எடுத்தால், உலக நிலப்பரப்பில் 122 மீட்டர் உயரத்துக்குப் பரப்பக்கூடிய அளவுக்கு இருக்கும்.




கடல் நீரில், மக்னீசியம் குளோரைடு, மக்னீசியம் சல்பேட்டு, மக்னீசியம் கார்பனேட், சுண்ணாம்பு சல்பேட்டு, சுண்ணாம்பு கார்பனேட், கார்பாலிக் அமிலம், பொட்டாசியம், அயோடின் முதலிய ரசாயனப் பொருள்களும் இருக்கின்றன!



இஸ்ரேல் நாட்டில் உள்ள சாக்கடலில் தான் உப்பு அதிகமாக உள்ளது. இதில் தாவரங்கள், மீன்கள், மற்ற உயிரினங்கள் எல்லாம் மிக மிகக் குறைந்த அளவே இருக்கின்றன.




ஒரு கன மீட்டர் கடல்நீரில், சராசரியாக 5 மில்லி கிராம் தங்கம் இருக்கிறது! உலகில் உள்ள கடல்நீர் முழுவதிலும் சுமார் 60 லட்சம் டன் தங்கம் கரைந்திருக்கிறது. உலகின் கடல் நீர் முழுவதையும் ஆராய்ந்து எடுத்தால் உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் 2 கிலோ தங்கம் கிடைக்கும்! ஆனால் பிரித்து எடுக்கும் செலவு தான் மிக அதிகம்!




கடலிலிருந்து முத்து, பவளம் முதலியவை கிடைக்கின்றன. தவிர, கடலின் அடியில் இருந்து பெட்ரோலியமும் கிடைக்கிறது.


கடலில் சுமார் 40,000 வகையான மீன்கள் இருக்கின்றன. உலகில் பிடிக்கப்படும் கடல்மீன்கள் 6½ கோடி டன்!




கடலில் சுமார் 182 மீட்டர் ஆழம் வரைதான் சூரியனின் வெளிச்சம் செல்லுகிறது. அதற்குக் கீழ் ஒளி குறைந்து, பிராணிகளும் தாவரங்களும் மிகுதியாகக் காணப்படுவதில்லை. ஆனால், 10,900 மீட்டர் ஆழத்திலும் வாழக்கூடியது தட்டை மீன்.




பிங்கர்ஷா (1673-1742) என்ற டச்சு சட்ட நிபுணர், ஒவ்வொரு நாட்டுக்கும் 'உரிமைக் கடல் எல்லை' என்பது 3 கடல் மைல் மட்டுமே என்னும் சட்டத்தை ஏற்படுத்தினார். (ஒரு கடல் மைல் என்பது 1853 மீட்டர்.) 3 கடல் மைல் என்று அவர் ஏற்படுத்திய காரணம், அக்காலத்தில் பீரங்கிக் குண்டுகள் அவ்வளவு தூரம் தான் பாயும். ஆனால், சில சட்டங்களை மீறும் கப்பல்களைச் சம்பந்தப்பட்ட நாடு 19 கி.மீ. தூரம் வரை சென்று சோதனை போடலாம்.



இப்போது நம் உடலில் ஒவ்வொரு 6 சதுர செ.மீட்டருக்கும் சுமார் 6-8 கிலோ கிராம் எடையுள்ள காற்று அழுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், கடலுக்குள் 914 மீட்டர் ஆழத்திற்குக் கீழே ஒவ்வொரு 6 சதுர செ.மீட்டருக்கும் 589 கிலோ கிராம் அழுத்தம் இருக்கிறது. அவ்வளவு ஆழத்தில் வாழ்ந்து பழகிய உயிரினங்களைக் கடல் மட்டத்திற்குக் கொண்டுவந்தால் அவை இறந்துவிடும்!



கடல்களிலிருந்து லட்சக் கணக்கான கன மீட்டர் தண்ணீர், நீராவியாக எழும்பி, வாயு மண்டலத்தில் கலக்கிறது. இது மேகமாகி மழையாகப் பெய்கிறது. கடலில் பெய்யும் மழையைத் தவிர, நிலத்தில் பெய்யும் மழை நீரும், ஆறுகள்மூலம் கடலுக்கு வந்து சேருகிறது. எனவேதான் கடல் வற்றுவதில்லை.






சகோதர பாசம்!

எங்கள் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் தமிழாசிரியர். பாடத்தில், SPCA வைத் தோற்றுவித்த ஹென்ரி பெர்க்கைப் பற்றியும், அவர் எவ்விதம் பிராணி வதையைத் தடுத்தார் என்பதைப் பற்றியும் வரவே, ''நீங்கள் யாராவது, பிராணிகளை வதையிலிருந்து தடுத்திருக்கிறீர்களா?'' எனக் கேட்டார் ஆசிரியர்.

ஒரு மாணவன் எழுந்து, ''நான் ஒரு முறை, ஒருவன் கழுதையை அடிக்கும் போது, தடுத்தேன் சார்!'' என்றான்.



உடனே ஆசிரியர், ''இவன் ஏன் இப்படிச் செய்தான் என்று தெரியுமா?'' என்று எங்களைப் பார்த்துக் கேட்டார்.

சற்றும் தாமதிக்காத மற்றொரு மாணவன் எழுந்து, ''எல்லாம் சகோதர பாசம்தான் சார் காரணம்!'' என்றதும், வகுப்பே நகைப்பில் ஆழ்ந்தது, ஆசிரியர் உட்பட!

– போரூர் கி. சிவா

ஆறுமுகம்

ஆறுமுகம் ஐந்தாம் வகுப்புப் படிப்பவன். தமிழாசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஆசிரியர் மாணவர்களை நோக்கி, ''மாணவர்களே! நீங்கள் அனைவரும் எப்பொழுதும் உண்மையையே பேச வேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

வகுப்பு முடிந்ததும் ஆசிரியர் வருகைப் பதிவு எடுக்க ஆரம்பித்தார். மாணவர்கள் ''முத்து உள்ளேன் ஐயா'',



''குமார் உள்ளேன் ஐயா'' என்று வரிசையாகக் கூறிக் கொண்டே வந்தனர். ஆறுமுகத்தின் முறை வந்தது. ஆசிரியர் அவன் பெயரைப் படித்தார். ஆறுமுகம் எழுந்து, ''ஒரு முகம், உள்ளேன் ஐயா!'' என்று கூறினான்.

உடனே ஆசிரியர், ''என்னடா இது புது விளக்கம்! உன் பெயர் ஆறுமுகம்

தானே? நீ ஏன் ஒரு முகம்னு சொல்றே?'' என்று கேட்டார்.

ஆறுமுகம், ''நீங்கதானே உண்மையையே பேச வேண்டும்னு சொன்னீங்க. எனக்கு ஒரு முகம்தானே இருக்கு. அதான் ஒரு முகம் உள்ளேன் ஐயான்னு சொன்னேன்'' என்றான்.

அவ்வளவுதான். ஆசிரியர் உட்பட அனைவரும் அன்று முழுதும் சிரிப்பு மழையில் நனைந்தோம்.

- ராஜமாணிக்கம், சுங்கவாயில்.

கண்தானம்

அம்பத்தூர் விவேகானந்தா வித்யாலயா பள்ளியில் கண்தானத்தின் சிறப்பு பற்றிய விளக்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் கண்தானம் செய்வதற்கான படிவம் வழங்கப்பட்டது.

ஒன்பதாம் வகுப்பு மாணவி தேவி லாவண்யாவுக்கும் இதற்கான படிவம் கிடைத்தது. படிவத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று தந்தை சுரேஷ் கிருஷ்ணா (வயது 45) விடம், ''நாம் கண்தானம் செய்தால், இருவர் கண்ணொளி பெறுவார்கள்'' என்று சொல்லி 'படிவத்தில் கையெழுத்துப் போடுங்கள்' என்றாள். அப்பாவும், ''இப்ப எனக்கு உடம்பு முடியலை. காலையில கையெழுத்துப் போடுகிறேன்'' என்றார். எதிர்பாராத விதமாக காலையில் 'சுரேஷ்கிருஷ்ணா இறந்து விட்டார். எல்லாரும் அழுது கொண்டிருந்தனர். தேவி லாவண்யா மட்டும் வீட்டில் பெரியவர்களிடம், ''அப்பா நேற்று கண்தானம் செய்யக் கையெழுத்து போடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்'' என்றாள். உடனே பெரியவர்கள் சங்கர நேத்ராலயாவிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, டாக்டர்களை வரும்படி சொன்னார்கள். டாக்டர்கள் உடனே வந்தனர். தேவி லாவண்யாவின் மனஉறுதி புத்தி கூர்மையால் இருவருக்கு உடனே கண்ணொளி கிடைத்தது.


- ம. ஜெயராமன், சென்னை - 8.



இண்டியா கேட்

டெல்லிக்குப் போயிருந்தோம். ஐந்து வயது ஸ்ரீவத்சனை எல்லா இடங்களுக்கும் கூட்டிச் சென்று காட்டி வந்தோம். அவனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. அன்று பிற்பகல் 'இண்டியா கேட்டுக்'குப் போனோம். ''அது என்ன?'' என்று ஸ்ரீவத்ஸன் கேட்டான்.

''இதுதான் இண்டியா கேட். இது



நமது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி உயிர்நீத்த தியாகிகளின் நினைவுச் சின்னம். இதில் உள்ள சுடர் அணையவே அணையாது. இதன் பெயரே 'அமர் ஜவான் ஜோதி'. இந்திய அரசு நடத்தும் எல்லா விழாக்களின் ஊர்வலங்களும் இந்த 'இண்டியா கேட்'டில் இருந்துதான் தொடங்கும்'' என்று விளக்கினோம்.

'கேட்'டுன்னு சொல்றீங்களே! இங்கே கேட்டையே காணோமே? இந்தியா கேட்டை எப்போ மூடுவாங்க?'' என்று கேட்டான் ஸ்ரீவத்சன். எங்களுக்கு என்ன பதில் கூறுவது என்று தோன்றாது திகைத்தோம்!

- ராதா சீனிவாசன், டில்லி.

பந்தயப் பைத்தியம்!



முத்தன் எப்போது பார்த்தாலும் தன்னையே உயர்வாகப் பேசிக் கொள்வான். எதற்கெடுத்தாலும் பந்தயம் வைப்பான். அவன் சரியான தற்பெருமைக்காரன் என்பது எல்லோருக்கும் தெரியும். அதோடு பிறரிடத்தில் ஒரு சிறு குறை இருந்தால் கூட அதை மலை போல் நினைத்து திட்டிக் களிப்பது அவனுக்குப் பிடித்தமான செயல்களில் ஒன்று.

அன்றும் இதே போல் முருகனிடம் ஏதோ பந்தயம் போட வந்தான்.

முருகனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்த ஊரில் இரண்டு காதும் கேட்காத ஆசாமி ஒருவர் அஞ்சலகத்தில் வேலை பார்த்து வந்தார். முத்தனும் அதைச் சொல் அளவில் கேள்விப்பட்டிருக்கிறான் என்பதும் முருகனுக்குத் தெரியும்.

இதையே பயன்படுத்திக் கொண்டு அவனைப் பந்தயத்திற்கு இழுத்து புத்தி புகட்ட முருகன் முடிவு செய்தான்.

''முத்தா! உன்னிடம் ஒரு பந்தயம்'' என்றான்.

''ஆ! ஆ!'' என்று விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே'' நீயா பந்தயம் வைக்கிறாய்?'' என்றான் ஏளனத்தோடு.

''ஆம்!'' என்றான் முருகன்.

''ம். சொல்லித்தொலை சீக்கிரம்'' என்றான் முத்தன்.

''முத்தா! நம் ஊரில் காது கேட்காத ஆசாமி ஒருவர் அஞ்சலகத்தில் வேலை செய்கிறார் தெரியுமோ?'' என்று கேட்டான் முருகன்.

''எனக்குத் தெரியாததா? எல்லாம் தெரியும். பந்தயம் என்னவென்று சொல்'' என்றான் முத்தன் அவசரம் அவசரமாக.

''அந்த ஆள் கிட்ட, தபால்கார்டு ரெண்டை வாங்கவேண்டும். முடிந்தால் இரண்டொரு வார்த்தை திட்ட வேண்டும். இதுதான் பந்தயம்'' என்றான் முருகன்.

''பூ. இவ்வளவுதானே?'' என்று ஒப்புக் கொண்டான் முத்தன். இருவரும் அஞ்சலகம் சென்றனர். வாசலில் முருகன் நிற்க முத்தன் மட்டுமே உள்ளே சென்றான்.


முத்தன் அந்த ஆளைப் பார்த்து எதைஎதையோ உரக்கக் கத்த ஆரம்பித்தான்.

மறுகணம். ''பளார்.. பளார். கும். கும்'' என்று அறை விழும் சத்தம். தொடர்ந்து. ''ஐயோ! அம்மா'' என்று முத்தனின் குரல்

காது கேட்காத அந்த ஆள் ஒரு வாரத் திற்கு முன்பே வேறு ஊருக்கு மாற்றலாகிச் சென்று விட்டார் என்று முருக னுக்குத் தெரியும். ஆனால் பந்தயப் பைத்தியம் முத்தனுக்குத் தெரியாதே!

– கோ. வேல்முருகன், கீழ்விசாரம்.


ரோபோ தெரியுமா?



ரோபோ எனப்படும் இயந்திர மனிதனை உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? கரகரப்பான, ஏற்ற இறக்க மில்லாத குரலில் பேசி - அளந்து அடியெடுத்து நடக்கும் ரோபோக்களை திரைப்படங்களில் சிலர் பார்த்திருக்கலாம். தலையில் சிவப்பு விளக்கு எரிய, துப்பாக்கியால் சுடும் ரோபோ பொம்மைகள் உங்களிடம் இருக்கலாம். ரோபோ என்பது மனிதனைப்போல செயல்படக் கூடிய இயந்திரம். அதைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம்.

ரோபோ என்பது கம்ப்யூட்டரின் மாற்றியமைக்கப்பட்ட வடிவம். மூளைப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 'ப்ரொக்ராம்' (Program) உதவியால் அது செயல்படுகிறது. ப்ரொக்ராம் என்றால் என்ன? தொகுக்கப்பட்ட கட்டளைகள் என்று விளக்கம் கொடுக்கலாம். உதாரணமாக கட்டுரையின் 3 ஆம் பக்கம் படத்தை பாருங்கள். கார். பஸ் நிலையத்தை அடைய வழி சொல்ல வேண்டும்.

1. காரை வடக்கில் 20 அடி செலுத்தவும்.
2. கிழக்கு நோக்கி 10 அடி செல்லவும்.
3. வடக்கு நோக்கி 30 அடி செல்லவும். (சிக்னல்)
4. வடமேற்காக 15 அடி செல்லவும்.
5. வடக்கு நோக்கி 5 அடி செலுத்தவும்.



மேலே குறிப்பிட்ட கட்டளைகள் சில இடங்களில் மாற்றம் பெறும். அதாவது நீங்கள் காரைச் செலுத்தும் போது 4 வது கட்டத்தில் சிக்னலுக்காக காத்திருந்து பிறகு செல்ல வேண்டும்.

4. காரை சிக்னலில் நிறுத்தவும்.

5. பச்சை விளக்கு எரிந்த பின் தொடரவும்.

இதைப் போன்றே ஒவ்வொரு வேலையையும் பிரித்துப் பிரித்துக் கட்டளையிட வேண்டும். இவ்வாறு தனித் தனியான கட்டளைகளைத் தொகுப்பதையே 'ப்ரொக்ராம்' எனலாம். ரோபோக்கள் அவற்றில் உள்ள ப்ரொக்ராமிற்குத் தகுந்தவாறுதான் செயல்படும். ஆனால், கடைகளில் விற்பனைக்குத் தயாராக உள்ள ரோபோக்கள், ஏற்கெனவே ப்ரொக்ராம் செய்யப்பட்டு இருக்கும். பட்டனை அழுத்தியே குறிப்பிட்ட வேலையைச் செய்யும்படி கட்டளையிடலாம்.

கட்டுரையின் 4 ஆம் பக்கப் படத்தில் காட்டப்பட்டுள்ள ரோபோ உயரமான மரங்களில் பழம் பறிக்கப் பயன்படுகிறது. இது செயல்படும் முறையைப் பாருங்கள்.

1. பழம் இருக்கும் இடத்தைத் தேர்வு செய்கிறது.

2. பகுதி A வை சரியான உயரத்திற்கு மாற்றியமைக்கிறது.

3. கோணம் AB யை தீர்மானிக்கிறது.


4. பகுதி C -ல் உள்ள வெட்டு கத்திகள் காம்பினை வெட்டுகின்றன.

5. விடுபட்ட பழத்தை பகுதி D -ல் உள்ள கூடை தாங்கிக் கொள்கிறது.

மேலே காட்டப்பட்ட ரோபோவில் உங்களுக்கு சந்தேகம் வரலாம். எப்படி பழத்தின் இருப்பிடத்தை ரோபோ அறிந்து கொள்கிறது? அதற்கான விசேஷ அமைப்பு ஒன்று அதன் கரத்தில் அமைக்கப்பட்டிருக்கும். இது பழத்தின் மணத்தையோ, நிறத்தையோ மின் அலைகளாக மாற்றி ரோபோவிற்கு தரும். சரியான மின்அலை கிடைக்கும் போது பழத்தைத் தேர்வு செய்கிறது.


மனிதனைப் போலவே செயல் படும் ரோபோக்கள் எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். அவற்றிற்கு வலி, உணர்வு கிடையாது. எனவே அவை சலியாமல் உழைக்கின்றன. நேர்மையாகவும், நம்பிக்கையாகவும் இருக்கின்றன.

கடைகளில் விற்கப்படும் ரோபோக்கள் நம்பிக்கையான விற்பனையாளராகவும், வீட்டு வேலை செய்யும் வேலையாளாகவும், பள்ளிகளில் பாடம் கற்றுத்




தரும் ஆசிரியராகவும் செயல்படுகின்றன. மனிதனால் செய்ய முடியாத ஆபத்தான வேலைகளைச் செய்யவும் பயன்படுகின்றன.

வானவியல் ஆராய்ச்சியில் புதிய இடங்களுக்கு நேரடியாக மனிதனை அனுப்புவதில்லை. முதலில் ரோபோவை அனுப்பி காற்றழுத்தம், பிராணவாயு இருக்கிறதா போன்றவற்றைத் தெளிவாக அறிந்த பின்பே மனிதனை அனுப்புவார்கள். எனவே, அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் ரோபோக்கள் பயன்படுகின்றன.



இன்னமும் ரோபோ பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் உள்ள சில குறைகளைச் சரி செய்யவும், மேலும் பல வகையில் பயன்களைப் பெறவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. முக்கியமான குறை அவற்றின் அறிவுத்திறன், செயற்கை அறிவு என்பது தான். ஏனெனில், நாம் இடுகின்ற கட்டளைகளைக் கொண்டுதான் அவை செயல்படுகின்றன. உதாரணமாக, வீட்டு வேலைகளைச் செய்ய ப்ரொக்ராம் செய்யப்பட்ட ரோபோ, ஒரு மோசமான நேரத்தில் நெருப்பில் சிக்கிக் கொள்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதற்கு ஆபத்தை உணர்ந்து தப்பித்து ஓடத் தெரியாது. ஏனெனில் அதற்குரிய வசதிகள் அதனிடம் இல்லை. அதாவது, சூழ்நிலையில் ஏற்படுகின்ற உஷ்ண மாற்றத்தைக் கணக்கிட்டு மின்னலைகளாக மாற்றித் தரும் கருவியோ, ப்ரொக்ராமோ அதனிடம் இல்லை. அதே சமயத்தில் தீப்பிடிக்கும் அபாயத்தை அறிவிப்பதற்காக செய்யப்பட்ட காவல்கார ரோபோவிற்கு சுற்றுப்புற வெப்பத்தை கணக்கிட்டு மின்னலைகளாக மாற்றும் கருவி பொருத்தப்பட்டுள்ளது. எனவே இந்த வகை ரோபோக்கள் தீ



ஆபத்தை அறிவித்து விபத்தைத் தடுக்கின்றன.

ரோபோவிற்குள் செலுத்தப்படும் கட்டளையோ, அல்லது அதிலிருந்து பெறும் பதிலோ மின்னலைகளாகவே இருக்கும். தொலைபேசியில் நம்முடைய பேச்சு ஒலியலைகளாக உள் சென்று மைக்ரோபோன் உதவியால் மின்னலைகளாக மாற்றப்பட்டு மின் கம்பிகளில் செலுத்தப்படுகிறதல்லவா? அதுபோலவே ரோபோவிலும் மாற்றப் படுகிறது. எனவேதான் ரோபோக்களை அதற்குரிய பணிக்கு மட்டுமே பயன் படுத்த முடியும்.

பாடம் கற்றுத்தரும் ரோபோவில் ஒலியலைகளை மின்னலைகளாக மாற்றவும், அதிலிருந்து பெறப்படும் பதிலான மின்னலைகளை ஒலியலைக ளாக மாற்றித்தரும் அமைப்பும் இருக் கும். எனவே அதனால் நம்முடன் பேச முடிகிறது. இந்த வகை வசதியில் லாத ரோபோவால் நம்முடன் பேச முடி யாது.

ம னி த னு க் கும் ரோபோவிற் கும் உள்ள வித்தி யாசம், அவற் றால் ஒரு சமயத் தில் ஒரே ஒரு செய்தியை மட் டுமே கிரகிக்க முடியும். ஆனால் உங்கள் விஷயம் அப்படியல்ல? கணக் குப் போட்டுக் கொண்டே பாட்டுக் கேட்டபடி, அம்மா தயாரித்த காப்பியில் சர்க்கரை போதவில்லை என்று குரல் கொடுப்பீர்கள். ஒரே சமயத்தில் பார்ப்பது, கேட்பது மற்றும் பேசவும் உங்களால் செய்ய முடியும். அது போல பல பணிகளுக்கான செய்திகளை ஒரே சமயத்தில் கிரகிக்க ரோபோவால் முடிவதில்லை. அதாவது ப்ரொக்ராம் வழியாக இல்லாமல் தானே பல வழிகளில் செய்தி சேகரிப் பது, பதிவு செய்வது, அவற்றைக் கொண்டு செயல்படுவது. இந்த மூன்றையும் ரோபோவால் செய்ய முடிந்தால் அது மனிதனுக்கு நிகராகி விடும்.

இதற்கான ஆராய்ச்சிகள் உலகின் பல பகுதிகளிலும் நடைபெறுகின்றன. ரோபோக்களுக்கு உண்மையான உருவம் கொடுத்து, அவற்றிற்கு உணர்வு ஏற்படச் செய்வது, அவற்றை அழகான மனிதக் குரலில் பேசச் செய்வது, மேலும் கேட்பது, பார்ப்பது போன்ற வற்றின் மூலம் செய்திகளை கிரகிக்க வைப்பது சுயமாக சிந்திக்கச் செய்வது என்று பல வழிகளில் முயன்று வருகிறார்கள்.

இனி ரோபோ பற்றி வெளிவரும் செய்திகளை கவனமாகக் கேளுங்கள். ஏனெனில் எதிர்காலத்தில் உங்கள் பக் கத்துச் சீட்டு சிநேகிதனாகவோ, பாடம் கற்றுத்தரும் ஆசிரியராகவோ, நீங்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்க கூடிய மனிதனாக ஒரு ரோபோ கண்டு பிடிக் கப்படலாம்!

– கே.பி. சாந்தி.

படிக்கிற பையனுக்கு...

பத்தாம் வகுப்பு.

கணக்கு ஆசிரியர் மாதவன் சார் முன்கோபக்காரர்; கண்டிப்பு மிக்கவர் என்று மாணவர்களுக்குத் தெரியும். ஆனால், இந்த அளவுக்குக் கோபம் வரும் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை. வகுப்பே திகைத்தது.

இதுவரை எந்த ஆசிரியரிடமும் அடியே வாங்காத சரவணன்தான் இன்று மாதவன் சாரிடம் மாட்டிக் கொண் டான்.

''எல்லாப் பாடங்களிலும் முதல் மார்க் வாங்குவதாலும் ஒழுக்கத்தில் சிறந்தவனாக இருப்பதாலும் இந்த ஆண் டின் 'சிறந்த மாணவன்' என்று ஆண்டு விழாவில் உனக்குப் பரிசு வாங்கித் தர லாமென்று இருந்தேன். ஆனால் நீயோ, வகுப்பில் ஆனந்தமாகத் தூங்குகி றாயே? நீயா சிறந்த மாணவன்? வகுப் பிலே தூங்குவதற்கு என்ன காரணம்? சொல்லு. ராத்திரி என்ன பண்ணினே?'' என்று கேள்வி கேட்டவாறே சரவண னைக் கன்னத்திலும் முதுகிலும் அடித் தார்.

அடியில் சரவணனின் கன்னம் சிவந்து போய் விட்டது. அவனால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. விசும்பலோடு கண்கலங்கினான்.

''சொல்லுடா?''

''சார்... வந்து... வந்து.. நேத்து ராத் திரி சினிமாவுக்கு...'' - மேற்கொண்டு அவனை ஏதும் பேச விடாமல், ''சினி மாவுக்கா போனே?'' என்று கேட்டு அவன் கன்னத்தில் மறுபடியும் ''பளார்...'' என்று அறைந்தார் மாத வன் சார்.

வகுப்பில் பயம் கலந்த அமைதி.

''படிக்கிற பையனுக்கு இரவு சினிமாக் காட்சியாடா? இனிமேல் எவ னாவது இரவு சினிமாக் காட்சிக்குப் போய் வந்து, வகுப்பில் தூங்கினா, இதே மரியாதைதான்! இந்த ஆண்டு சிறந்த மாணவனுக்கான பரிசு உனக்குக் கிடை யாது. இரண்டாவது ரேங்க் எடுத்துள்ள பாபுவுக்குத்தான். தெரியுதா?''

மாதவன் சார் சொல்லி முடிக்கவும் மணி அடிக்கவும் சரியாக இருந்தது. பிறகு அவர் வகுப்பை முடித்து விட்டுத் தலைமை ஆசிரியர் அறைக்கு விரைந் தார்.

ஆண்டு விழாவிற்கு இன்னும் இரண்டே நாட்கள்.

எல்லா வகுப்புகளிலும் மாணவ மாணவியர், வரப் போகும் ஆண்டு விழாவைப் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒருவழியாக பள்ளி இறுதி மணி ஒலிக்க, மாணவக் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக வீதியில் கலக்க ஆரம்பித் தது.

வீட்டுக்குக் கிளம்பலாம் என்று மாத வன் சார் புறப்படும் போதுதான் அன்று தபாலில் சேர்க்க வேண்டிய முக்கிய மான கடிதத்தின் நினைவு வந்தது.

சட்டைப் பையைத் தடவினார்.

வகுப்பில் மேஜையில் வைத்தது நினைவுக்கு வரவே மீண்டும் வகுப்ப றைக்குச் சென்றார்.

வகுப்பிற்குள் நுழையப் போன அவரை சரவணனும் பாபுவும் பேசிக் கொண்டிருந்தது தடுத்து நிறுத்தி யது.

''நியாயமாகப் பார்த்தால் இந்த சிறந்த மாணவனுக்கான பரிசு உனக்குத் தான் கிடைக்கணும் சரவணா. நம் மாத



வன் சார்தான் முன்கோபத்தினால் அதை எனக்குத் தர சிபாரிசு பண்ணிட்டார். நீ அன்றைக்கு இரவு சினிமா ஆட்டம்னு சொன்ன உடனேயே உன்னை அடிச்சுட்டார். உங்க அப்பா சினிமாத் தியேட்டரில் டீ, காப்பி போடற வேலை செய்யிறவர். அன்றைக்கு அவருக்கு உடம்பு சரியில்லாத காரணத்தினால் அவருக்கு உதவி பண்ற துக்காகத்தான் போனே. சினிமா பார்க்க இல்லே என்ற உண்மை அவருக்குத் தெரியாது. அதை அவரிடம் சொன்னால், கண்டிப்பா உன்னைப் பத்தி மோசமா நினைச்சதுக்காக வருத்தப் படுவார். நியாயமா இந்தப் பரிசு உன்னைச் சேர வேண்டியது. எனக்கு வேண்டாம் என்று இப்பவே போய் மாதவன் சாரிடம் சொல்கிறேன்'' என்றான் பாபு.

''வேண்டாம் பாபு. நான் சொல்றதைக் கேள். நான் அன்றைக்கே இதைச் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனா மாதவன் சார் என்னைச் சொல்ல விடலை. கோபத்தில் அவர் தன்னையே மறந்திட்டார். அவர் அடிச்சிட்டார். இதைச் சொல்ல ஏத்த நேரம் இல்லைன்னு நான் பேசாம இருந்துட்டேன். பிறகு சொல்லலாம் என்று சொல்ல முயன்ற சில நண்பர்களையும் தடுத்திட்டேன். ஏன் தெரியுமா? சொன்னால் நான்தான் பரிசுக்கு ஆசைப்படுவதாக நினைப்பார். இந்த உண்மை அவருக்கு என்றைக்காவது தெரியாமலா போகும்? இப்ப மட்டும் என்ன, நீயும் நானும் நண்பர்கள்தானே? அந்தப் பரிசு யாருக்குக் கிடைச்சா என்ன? உனக்குப் பரிசு கிடைச்சாலும் அது எனக்கு மகிழ்ச்சி தான்'' என்றான் சரவணன் பெருந்தன்மையுடன்.

மறைந்து கொண்டு கேட்டிருந்த மாதவன் சாருக்குச் சாட்டையால் அடி பட்டது போல் இருந்தது.

''ஒழுங்காகப் படித்துக் கொண்டு, அதே சமயம் தந்தைக்கும் உதவி செய்யும் நல்ல மாணவனையா தண்டித்து விட்டோம்?'' - சரவணனின் பெருந்தன்மை அவரை வியப்பில் ஆழ்த்தியது.

வகுப்பறைக்குள் நுழையாமலேயே திரும்பினார். தூரத்தில் தலைமையாசிரியர் அறை திறந்திருப்பது தெரிந் தது.

தன் முன்கோபத்தால் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் செய்ய தலைமை ஆசிரியர் அறையை நோக்கி நடந்தார் மாதவன் மனநிறைவுடன்.

- பா. ஜெயக்குமார்

கொள்ளுப் பாட்டி மாதிரி!



கருத்தம்மாவின் பிள்ளை செல்லமுத்துவுக்குப் படிப்பு ஏறவில்லை. அவனுக்குத் தந்தை இல்லை. மகனைப் பற்றிக் கவலை கொண்ட கருத்தம்மா, படிப்பு வரா விட்டால் போகிறது. மகனை வியாபாரத்திலாவது ஈடுபடுத்திப் பிழைக்கும் வழியைக் கற்றுக் கொடுப்போம் என்று முடிவு செய்தாள்.

ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்யும் சிலர் அந்த ஊரில் இருந்தனர். அவர்களிடம் மகனை அழைத்துச் சென்று, அவனை வியாபாரத்தில் பழக்குமாறு கேட்டுக் கொண்டாள். அவர்களும் சம்மதித்தனர். தன்னிடம் இருந்த பண்டம் பொருள்களையெல்லாம் விற்று இரண்டாயிரம் ரூபாய் சேர்த்து செல்லமுத்துவிடம் கொடுத்தனுப்பினாள் கருத்தம்மா.

வணிகர்களுடன் பயணம் செய்த செல்லமுத்து வழியில் தங்கிய சத்திரத்தில் களைப்பு மிகுதியால் நெடுநேரம் தூங்கி விட்டான். வணிகர்கள் அவனை விட்டு விட்டுக் கிளம்பி விட்டனர்.

காலையில் உறக்கம் கலைந்து எழுந்த செல்லமுத்து, தான் தனியாக இருப்பதை எண்ணிக் கலங்கினான். ஆனாலும் மன உறுதியை இழக்காமல், நடந்து பக்கத்து ஊருக்குச் சென்றான்.

அங்கே ஒருவன் பசுவை அடிமாட்டுக்கு விலை பேசிக் கொண்டிருந்தான். அந்தக் கிழட்டுப் பசு எப்பொழுது வேண்டுமானாலும் இறக்கக்கூடிய பரிதாப நிலையில் இருந்தது.

இரக்க குணம் மிக்க செல்லமுத்து, ''ஏங்க, இந்தப் பசு இத்தனை காலமாக உங்களுக்குப் பால் கொடுத்து வந்திருக்கிறதே...? அந்த நன்றிக்காவது இதை இறக்கும் வரை காப்பாற்றக் கூடாதா?'' என்று கேட்டான்.

உரிமையாளனுக்குக் கோபம் வந்து விட்டது. ''நன்றி கின்றி இரக்கம் எல்லாம் பார்த்தால் காசு தேறாது தம்பி. இது உயிருடன் இருக்கும்போதே விற்றால் ஐம்பது ரூபாய் கூடக் கிடைக்கும். இறந்த பிறகு விற்றால் ஐந்நூறு ரூபாய் நஷ்டம். யார் வாங்குவார்கள்? அப்படி இரக்கம் உள்ள நீயே ஏன் இந்தப் பசுவை வாங்கிக் கொள்ளக் கூடாது?'' என்று இடக்காகக் கேட்டார்.

செல்லமுத்துவிடம் அம்மா கருத்தம்மா கொடுத்தனுப்பிய இரண்டாயிரம் ரூபாய் பணம் இருந்தது. அதிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து அந்தப் பசுவை விலைக்கு வாங்கிக் கொண் டான். ''தம்பி, மாட்டை வாங்கிக்கிட்டே. இந்த மண்வெட்டியை உனக்குப் பரிசாகத் தரேன். எடுத்துக் கிட்டுப் போ. பசு செத்ததும் புதைக்கக் குழி

வெட்டவாவது இது உதவும்'' என்றான் பசுவை விற்றவன்.

எல்லோரும் 'பைத்தியக்காரன்' என்று கேலி செய்ததைப் பொருட்படுத்தாமல் பசுவை ஓட்டிக் கொண்டு கிளம்பினான் செல்லமுத்து.

அந்தக் கிழட்டுப் பசுவால் வேகமாகக் கூட நடக்க முடியவில்லை. மூச்சு வாங்க அது நின்று விட்டது.

''செல்லமுத்து, நீ அசட்டுத்தனம் பண்ணி விட்டாய். இப்படி யாராவது செய் வார்களா? உனக்கு நான் எந்த விதத்திலும் உதவியாக இருக்க மாட்டேன். என்னால் உனக்குத் தொல்லைதான்'' என்றது கிழட்டுப் பசு.


''பரவாயில்லை. இத்தனை காலமும் நீ பால் கொடுத்து மற்றவர்களை வாழ வைத்திருக்கிறாய். உன்னைப் பார்த்தால் போன வருஷம் இறந்து போன என் கொள்ளுப் பாட்டியைப் போல் இருக் கிறது'' என்றான் இரக்கம் மிக்க செல்ல முத்து.

அந்தக் கிழட்டுப் பசுவுக்கு பிண்ணாக் கும் தவிடும் வைத்தான். அதற்குக் கஷ்டம் இல்லாது இருக்கட்டும் என்று மெதுவாக நடந்தான். இரண்டாவது நாள் நடுக்காட் டில் பசு இறந்து விட் டது.

இறப்பதற்கு முன் செல்லமுத்துவை அழைத்த பசு, ''தம்பி, நீ நல்லவன். இரக்க மற்ற, நன்றியற்ற மனிதர்களுக்கு இடையே நீ ஒரு அதிசயமானவன். என்னால் பய னடைந்தவன் என்னைக் கைவிட்டு விட்ட போது, இரக்க மிகுதியால் என்னை நீ வாங்கிக் கொண்டாய். அன்பாகத் தீனியும் வைத்தாய். நான் இன்னும் சிறிது நேரத்தில் இறக்கப் போகிறேன். நான் இறந்ததும், உன்னிடம் உள்ள மண்வெட்டியைக் கொண்டு நான் இறக்கும் இடத்திலேயே யாரையும் உதவிக்கு அழைக்காமல் நீ ஒரு குழி தோண்டு. என்னைப் புதை. தோண்டும் போது என்ன கிடைக்கிறதோ அதை எனது பரிசாக எடுத்துக் கொள்'' என்றது.

அது இறந்த இடத்தில், பசுவைப் புதைக்க, மிகவும் கஷ்டப்பட்டு தனி ஆளாகக் குழிதோண்டினான் செல்லமுத்து. ஒரு தவலை கிடைத்தது. திறந்து பார்த்தான். அத்தனையும் பொற்காசுகள்! நியாயம் தவறாத செல்லமுத்து பொற்காசுப் புதை யலை, மன்னரிடம் சென்று ஒப்படைத்தான். அவனுடைய நேர்மை மன்னரை மகிழ வைத்தது. பாதியை அப்படியே அவனுக்குக் கொடுத்து விட்டு, அரண்மனையிலேயே ஒரு வேலையையும் போட்டுக் கொடுத்தார். என்ன வேலை தெரியுமா? அரசரின் மாட் டுப் பண்ணையைக் கவனிக்கும் வேலை தான்!

– எஸ். உஷாராணி



கொரில்லாவைப் பற்றிக் கொஞ்சம்...

ஒரு காலத்தில் கொரில்லாக்கள் என்றாலே பயம்தான். அவை எந்தக் காரணமும் இல்லாமல் மனிதனைத் தாக்கக்கூடியவை எனக் கருதப்பட்டு வந்தது. உண்மையில் அவை பயந்த சுபாவமுடைய அமைதியான, விலங்குகள். வேறு வழியில்லாமல் ஆபத்தில் சிக்கிக் கொண்டதாக உணர்ந்தால் மட்டுமே மனிதனைத் தாக்கும்.

இந்தக் கொரில்லாக்கள் சைவ உணவுக்காரர்கள் என்பது ஆச்சரியமான செய்தி! அவை விதவிதமான மரப்பட்டைகள், வேர்கள், இலைகள், தண்டுகள், பழங்கள் ஆகியவற்றைத் தின்று கொழுக்கின்றன. பகல் பொழுதின் பெரும் பகுதியை சாப்பிடவும், ஓய்வெடுக்கவும், தூங்கவும் பயன்படுத்தி மகிழ்ச்சியாகக் கழிக்கின்றன.

ஒரு கொரில்லா கூட்டம் ஒரு நாளைக்கு ஒன்றிலிருந்து மூன்று மைல்கள் வரை நடக்கின்றது. குழுவாகச் செல்லும் போது அவை ஒன்றையொன்று பிடித்துக் கொண்டு அடர்ந்த காட்டுக்குள் எளிதாகச் செல்கின்றன. எப்போதாவது தாயைப் பிரிந்து விட்டால் குட்டி கொரில்லா அலரத் தொடங்கி விடும். உடனே குழுவினர் வந்து மீட்பார்கள்.

இரவு வாழ்க்கைக்காக ஒவ்வொரு கொரில்லாவும் ஒரு கூண்டை(!) தரையில் அல்லது மரத்தில் தன் உடலுக்குத் தகுந்தாற்போலக் கட்டிக் கொள்ளும். இந்தக் கூண்டு செடிகளாலும், கிளைகளாலும் உருவாக்கப்படும். குட்டிகள் தம் தாயுடன் உறங்கும்.

கொரில்லாக்கள் கூட்டு வாழ்க்கை நடத்துகின்றன. ஒரு குழுவில் ஒரு மூத்த ஆண் கொரில்லாவும், ஒன்று அல்லது இரண்டு இளைய கொரில்லாக்களும், பல பெண் கொரில்லாக்களும், குட்டி கொரில்லாக்களும் இருக்கும்.

மொத்தம் 5-லிருந்து 20-வரை உள்ள இந்தக் குழுவின் தலைவர் மூத்த ஆண் கொரில்லா தான். பயண பாதை தங்குமிடம் மற்றும் உணவு சேகரிப்பது ஆகியவற்றை அவர் திட்டமிடுவார். 12 வயதில் கொரில்லாக்கள் பருவ வளர்ச்சியடைந்து விடும். வயதுக்கு வந்த ஆண் கொரில்லாக்கள் நம்மைப் போல சுதந்திர வாழ்க்கை வாழ்கின்றன.



- பெரு. இளங்கம்பன்



எனக்கு ஜுரம்!

ஸ்கூல் பஸ்சுக்காக வேப்பமர நிழலில் காத்திருந்தனர் சேகரும், பாலுவும். இருவரும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படிக்கிறார்கள்.

அணில் ஒன்று மரத்தில் ஏறுவதும், கிளைவழியே இறங்குவதுமாய் விளையாடிக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்தனர்.

பாம், பாம் அலறலுடன் ஆட்டோ வந்து வேகமாய்க் கடந்து சென்றது. ஸ்கூல் பஸ் வந்தது. இருவரும் ஏறிச் சென்றனர். பள்ளியை அடைந்தனர். உள்ளே அவர்கள் வகுப்பு ஆசிரியர் முன்னே போவதையும் கண்டனர்.

ஆசிரியரைக் கண்டதும்தான் அவனுக்கு 'வீட்டுக் கணக்கு' ஞாபகம் வந்தது. அவர்தான் இவர்களின் கணக்கு ஆசிரியரும் கூட.

''அச்சச்சோ'' என்றான் பயத்துடன்.

''என்னடா?'' என்றான் சேகர்.

''வீட்டுப் பாடம் எழுதிட்டியாடா? கணக்கு வாத்தியார் கொடுத்தது?'' என்றான் பாலுவைப் பார்த்து.

''அடாடா. மறந்துட்டேனே. நேத்து எங்கப்பாவோட சர்க்கஸ் போயிட்டேன். அதுல மறந்து போச்சே.''

''என் அத்தை ஊரிலிருந்து வந்தாங்க நேத்து. அவங்க பையனும் வந்திருக்கான். விளையாடிட்டு இருந்ததுல பாடத்தை மறந்துட்டேனே'' என்று வருத்தப்பட்டான் பாலு.

''ச்சே!, அதனால என்னடா?'' என்று தோளைக் குலுக்கிய சேகரை வியப்புடன் பார்த்தான் பாலு.

''என்னடா சாதாரணமா சொல்லிட்ட? வாத்தியார் திட்டுவாரே? அடிக்கக் கூட செய்வாரே சில சமயம்? அவமானம் இல்லையா? அத்தனை பேர் மத்தியிலே வகுப்பிலே அடியோ, திட்டோ வாங்கறதை நினைச்சாலே வெட்கமாயிருக்கு!''

''அதெல்லாம் எதுவும் ஏற்படாது.'' 'உடம்பு சரியில்லேன்னு பொய் சொல்லிட்டாப் போச்சு.''

''பொய்யா?'' என்று வெலவெலத்துப் போனான் பாலு.

''வேறு வழி? கிளாஸ்ல நம்ம ஃப்ரெண்ட்ஸ் முன்னாடி திட்டு வாங்கறதைத் தவிர்க்க பொய் சொல்லித்தான் ஆகணும்.''

''சேச்சே! பொய் சொல்றது தப்புடா.''

''போடா பெரிய அரிச்சந்திரன் மாதிரி இருந்தா அவஸ்தைதான்.''

ஆசிரியர் பின்னாலேயே இருவரும் வகுப்பறைக்குள் சென்றனர்.

வகுப்பறைக்குள் ஆசிரியர் நுழைந்தார். கரும்பலகையில் ''பொய் சொல்லக் கூடாது பாப்பா'' என்று எழுதினார்.

ஒவ்வொருநாளும் இது போல் ஒரு அறிவுரையை எழுதுவது அவர் வழக்கம்.

கிருஷ்ணா

வருகைப் பதிவேட்டைப் புரட்டி வரிசையாக மாணவர்கள் பெயரை அழைத்தார்.

பிறகு, கண்ணாடியைக் கழற்றி டேபின் மேல் வைத்தபடி வகுப்பறையை நிதானமாகப் பார்த்தார். ஒவ்வொரு மாணவன் மேலும் அவர் பார்வை தொட்டுச் சென்றது.

''வீட்டுக் கணக்கு பண்ணாதவங்கள்லாம் எழுந்திருங்க'' என்றார் ஆசிரியர் கம்பீரமாய்.

தடக், தடக் மனதுடன் பாலு எழுந்து நின்றான். அடுத்த வரிசையில் அமர்ந்திருந்த சேகரும் மெல்ல எழுந்து நின்றான்.

''லொக், லொக்'' என்று இருமினான் தொண்டையைக் கனைத்தபடி சேகர்.

''எப்படி நடிக்கிறான் பார்'' என்று பாலு அசந்து போனான்.

சொல்லி வைத்தது போல இவர்கள் இருவர் மட்டுமே அன்று ஹோம் ஒர்க் செய்யாமல் வந்திருந்தனர்.

''நல்லாப் படிக்கிற நீங்க ரெண்டு பேரும் இப்படி ஹோம் ஒர்க் செய்யாம வரலாமா? சேகர், என்ன காரணம்?'' என்றார் ஆசிரியர் மிரட்டலாய்.

மூக்கை உறிஞ்சினான் சேகர்.

''உடம்பு சரியில்லை சார். நேத்து ராத்திரி கூட எனக்கு நல்ல ஜுரம் இருந்தது. அம்மா மிளகு ரசம் வைச்சுக் கொடுத்தாங்க'' என்றான்.

''அடப் பாவமே! அப்புறம் ஏன் ஸ்கூலுக்கு வந்தே? சரி, பரவாயில்லை உட்கார்'' என்றார் ஆசிரியர் இரக்கத்துடன்.



ஒருமுறை இருமியபடி அமர்ந்தான் சேகர்.

''பாலு, நீ ஏன் செய்யலே?''

''மறந்துட்டேன் சார். ஊரிலிருந்து அத்தை அவங்க பையனோடு வந்தாங்க.''

பொய் சொல்ல மனம் வராமல் உண்மையையே சொன்னான் பாலு.

''ஓகோ. வகுப்புப் பாடத்தை விட விளையாட்டு முக்கியமாயிடுச்சு உனக்கு? எப்படி மறப்பாய் படிப்பை? வகுப்பு வாசலில் போய் நில்லு வகுப்பு முடியற மட்டும். அப்படித் தண்டிச்சால் தான் இனிமேல் மறக்க மாட்டாய்'' என்றார் கடுமையாய்.

பாலு வேறு வழியின்றி கணக்கு நோட்டையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு வகுப்பறைக் கதவருகே சென்று நின்றான்.

வகுப்புத் தோழர்களின் கிண்டல் பார்வை மனதைக் குத்தினாலும், 'தன் தவறுக்குத்தானே ஆசிரியர் தண்டனை கொடுத்துள்ளார்' என்று சமாதானப் படுத்திக் கொண்டான்.

சேகர் தன்னைப் பார்த்துக் கிண்டலாய் சிரிப்பதை சட்டை செய்யாமல், ஆசிரியர் நடத்தும் பாடத்தை வகுப்பறையின் வாசலில் இருந்தபடி கவனிக்க ஆரம்பித்தான்.

மதிய உணவு இடைவேளையின் போது ஆசிரியர் அழைப்பதாக பியூன் வந்து சொன்னான் இருவரிடமும். பாலுவும், சேகரும் ஆசிரியர் அறைக்குச் சென்றனர். பரீட்சைப் பேப்பரைத் திருத்திக் கொண்டிருந்த ஆசிரியர் இவர்களைக் கண்டதும் பேனாவை மூடி வைத்தார்.

''க்விஸ் நிகழ்ச்சியில் பங்கேற்க உங்கள் இருவரையும் நம் பள்ளி சார்பாய் தேர்வு செஞ்சிருந்தோம் இல்லையா?''

''ஆமாம் சார்'' என்றனர் இருவரும் கோரஸாய்.

''டீ.வியில் கூட அதைக் காண்பிக்கப் போகிறார்களாம். இன்று மாலை அந்த க்விஸ் போட்டி நடக்குது. பக்கத்து டவுனில் தான் நடக்கப் போகுது.''

சேகர், பாலு இருவர் உள்ளமும் மகிழ்ச்சியில் மிதந்தது. டீ.வியில் தோன்றப் போகிறோம், அதை விட, வெற்றி பெற்றால் பாராட்டும், பரிசும் கிடைக்கும். எவ்வளவு பெரிய பெருமை இது!

''சேகர் உனக்கு ஜுரம்னு சொன்னதுனாலே, உனக்குப் பதிலா நம்ம கிளாஸ் முருகனை அழைச்சுட்டுப் போறதா ஹெட் மாஸ்டர் கிட்டே சொல்லிட்டேன். பாலுவும், முருகனும் வெற்றி பெறுவாங்கன்னு நம்பறேன். முருகனிடம் சொல்லி அவன் வீட்டுக்குப் போய் விஷயத்தை சொல்லிட்டு வரச் சொல்லிட்டேன். பாலு நீயும் உங்க வீட்டுல சொல்லிட்டு மூணு மணிக்கெல்லாம் வந்துடு. ஆல் தி பெஸ்ட்'' என்றார் ஆசிரியர்.



''சார்'' என்றான் சேகர் இருதலைக் கொள்ளி எறும்பாய்.

சாதாரணப் பொய்யால் எவ்வளவு பெரிய வாய்ப்பு நழுவிப் போய் விட்டது!

முகத்தைத் தொங்கப் போட்டபடி வெளியே வந்தான்.

'பொய் சொல்லக் கூடாது பாப்பா' என்று அவன் வாய் முணுமுணுத்தது.



★ சி. பாரதிராஜா, புதுக்கோட்டை.
பி. நித்தியானந்தம், பொறையார்.

? ஒரு சராசரி மனிதன் ஒரு நாளில் எத்தனை லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்? அதிகமாகத் தண்ணீர் குடிப்பதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

! ஒரு நபர் ஒரு நாளைக்கு சராசரி இரண்டு லிட்டர் நீர் குடிக்க வேண்டும். தினமும் தேவையான அளவுக்கு நீர் குடித்தால்தான் உணவு நன்றாக செரிக்கும்; செரித்த உணவு முழுவதுமாக ரத்தத்தில் கலக்கும்; வியர்வை, சிறுநீர், மலம் போன்ற உடம்பின் கழிவுப் பொருள்கள் முறையாக வெளியேறி, ரத்தம் சுத்தமாகும். உடம்பின் உஷ்ண நிலை ஒரே சீராக இருக்கும். சிறுநீரகங்கள் சரியான அளவில் செயல்படும். மலச்சிக்கல் வராது. தாகம் எடுக்காது. 'நீர் வறட்சி நிலை' (DEHYDRATION) ஏற்படாது.

★ ஆர். எழில் முரளி, புதுவை - 4.

? இரத்த வகைகளைக் கண்டறிந்தவர் யார்? எந்த ஆண்டு?

! 1917 ஆம் ஆண்டில் லாண்ட்ஸ்டீனர் (LANDSTEINER) என்ற அமெரிக்க விஞ்ஞானி ரத்த வகைகளைக் கண்டறிந்தார்.

★ ஆர். கே. ஜெயராம், கரூர்.

? மலேரியா காய்ச்சல் கொசுக்களால் மட்டுமே பரவுகிறதா?

! மலேரியாக் காய்ச்சல் பரவுவதற்கு கொசுக்கள்தான் பிரதான காரணம். இது தவிர மற்றொரு காரணமும் இருக்கிறது. மலேரியாவால் சமீபத்தில் பாதிக்கப்பட்ட நபரின் ரத்தத்தை முறையாகப் பரிசோதிக்காமல் வேறொருவருக்கு செலுத்தினாலும் கூட, ரத்தம் பெற்றுக் கொள்பவருக்கு சில தினங்களில் மலேரியாகக் காய்ச்சல் வரும்.

★ கே. பி. சசிகுமார், ஈரோடு - 2.

? கல்லீரல் அழற்சி (ஹெபடைட்டிஸ்) என்ற நோய் எதனால் ஏற்படுகிறது?

! கல்லீரல் அழற்சி நோய் (HEPATITIS) முக்கியமாக இரண்டு வகை வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. 1. ஹெபடைட்டிஸ் ஏ வைரஸ். 2. ஹெப

டைட்டிஸ் பி வைரஸ்.

முதல் வகை வைரஸ் அசுத்தமான உணவு, தண்ணீர் மூலம் நம் உடம்புக்குள் நுழைந்து, கல்லீரலைப் பாதிக்கிறது. இரண்டாம் வகை வைரஸ் சுகாதாரமற்ற முறைகளில் ஊசி போடுவது, சரியாகப் பரிசோதிக்காமல் ரத்தம் செலுத்துவது, போதை ஊசிகள் போடுவது போன்றவற்றால் மனித உடம்பை அடைந்து கல்லீரலில் ஆபத்தை உண்டாக்குகிறது.

★ எம். சுரேஷ், தங்கராசு, எட்டிப் பட்டி.

? நமது உமிழ்நீரில் என்னென்ன சத்துக்கள் உள்ளன, டாக்டர்?

! உமிழ்நீரில் 99 சதவீதம் தண்ணீர் தான் இருக்கிறது. மீதி 1 சதவீதத்தில் சோடியம், பொட்டாசியம், குளோரைடு, பாஸ்பேட், பைகார்பனேட், கால்சியம் போன்ற தாதுக்களும், 'அமிலேஸ்' என்ற உணவு செரிமான நொதி (ENZYME)யும், 'லைசோசைம்' என்ற பாக்டீரியாக் கிருமிக் கொல்லி நொதியும், 'மியூசின்' என்றொரு சளி போன்ற பொருளும் உள்ளன.

★ பி.எஸ். நாதன், வலங்கைமான்.

? கண்தானம் செய்ய விரும்புகிறவர்கள் இறந்தவுடன் எத்தனை மணி நேரத்திற்குள் கண்ணை எடுத்துப் பதப்படுத்த வேண்டும்?


! ஒருவர் இறந்த பின் அவரது விழிகளை 2 மணி முதல் 6 மணி நேரத்திற்குள் எடுத்து விடுவது நல்லது. குளிர்ப்பதனப்பட்ட உடலிலிருந்து 24 மணி நேரத்திற்குள் எடுக்கலாம். எடுக்கப்பட்ட விழிகள் தக்க ரசாயனப் பொருட்கள் அடங்கிய கரைசலில் இடப்பட்டு 0 டிகிரி முதல் 4 டிகிரி சென்டிகிரேட் உஷ்ண நிலையில் பாதுகாக்கப்படும். இரண்டு நாட்களுக்குள் வேறொரு மனிதருக்கு அவ் விழிகள் பொருத்தப்படும். விழிகளை 3 வாரங்கள் வரை பாதுகாக்க, இப்போது நவீன பாதுகாப்பு ரசாயனக் கரைசல்கள் வந்துள்ளன.


எத்தனை லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்?



சிரிப்

"ஏண்டா வீட்டுப் பாடம் எழுதலே?"
"நான் ஹாஸ்டல்லே இருக்கேன் சார்."
- ஆழியூர். ஆர். சத்தியன்





"இந்த வீடு ஒழுகுமா?"
"மழை பெய்யல்லேன்னா ஒழுகாதுங்க."
- டி. கே. லெட்சுமி



"ஒட்டகம் ஏன் முட்டையிடுவதில்லை?"
"அவ்வளவு உயரத்திலிருந்து போட்டால் உடைந்துடுமே சார்?"
- பா. ஜெயக்குமார்




"கொட்டினா அள்ள முடியாதது எது..?"
"தேள்...!"
- சீர்காழி. வி. ரேவதி


வீரன் ரோமுலஸ் தீரன் ரீமஸ்


கதை: ஆனந்தி


படம்:






ஏனியாஸின் அரச பரம்பரையில் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆமுலியஸ் தோன்றி...
என் பதவிக்கு போட்டியாக யார் தோன்றினாலும் தீர்த்துக் கட்டிவிடு!
கொடுங்கோலனிடம் மக்கள் அவதிப்பட்டனர்...
இந்த நகரத்தை விட்டே போய் விடலாம்... இந்த ஹிம்சையை இனியும் தாங்க முடியாது!
ஸில்வியா! நீதான் ஆமுலியஸின் தம்பி மகளாயிற்றே... நீ ஏன் பயப்படுகிறாய்?
எனக்குக் குழந்தை பிறந்தால் அரச பதவிக்குப் போட்டி முளைக்கும் என்று ஆமுலியஸ் எண்ணுகிறான். இந்த வீட்டை வேவு பார்க்க ஆட்கள் நியமித்திருக்கிறான்...
ஸில்வியாவுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன...
என்ன அழகு! என்ன களை!
பிறக்கும் போதே ஆபத்து!



இரு வீரர்கள் வீட்டுக்குள் புகுந்து...
ஸில்வியா-வுக்குப் பிறந்த குழந்தை-கள் எங்கே?
பாவிகளா! பதினைந்து நாள் குழந்தைகள்... கொன்னுடா-தீங்க!
ஐயோ! என் குழந்தைகள்...
இரட்டைக் குழந்தைகளுடன் இரு வீரர்-களும் குதிரையில் ஏறிப் பறந்து விட்டனர்...
டைபர் நதிக்கரையில்
நடு வெள்ளத்-தில் வீசி விடுமாறு அரசர் உத்தரவு...
மனம் வர-வில்லையே...
நாணல்களை வெட்டி கூடை பின்னினார்-கள்...
இந்தக் குழந்தை-களா அரசனுக்கு எதிரிகள்?
இதுகளுக்கு என்ன தெரியும்?


குழந்தைகள் கூடையில் மிதந்தன...
கட்டளையை நிறைவேற்றி விட்டதாகக் கூறி விடுவோம்!
நதிக்கரைக் காட்டில் ஒரு வேடன்...
இன்றைக்குப் பெரிய மிருகம் ஒன்றும் கிடைக்கவில்லை... இந்தக் குட்டிகளை -யாவது...
தாய் ஓநாய் ஒளிந்திருந்து பார்த்தது...
...பிடித்துக் கொண்டு போனால் விற்று நாலு காசு சம்பாதிக்க-லாம்...
குட்டிகளை இழந்த தாய் ஓநாய் தவித்தது...
அதோ, மிதந்து வருவது என்ன? வாடை வீசுகி-றதே...
கரையோரம் மரத்தின் ஒரு முறிந்த கிளையில், கூடை தட்டி நிற்க...
ஐயோ, பாவம்! பசியால் அழும் குழந்தை-கள்...



தாய்ப்பாசம் மேலிட ஓநாய் அந்தக் குழந்தை-களுக்குப் பாலூட்டியது...
தன் குகையில் கொண்டு போய் வளர்த்தது...
சிலகாலம் சென்று குழந்-தைகள் வளர்ந்து,தவழ்ந்து வெளியே வர, ஒரு இடையன்...
அட! இதென்ன அதிசயம்? குகையில் குழந்தை-கள்?
தாய் ஓநாய் இரை தேடிச் சென்றிருந்தது. எனவே...
இதுகளை வீட்டுக்குக் கொண்டு போறேன். நமக்குத்தான் குழந்தைகளே இல்லையே...
வீட்டில்...
கொழு கொழுன்னு எத்தனை அழகு!
நதிக் கரையில் கண்டு பிடிச்-சேன். நாமே வளர்க்கலாம்!



பார்த்தா ராஜா வீட்டுப் பிள்ளை மாதிரி இருக்காங்க!
இவனை ரோமுலஸ்னும், இவனை ரீமஸ்னும் அழைப்போம்...
சகோதரர்கள் வாலிபப் பருவம் அடைய, ரோமுலஸ்...
எத்தனை நாள் ஆடு மேய்ப்பது? எனக்குத் தோள் தினவெடுக்கிறது. நாடாளக் கூடத் தயார்!
அது சரி, நம்மிடம் ஒரு வாள் கூட இல்லை. யாரை, எப்படி வென்று ராஜாவாகப் போகிறாய்?
இன்னொருவர் நகரத்தைக் கைப்பற்று-வானேன்?
அதோ, அந்த ஏழு குன்றுகளி-டையில் நாமே ஒரு நகரம் உருவாக்-கலாம்!
இடையர் குலத்தின் ஒத்துழைப்பைக் கோரினான் ரோமுலஸ்...
நீ ராஜா வீட்டுப் பிள்ளை-யாகத்தான் இருக்க வேண்டும்...
இடையன் மகன் பேசுகிற பேச்சா இது?


இரட்டையரின் தந்தை ...
இந்தக் குழந்தைகள் எனக்குக் கிடைத்த போது, அரசன் அமுலியஸ் இரண்டு குழந்தைகளைக் கொல்ல உத்தரவிட்டதாக வதந்தி பரவியிருந்தது ...
... அப்போதே சந்தேகித்தேன். இப்போ என் எண்ணம் உறுதிப்படுகிறது ...
இரட்டையருக்கு உதவுவோம்; நகரம் நிர்மாணிப்போம் ...
குன்றுகளிடையே அலைந்து தேடிய ரீமஸ் ...
நகரை அமைக்க இதுவே சிறந்த இடம்!
இல்லை, இதைவிடச் சற்று உயரமான அந்தப் பாலடைன் குன்றில்தான் கட்ட வேண்டும் ...
எப்போதும் நீ சொல்வதுதான் சரி என்று சாதிக்கிறாய் ...
என்ன செய்ய? நான் சொல்வதுதானே சரியாக இருக்கிறது?
ரீமஸ் பிடிவாதம் பிடிக்க, ஊர்ப் பெரியவர் ...
ரீமஸ்! உன் நண்பர்களுடன் நீ இங்கேயே காத்திரு. நாங்கள் ரோமுலஸ் சுட்டிக் காட்டிய இடத்துக்குப் போகிறோம். தெய்வத்தின் அருள் எப்படி இருக்கிறது, பார்ப்போம் ...





சூரியன் உதயமாகும் முன்னர், ரீமஸ் நின்ற குன்றின் மீது ஆறு பறவைகள் பறந்தன...
அதோ!
ஒன்று... இரண்டு ...... ஆறு!
சூரியன் உதயமாகும்போதே பாலடைன் குன்றைப் பன்னி-ரண்டு கழுகுகள் வட்டமிட...
ஆஹா! எனக்கு தெய்வத்தின் உத்தரவு கிடைத்து விட்டது!
ரீமஸின் தோழர்-கள் கூட ரோமுலஸ்ஸையே தலைவனாக ஏற்றார்கள்...
இங்குதான் நகரம் அமைய வேண்டும். நாங்க-ளும் உதவு-கிறோம்...
வெண்கலக் கலப்பையால் உழுது எல்லைக் கோட்டை வகுத்தான் ரோமுலஸ்...
வாழ்க, ரோமுலஸ்!
புதிய நகரம் வெகு துரிதமாக உருவா-யிற்று...
ரோமுலஸ் அமைத்த ரோம் நகரம் வாழ்க!


ரீமஸ் ஆத்திரமடைந்-தான். புது நகரின் சுற்றுச் சுவர் பாதி உயரம் கூட எழாத நிலையில்...
ஹூம்! இந்த சுற்றுச் சுவரால் என்ன பயன்? சுலபமா எதிரிகள் ஏறிக்குதித்து விடுவார்களே!
எதிரி இப்படித் தாண்டி வந்தால் என்ன செய்-வாய்?
இப்படி தாக்கி வீழ்த்து-வேன்!
ஆ!...
ரீமஸ் இறந்து விழ, ரோமுலஸ் அதிர்ச்சி அடைந்து...
ஐயோ தம்பி! உனக்கு நானே சத்ரு ஆனேனே! ஆத்திரமடைந்து, என் ஆத்திரத்-தையும் கிளப்பி விட்-டாயே!
இவ்வாறு 2700 ஆண்டுகளுக்கு முன் ரோமுலஸ் நிறுவிய ரோம் நகர், ஏழு மலைகளிலும் படர்ந்து வளர்ந்தது... பல மன்னர்கள் அரசாண்டனர்...



ஒரு கால கட்டத்தில் டார்க்வின் என்ற கொடுங்கோலனை மக்கள் துரத்தி அடித்துவிட்டு...
சர்வாதி-காரம் ஒழிந்தது!
ரோம் இனி குடியரசு!
ஆனால் டார்க்வின், அரசன் போர்சேனாவின் உதவிபெற்றுப் பெரும் படையுடன் வந்தான்...
அதோ, டைபர் நதி! அதைக் கடந்தால் ரோம் நம் வசம்!
ரோமின் மக்கள் தலைவர்கள் ஆலோசனை...
டைபரில் வெள்ளப் பெருக்கு. எதிரிகள் அதைக் கடக்க முடியாது.
பாலம் இருக்கே?
தகர்த்து விடலாம்!
ஆலோசனை முடிந்து வந்தபோது...
ஆ! பாலத்தை உடைக்கவும் நேரமில்லை. ரொம்ப நெருங்கி விட்டார்-கள்!
அப்போது ஹொரேஷியஸ்...
உயிருக்குத் துணிந்த இருவர் என்னுடன் வாருங்கள்!


அக்கரை சென்று பாலத்தின் நுழைவாசலில் நின்று...
இது குறுகலான பாலம். எதிரிகளை மூன்று மூன்று பேர்களாகச் சந்தித்து வீழ்த்து-வோம்...
இரு மன்னர்களும் படை-யுடன் அணுகி...
இது என்ன? ரோமைக் காக்க மூன்றே பேர்தானா?
ஆம்! மூன்று மூன்று பேர்களாக வந்து போரிடுங்கள்!
அவ்வாறே போர் நடந்தது...
எங்களைப் பிணமாக்கி விட்டுப் பாலத்தைக் கடந்து செல்லலாம்...
ரோம் வாழ்க!
இதற்கிடையில் - மறுபுறம் பாலத்தைத் தகர்க்கும் பணி...
சீக்கிரம்! ஹொரேஷியஸும் அவன் நண்பர்களும் எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்க முடியும்? உம்!
எதிரிப்படையில் பலரும் மடிய, பாலத்தை இடிக்கும் பணியும் முடிய...
ஹொரேஷியஸ்! ஓடி வாங்க! பாலம் விழப் போகிறது!


நீங்கள் இருவரும் முதலில் ஓடுங்கள்; நான் பின்னால் வருகிறேன்...
பாலம் மீதாக நண்பர்கள் ஓடிச் செல்ல, ஹொரேஷியஸ் தனியனாக எதிரிகளைத் தடுத்தான்...
பாலம் தகர்ந்ததும் டைபர் நதி வெள்ளத்தில் பாய்ந்தான்...
ஆ! ரோம்நகரைக் காப்பாற்றித் தந்து விட்டு நதி வெள்ளத்துக்குப் பலியானானே!
ஆனால் கடும் காயங்களையும் பொருட்படுத்தாமல் நீந்திக் கரையேறினான், ஹொரேஷியஸ்..
மாவீரன்!
என்ன நெஞ்சுரம்!
ஹொரேஷியஸ்! ரோம் நகரம் உள்ளளவும் உன் வீரம் பேசப்படும்!



அபிராமியின் சபதம்

7. அட்டிகை வருகை

பள்ளிச் சுவரில் சாணி தட்டிக் காயவைப்பதைத் தடுக்கப் போன அபிராமிக்கும், செண்பகத்துக்கும் விவாதமாகத் தொடங்கிய தகராறு பெரிய சண்டையாக உருவம் எடுத்து விட்டது.

சாணியைப் பெரிய உருண்டையாகக் கையில் உருட்டி வைத்துக் கொண்டு, தன்னை நெருங்கி வரும் அபிராமியைப் பார்த்து, ''வேண்டாம், வேண்டாம், சொல்லிட்டேன்... கிட்டே வராதே! மருவாதையா சொல்லிட்டேன்'' என்று செண்பகம் ஆவேசமாகக் கத்தி னாலும் அபிராமி நின்று விடவில்லை. வேறு யாராக இருந்தாலும் கண்டிப்பாக அப்படியே நின்றிருப்பார்கள். ஆனால், அபிராமி அப்படி நிற்கவில்லை. ''உன் னாலே என்ன முடியுமோ அதைச் செய். உம்... ஆகட்டும்.. என்ன செய்வே? மிஞ்சி மிஞ்சிப் போனா சாணி உருண் டையை வீசி அடிப்பே. அவ்வளவு தானே உன்னால் முடியும்? நான் உன் னைத் தடுக்க மாட்டேன். ஆகட்டும். ஆனா கண்டிப்பா நீ சுவத்திலே தட்டி இருக்கிற சாணியை எல்லாம் ஒன்று விடாமல் எடுத்து அப்புறப்படுத்திட்டுத் தான் மறு வேலை பார்ப்பேன்' என்று மிக உறுதியாகக் கூறிவிட்டு சுவர்ப் பக்கம் போனாள் அபிராமி.

''எங்கே? சுவத்திலே தட்டியிருக்கிற சாணியை நீ மட்டும் தொடு பார்க்க லாம்?''

''அட என்ன செய்வே? இதோ எடுத்து எறியப்போறேன் பாரு?''

சொல்லிக் கொண்டே அபிராமி, சுவரில் தட்டியிருந்த சாணியைத் தன் கையால் தொட்டாள்.

அவ்வளவுதான்! கண் மூடிக் கண் திறக்கிற நேரம் கூட இல்லை... செண் பகம், ஓங்கியிருந்த தன் கையில் இருந்த சாணியை விசினாள். ஒரு முறை மட்டு மல்ல. பல முறை தொடர்ந்து குனிந்து குனிந்து எடுத்து சாணி உருண்டையை வீசினாள். ஒன்று, இரண்டு, மூன்று... ''பட்.... பட்''டென்று அபிராமியின் முகம் கருத்து, கை, உடம்பு பூராவும் செண்பகம் அடித்த சாணி உருண்டைகள் வந்து விழுந்து ஒட்டிக் கொண்டன.

விடுதியில் உள்ள மற்ற குழந்தை கள், ''அக்கிரமம், அநியாயம்' உன்னை...'' என்று செண்பகத்துக்கு எதி

க்ஷத்தபிரான்

ராக ஆவேசக் குரல் கொடுத்துக் கொண்டு கிளம்ப, அபிராமி அவர்களைத் தடுத்தாள். முகம், உடம்பில் அப்பியிருந்த சாணியைத் தன் கைகளால் வழித்து எடுத்துக் கீழே வீசினாள். கூடவே சுவரில் ஒட்டியிருந்த சாணியையும் கையால் பெயர்த்துப் பெயர்த்துக் கீழே தள்ளிக் கொண்டே இருந்தாள். செண்பகமும் நிறுத்தவில்லை. ''வேண்டாம், வேண்டாம்'' என்று எச்சரித்துக் கொண்டே கூடையில் இருந்த சாணி உருண்டைகளை எடுத்து அபிராமியைத் தொடர்ந்து அடித்தபடி இருந்தாள். குழந்தைகள் என்ன செய்வது என்று அறியாமல் ''வேண்டாம், வேண்டாம்'' என்று கத்தியபடி நின்றார்கள்.

குயில் மட்டும், ''அபிராமி, ஏன் இப்படி அடி வாங்கிக் கிட்டுப் பேசாமே நிக்கறே?'' என்று அழாத குறையாக் கேட்டாள்.

அந்த இடத்தில் மேலும் நிற்கப் பிடிக்காமல், விவேகானந்தன் 'விர்' என்று உள்ளே ஓடிப் போனான். அது நிச்சயம் சக்கரவர்த்தி ஐயாவை அழைத்து வரத்தானிருக்கும்.

செண்பகத்துடன் இருந்த அவள் தம்பி செந்திலுக்கு, அபிராமியின் எதிர்த்துத் தாக்காத போக்கு ஆச்சரியத்தையும், சொல்ல முடியாத அதிர்ச்சியையும் தந்தது. மனத்தில் என்ன தோன்றியதோ, அவனால் இதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியவில்லை. அபிராமியிடம் வந்து, ''ஏன் பேசாமே நிக்கறே? பதிலுக்கு என் அக்கா செண்பகத்து மேலே நீயும் அடி, இந்தா'' என்று சொல்லிக் கொண்டே, கீழே கிடந்த சாணியை உருண்டையாக உருட்டி அபிராமியிடம் நீட்டினான்.

அபிராமியோ அவனைப் பார்த்து லேசாகச் சிரித்தாள். சாணி உருண்டையை வாங்கிக் கொள்ளவில்லை.

''இந்தா... பதிலுக்கு ஒருவாட்டியாவது என் அக்கா செண்பகத்தை அடி. அவள் எத்தினி தடவை உன்னை அடிக்கிறா? இம்..... அடி...'' என்று கெஞ்சினான் செந்தில்.

''திருப்பி அடிச்சா சரியாப் போயிடுமா?'' என்று கேட்டாள் அபிராமி.


''அது உன்னை எத்தினி வாட்டி அடிக்குது? இன்னும் அடிக்கக் கிட்டே இருக்கு? பதிலுக்கு ஒண்ணு கொடு. அப்போத்தான் இதைச் சண்டைன்னு



சொல்லிக்க முடியும்'', என்று செந்தில் கூறினான்.

அபிராமி பதில் பேசாமல், எதுவுமே நடக்காத மாதிரி தன் மேல் விழுந்த சாணத்தைக் கையால் துடைத்துக் கொண்டு, தன் பாவாடை, சட்டையைச் சரி செய்து கொண்டாள். முகம், கால் எல்லாம் நன்றாகத் துடைத்துக் கொண் டாள்.

இதைப் பார்த்த செந்திலுக்கு வந்ததே கோபம். ஆவேசம் வந்தவன் போல ''அப்போ நீ என் அக்கா மேலே பதிலுக்கு அடிக்க மாட்டே? அப்படித் தானே?'' என்று கேட்டான் ஆத்திரமாக.



அபிராமி செந்திலைப் பார்த்து ஆமாம் என்பது போலத் தலையசைத்தாள்.

சரி நீ அடிக்க வேண்டாம். உனக்கு பதிலா உன் சார்பில் நான் அடிக்கிறேன்'' என்று கூறிக் கொண்டே கீழேயிருந்த சாணத்தை யெடுத்து செண்பகத்தைப் பார்த்து,

''ஏய்! புத்தி கெட்ட நாயே. உன்னை...'' என்று கையை ஓங்கினான்.

அபிராமி, அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள். அதற்குள் விவேகானந்தனும், சக்ரவர்த்தியும் வேகமாக அங்கு வந்தார்கள்.

''வாங்க ஐயா வாங்க.. இந்த அநியாயத்தைப் பாருங்க. நம்ம அபிராமியை சாணியாலே அடிச்சு அவமானப் படுத்திட்டாங்க' என்று தழுதழுத்த குரலில் சொன்னாள் குயில். அழப் போகிற நிலையில் அவள் இருந்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லையே. அந்தப் பொண்ணு ஏதோ தெரியாமே செய்துட்டுது. இங்கே ஒண்ணும் நடக்கல்லே'' என்று அமைதியாகச் சொன்னாள் அபிராமி.

''பொய்... பொய்... சுத்தப் பொய்... ஐயா... நான் நடந்ததைச் சொல்றேனுங்க....'' என்று செந்தில் ஆரம்பித்தான்.

''நான்தான் ஒண்ணும் நடக்கல்லேன்னு சொல்லிக்கிட்டு இருக்கேன்லே? நீ பேசாமயிரு'' என்று அபிராமி செந்திலின் கையைப் பிடித்தவாறு சொன்னாள். அந்த அன்பு வார்த்தைகளால் செந்தில் துடித்துப் போய் விட்டான்.

''எப்படியக்கா பேசாமிருக்க முடியும்? என் அக்கா உன்னைத் திட்டி, கண்டபடி பேசி, சாணியால அடிச்சு அவமானப்படுத்தினதைப் பார்த்தும் பேசாமயிருக்க முடியுமா?'' என்று கேட்டுக் கொண்டே பெரிதாக அழத் தொடங்கினான். செண்பகமோ குற்ற உணர்வில் தலை குனிந்தபடி நின்று கொண்டு இருந்தாள்.

செந்தில், தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''ஐயா! இதோ நிக்குதே இது என் அக்காங்க. பேரு செண்பகம். என் பேரு செந்தில். நாங்க வேணும்னு தான் பள்ளிக்கூட சுவத்திலே சாணியைத் தட்டினோம். இல்லேன்னு சொல்லல்லே. நாங்க செய்தது தப்புன்னு சொல்லிப் பேச வந்த இந்த அக்காவை, என் அக்கா திட்டி, சாணி உருண்டை

யாலே அடிக்கதுங்க. ஆனா! பாருங்க, இந்த அக்கா பதிலுக்கு எதுவும் செய்யாமே, பேசாமே நிக்குதுங்க. அதைப் பார்த்ததும்தான் என் மனசு கேட்கல்லே. என் அக்காவைத் திருப்பி அடின்னு கெஞ்சறேன். மாட்டேங்குது. ஒரு அடியாவது பதிலுக்கு அடிக்கச் சொல்லுங்க. வாங்கிக் கிட்டு நாங்க போயிடறோம்'' என்று சக்ரவர்த்தியிடம் புகார் செய்தான்.

இந்தச் சமயத்தில் செண்பகத்துக்கே என்ன தோன்றியதோ தெரியவில்லை, 'ஆமாமய்யா.. என் தம்பி செந்தில் சொன்னது சரிதான். பதிலுக்கு என்னை ஒரு அடியாவது அடிக்கச் சொல்லுங்க' என்று சக்ரவர்த்தியிடம் கெஞ்சினாள்.

''இதோ பாரும்மா, நீ செய்தது தப்புத்தானே?'' என்று சக்ரவர்த்தி கேட்டார்.

''ஆமாமய்யா. ஏதோ ஆத்திரத்திலே அப்படிச் செய்துட்டேன். தப்புத் தாங்க'' என்று கண்கலங்கினாள் செண்பகம்.

சற்று முன் ஆத்திரத்தோடு சாணி எறிந்த சிறுமி அவள்தானா என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டது!

''அப்புறம் என்னம்மா?'' என்று கேட்டார் சக்ரவர்த்தி அபிராமியைப் பார்த்து.

''செண்பகம், உன் தப்பு உனக்கு நல்லாப் புரியணுங்கிறதுக்காகத்தான் நான் பேசாமேயிருந்தேன். நீ செஞ்சது தப்பு. தப்பைத் தட்டிக் கேட்கணும் என் பதற்காக நானும் ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு உன்னை மாதிரியே நடந்



துகிட்டா அப்புறம் என்னாயிருக்கும்? உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டாள் அபிராமி.

''நல்ல சொன்னே... வித்யாசமிருக்கு என்பதை நிரூபிக்கக் காட்டிட்டே அபிராமி'' என்றாள் செண்பகம்.

''நீ படிக்கிறே..... எங்களுக்குப் படிப்பு வாசனையே கிடையாது. அதான் வித்யாசம்'' என்றான் செந்தில்.

''என்ன! நீங்க படிக்கலையா?'' என்று சக்ரவர்த்தி அதிர்ச்சியோடு கேட்டார்.

''எங்க வீட்டிலே எங்களைப் படிக்கவைக்க இஷ்டமில்லை. அதுக்குப் பதிலா மாடுகளைக் கொடுத்து அலைய வைக்கிறாங்க. நல்லதும் தெரியல்லே... கெட்டதும் புரியல்லே'' என்று தங்கள் குறைகளை செந்திலும், செண்பகமும் சொன்னது ஒருவிதத்தில் அவர்களுக்கு நல்லதாகவே அமைந்தது. செண்பகமும், செந்திலும் உடனேயே பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

வேலூர் சண்டை நல்லவிதமாக முடிந்தது. மறுநாள் காலை நேரம், பள்ளி வகுப்புகள் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் நடுத்தர வயதுடைய மனிதர் ஒருவர், சக்ரவர்த்தியைக் காண வந்தார். அவர் வேறு யாருமில்லை. தீபன்தான். அபிராமி திக்கற்றவளாக நின்ற நேரத்தில் முழு ஆதரவும், அன்பும் தந்து மகள் போல் காப்பாற்றிய அதே தீபன்தான்.

தீபன் முதலில் சக்ரவர்த்தியைத்தான் வந்து சந்தித்தார். ''நமஸ்காரங்க. நான் தீபன் வடக்கே இருந்து வர்றேன். இங்கே அன்பு இல்லத்திலே படிக்கிற அபிராமிக்கு...'' என்று ஆரம்பித்தார்.

''அடடே! நீங்கதான் அந்தத் தீபனா? வாங்க! வாங்க, உட்காருங்க. அபிராமி உங்களைப் பத்தி எல்லாம் நிறையச் சொல்லி இருக்கா'' என்று அன்புடன் அவரை வரவேற்றார் சக்ரவர்த்தி.

''அபிராமி எப்படி இருக்கா?''

''ரொம்ப நல்லா இருக்கா. அபிராமியாலே எல்லாரும் சந்தோஷமா இருக்காங்க. அவள் இங்கே வந்த பிறகு இந்தப் பள்ளிக்கும், விடுதிக்கும் ஒரு தனி ஒளி ஏற்பட்டிருக்கு. ரொம்ப சுறுசுறுப்பான சிறுமி. என்ன அடக்கம்! என்ன பொறுமை! மத்தவங்களுக்கு ஒண்ணுன்னா அபிராமியாலே பொறுக்கவே முடியாது. உதவி செய்ய 'டா'ன்னு முன்னாலே நிப்பா. ஒரு பெரிய தலைவியா வரத் தகுதியுள்ளவள்னு சொல்லலாம்.''

''அவளுடைய அப்பாவும் இதே மாதிரித்தாங்க. நல்ல மனிதர். நேர்மை



யானவர். உண்மைக்கு முதலிடம் கொடுத்தவர்.''

''அபிராமி எல்லாம் விவரமாச் சொன்னா. தான் படிச்சு, முன்னுக்கு வந்து மற்றவர்களுக்கு உதவியாயிருக் கணும்ங்கிறதுதான் அவளோட இலட் சியம். இருங்க. அபிராமியை அழைச் சுண்டு வரச் சொல்றேன்,'' என்றார் சக்ர வர்த்தி.

''இருக்கட்டுங்க. அதுக்கு முன் னாலே நான் இங்கே வந்த விஷயத்தைச் சொல்லிடறேன்.''

''என்ன விஷயம்! ரொம்ப முக்கிய மானதோ?''

''ஆமாங்க. அபிராமியோட வீட்டைக் கொள்ளையடிச்சு, பெற் றோர்களையும் கொன்னுட்டுப் போன வங்களைப் போலீஸ் புடிச்சு விசாரிச் சாங்க.''

''அப்படியா?''

''அப்படி விசாரிச்சதுலே கொள்ளை அடிச்ச எத்தனையோ பொருள்கள்லே ஒரு பொருள் மட்டும் கிடைச்சது.''

''என்னாங்க அது!''

''இதோ பாருங்க''

தீபன் தன் தோளில் மாட்டிக் கொண்டு வந்த பையிலிருந்து ஒரு பழங்கால நகைப் பெட்டியை எடுத்துத் திறந்து காண்பித்தார். அழகான நவ ரத்னக் கற்கள் பதித்த ஒரு அட்டிகை அதில் இருந்தது.

சக்ரவர்த்தி அதைப் பார்த்ததும், ''அட்டிகை ரொம்பப் பழைய காலத்து பூர்வீக நகைமாதிரி இருக்கே!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

''ஆமாம். கொள்ளை போன பொருள்களிலே இது ஒண்ணுதான் திரும்ப முழுசாக் கிடைச்சது. மற்ற பொருள்களைப் பற்றித் தகவல் எதுவு மில்லை. போலீஸில், அபிராமிக்கு நான் காப்பாளர் என்று எழுதிக் கொடுத் திருந்ததாலே, விசாரிச்சு, என் கிட் டேயே இதைக் கொடுத்தாங்க. அதை நான் உரிய வங்க கிட்டே சேர்க்கத்தான் வந்திருக் கேன். இது அபிராமிக்குச் சேர வேண்டியது. பத்திரமா நீங்களே பாது



நெஞ்சில் கொள்வீர்!

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒன்றாய்ச் சேர்வீர் திரண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
எளிதாய் என்றும் தோன்று
மூன்றும் ஒன்றும் நான்கு
முழுதும் நற்பெயர் வாங்கு
நான்கும் ஒன்றும் ஐந்து
நமது பாண்டவர் ஐந்து
ஐந்தும் ஒன்றும் ஆறு
அறிவைப் பலரிடம் கூறு.
ஆறும் ஒன்றும் ஏழு
அன்பாய் நன்றாய் வாழு
ஏழும் ஒன்றும் எட்டு
எண்ணிச் சொல்வாய் கிட்டு
எட்டும் ஒன்றும் ஒன்பது
இருப்பதை சமமாய் உண்பது
ஒன்பதும் ஒன்றும் பத்து
ஒழுக்கம் உங்கள் சொத்து
பத்தை நெஞ்சில் கொள்வீர்
பாங்காய் உலகை வெல்வீர்.

– வேட்டைநல்லூர் தமிழன்பன்.

காத்து வைச்சு, சமயம் வரும்போது அவளுக்கு உபயோகப்படும்படியாக் கொடுக்கணும். அவ இங்கேதானே இனிமே இருக்கப் போறா?'' என்று நீபன் கேட்டார்.

''இந்தக் காலத்தில் இவ்வளவு உண்மையா இருக்கிற உங்களை மாதிரி மனிதர்களைப் பார்க்கும் போது, எத்தனை பெருமையா, மகிழ்ச்சியா இருக்கு தெரியுமா?'' என்று சக்ரவர்த்தி நீபனின் நேர்மையைப் புகழ்ந்தார்.

நீபன் நகைப் பெட்டியை சக்ரவர்த்தியிடம் கொடுத்தார்.

பெட்டியை வாங்கிக் கொண்ட சக்ரவர்த்தி, ''போயி, நம்ம அபிராமியை உடனே அழைச்சுக்கிட்டுவாங்க'' என்று பணியாளருக்கு உத்தரவிட்டார்.


அபிராமி வந்தாள். ''நீபன் அங்கிள்! நீங்களா'' என்று ஓடிவந்து அப்படியே அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

''ஏம்மா அழறே? ஐயா உன்னைப் பத்தி உயர்வாச் சொன்ன போது, எனக்கு எவ்வளவு பெருமையா இருந்தது தெரியுமா?'' என்று சொன்ன நீபன், அபிராமியின் கண்களைத் துடைத்து அவளைத் தேற்றினார். பிறகு அபிராமி யின் கதையைச் சுருக்கமாகச் சக்ரவர்த்திக்குச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் நீபன்.

நீபனை வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு அபிராமி திரும்பி வரும் போது, ''சக்ரவர்த்தி! சக்ரவர்த்தி! என்று அழைத்தவாறே எதிரே வந்தார் பொன்னுரங்கம்.

அன்பு இல்லம் அவரது ஆதரவில் தானே நடந்து வந்தது. அபிராமி அவரைக் கண்டதும் பணிவோடு, வணங்கினாள். பாவம்! அவருடைய ஆதரவை விரைவில் இழக்கப் போகி றோம் என்ற உண்மை அப்பொழுது அவளுக்கு எப்படித் தெரியும்!

(தொடரும்)




''ஒன்பது மாடிக் கட்டடத்தைப் போன வாரம் ஆரம்பிச்சு இந்த வாரம் முடிச்சிட்டாங்க!''

''அதிசயமாயிருக்கே!''

''வெள்ளையடிச்சதைச் சொல்றேன்!''

- ஏ. ஹரிகிருஷ்ணன்.



''ஏன் இப்படி ஆடாமல் அசையாமல் ஒரு வாரமா ஒத்தைக் கால்லே நிக்கறே?''

''கின்னஸிலே பேர் வர வழைக்கப் போறேன்!''

- க. ராஜேந்திரன்.

''ஏங்க... 23 'ஈ' போயிடுச்சா?''

''சரியா எண்ணலையே... ஒரு பதினஞ்சு, இருபது ஈ போயிருக்கும்!''


- இரா.ஆ. தென்றல் நிலவன்.






உலகம் வாழ ஒளியையும்,
உயிர்கள் வாழ உணவையும்,
தருமோர் தெய்வம் கதிரவன்
தாள் பணிந்து போற்றும் நாள்!

அன்புடனே நமக் கெல்லாம்,
அளவில்லாமல் உதவிடும்,
நண்பனான ஞாயிறை,
நன்றியோடு போற்றும் நாள்!



உழவர் தங்கள் வயலிலே,
உயர் விளைச்சல் பெருகவே,
உதவி செய்த கதிரவன்,
உன்னதத்தைப் போற்றும் நாள்!

கழனியிலே உடல் நோக,
கடுமையாக உழைத்திடும்,
உழவு மாட்டைப் போற்றவே,
உற்ற மாட்டுப் பொங்கலாம்!!



கதிரவனைப் போற்றுவோம்!
கால்நடைகள் போற்றுவோம்!
உதிரம் சிந்த உழைக்கும் நம்
உழவரையும் போற்றுவோம்!



வள்ளுவரின் பிறந்த நாள்
வருவதிந்த நாளில் தான்!
தெள்ளு தமிழ்ப் புலவனை
தேர்ந்து நாமும் போற்றுவோம்!

- முருகனடிமை கந்ததாசன்.



விந்தியமலைச்சாரலின் அடர்ந்த பள்ளத் தாக்கில் வீரசிம்மன் தன் பெற்றோர்களுடன் வசித்து வந்தான். காட்டின் தென் பகுதியில் அவர்களுக்குச் சொந்தமாக சிறு நிலம் இருந்தது. அதில் நெல் பயிரிட்டு வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய தேவைகள் குறைவாக இருந்ததால் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

வீரசிம்மன், பெயருக்கு ஏற்றபடி வீரத்தின் சிகரமாகவே இருந்தான். பெற்றோர்களுக்கு உதவியாக

தங்க வால் குரங்கு!

அவன் கடுமையாக நிலத்தில் உழைத்தான். அதோடு வீரசிம்மன் கருணை மிக்கவனாகவும் இருந்தான்.

ஒருமுறை காட்டில் பலாப்பழம் பறிக்கப் போன வீரசிம்மன், களைப்பு மிகுதியால் ஒரு மரத்தடியில் படுத்து, தன்னையும் மீறி உறங்கி விட்டான். ஏதோ சத்தம் கேட்டு அவன் கண்விழித்துப் பார்த்த போது திகைக்கக்கூடிய ஒரு காட்சியைக் கண்டான்.

ஐந்து தலை மலைப் பாம்பு ஒன்று, குரங்குக் குட்டி ஒன்றைச் சுற்றி வளைத்து இறுக்கிக் கொண்டிருந்தது. மலைப் பாம்பின் பிடியில் சிக்கி, குரங்குக் குட்டி தவித்துக் கொண்டிருந்தது. குரங்கின் வாய் மட்டும் ''கீகீகீ'' வென்று ஈன ஸ்வரமாக இருந்தது!

குரங்குக் குட்டியின் தவிப்பைப் பார்த்து மனமிரங்கிய வீரசிம்மன், அந்த ஐந்து தலை மலைப் பாம்பிடமிருந்து குரங்குக் குட்டியைக் காப்பாற்ற முடிவு செய்தான். கத்தியை உருவிக் கொண்டு அவன் மலைப் பாம்பின் மீது பாய்ந்தான்.

''நில் வீரசிம்மா'' என்று அவனைத் தடுத்தது மலைப் பாம்பு.

வீரசிம்மன் திகைத்துப் போய் நின்றான்.

''உனக்கு உள்ள இரக்க குணத்தைப் பாராட்டுகிறேன். குரங்குக் குட்டியைக் காப்பாற்ற நீ என்னை வெட்டப் போகிறாய். அதற்கு முன் ஒரு வார்த்தை. நான் ஒரு வாரமாகப் பட்டினி. ஏதாவது இரை கிடைக்காதா என்று காத்துக் கொண்டிருக்கிறேன். எதேச்சையாக இந்தக் குரங்கு சிக்கிக் கொண்டது. ஆனால்

சின்னபாபு

கைக்கு எட்டியதை வாய்க்குக் கிடைக்காமல் நீ தடுக்க வந்திருக்கிறாய். நீ என்னைக் கொல்ல வேண்டாம். நானே குரங்கை விட்டு விடுகிறேன். ஆனால் எனக்கு ஒரு வழி சொல். என் பசிக்கு ஒரு இரை கொடு. இந்தத் தங்கவால் குரங்கைப் போலவே நானும் ஒரு உயிர் என்பதை நினைத்து என்னிடமும் இரக்கம் காட்டு'' என்று வேண்டிக் கொண்டது ஐந்து தலை மலைப் பாம்பு.

பாம்பின் வேண்டுகோளில் இருந்த நியாயத்தை உணர்ந்த வீரசிம்மன், ''குரங்கை விட்டு விடு. என் வீட்டில் பசு இருக்கிறது. கோழி இருக்கிறது. நான் வீட்டுக்குப் போய் இரண்டு கோழி முட்டையும், ஒரு கிண்ணம் பாலும் கொண்டு வருகிறேன்'' என்று சிட்டாகப் பறந்து இரண்டையும் எடுத்து வந்தான்.

பாம்பு அவனது இரக்க குணத்திற்குத் தலைவணங்கி விட்டுக் காட்டில் புகுந்து மறைந்தது.

''ஒரு குரங்கின் உயிரைக் காக்க இவ்வளவு பாடுபடும் ஒரு அதிசய மனிதனை இப்பொழுதுதான் நான் பார்க்கிறேன். உங்களுக்கு எப்படி நன்றி கூறுவது என்று தெரியவில்லை'' என்று கண்கலங்கி விடைபெற்றுச் சென்றது தங்கவால் குரங்கு.

அடுத்த ஆண்டு மழை பெய்யாததால் கோடை கடுமையாக இருந்தது. காட்டில் உள்ள மரங்களெல்லாம் வாடி வதங்கின. சாப்பிடக் கூட உணவு கிடைக்காது வீரசிம்மன் பெற்றோருடன் மிகவும் அவதிப்பட்டான். சேமிப்பில் இருந்த தானியங்களை அவர்கள் பசியுடன் வரும் வழிப்போக்கர்களுக்குக் கொடுத்து உதவியதால் இப்பொழுது மிகவும் அவதிப்பட்டனர்.

அன்று நிலைமை மிகவும் மோசம். அந்த நிலை நீடித்தால் அந்த இடத்தை விட்டு வேறு தொழில் தேடி ஊருக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு மூவரும் வந்தனர். அப்பாவும் அம்மாவும் மூட்டை முடிச்சுகளைக் கட்ட, வீரசிம்மன் பசுவுக்கு ஏதாவது தீனி கிடைக்குமா என்று பார்த்து வரக் கிளம்பினான்.

வீரசிம்மன் மாலையில் திரும்பி வந்த போது அவன் முதுகில் ஒரு கட்டு காட்டுக் கீரை இருந்தது. அதைப் பசுவிடம் போட வீரசிம்மன் இறக்கினான்.



அந்த நேரத்தில் அங்கே ஒரு அழகான பெண் வந்தாள். கொள்ளை அழகு. பார்த்தாலே அரச குமாரி மாதிரி இருந்தது.

''ஐயா, அந்தக் கீரைக் கட்டை எனக்குக் கொடுங்கள். எத்தனை விலை கேட்டாலும் நான் தருகிறேன்'' என்றாள் அந்த அழகி.

''எத்தனை பொன் கொடுப்பதாக இருந்தாலும் இதைத் தர மாட்டேன். இதை எங்கள் பசுவுக்காகத் தேடி அலைந்து கொண்டு வந்திருக்கிறேன்'' என்றான் வீரசிம்மன்.

''இதென்ன பைத்தியக்காரத்தனம்! இந்தக் கீரையைச் சமைத்தால் ஒருவராவது வயறு நிரம்பச் சாப்பிடலாம். இந்



தக் கீரை உணவைக் கொண்டு உங்கள் வயதான தந்தையாரையோ, தாயையோ, இல்லை நீங்களோ சாப்பிட்டுப் பசியாறலாம். இதையெல்லாம் விட்டு விட்டு இந்தப் பசுவுக்குக் கீரையைப் போடப் போகிறேன் என்பது எத்தனை பைத்தியக்காரத்தனம்?'' என்று கேட்டாள் அழகி.

வீரசிம்மன் அழகியை வெறுப்புடன் நோக்கினான். ''இந்தப் பசு இத்தனை காலமும் எங்களுக்குப் பால் தந்து உதவியிருக்கிறது. அதைக் காக்க வேண்டியது எங்கள் முதல் கடமை. பசு, பசியாறாமல் என் பெற்றோர் இந்தக் கீரையைச் சாப்பிட மாட்டார்கள். அதே போல் என் பெற்றோர் பசியாறாமல் நானும் உண்ண மாட்டேன்'' என்று கூறிய வீரசிம்மன், கீரைக் கட்டைப் பசுவிடம் போட்டான்.

அந்தச் சமயத்தில் அங்கே ஒரு அதிசயம் நடந்தது. பசியால் துடித்துக் கொண்டிருந்த அந்தப் பசு, தனக்கு முன்னால் போடப்பட்ட கீரைக் கட்டைச் சாப்பிடவில்லை. வாயில் அதைக் கௌவிக் கொண்டு, வீரசிம்மனின் பெற்றோர் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திற்கு வந்தது. அவர்களிடம் அந்தக் கட்டைப் போட்டுக் கண்ணீர் விட்டது!

''எங்கள் வீட்டுப் பசுவின் நன்றி உணர்வைப் பார்த்தீர்களா? என் பெற்றோரைப் பட்டினி போட வைத்து விட்டுத் தான் மட்டும் பசியாற எங்கள் பசு விரும்பவில்லை'' என்று பெருமிதத்தோடு அழகியிடம் கூறினான் வீரசிம்மன்.

''ஐயா, உங்கள் குடும்பத்தைப் பற்றியும், உங்களைப் பற்றியும், உங்கள் பசுவைப் பற்றியும் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உங்களுக்கு உதவ நான் ஆசைப்படுகிறேன். எனக்கு ஒரு தவலை வேண்டும்'' என்று கூறிய அழகி, வீரசிம்மனின் எளிய குடிசைக்குள் தானாகவே வந்தாள். சமையலறைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டாள். சிறிது நேரமானது. அழகி திரும்பி வந்த போது அவள் கையில் இரண்டு தங்கக் கட்டிகள் இருந்தன.

''ஐயா, இதை நகரத்திற்குக் கொண்டு போய் விற்றால் இரண்டு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை வாங்கி வரலாம். மகிழ்ச்சியாக இருக்கலாம்'' என்றாள்.

வீரசிம்மன் அதை ஏற்கவில்லை.

''மற்றவர்கள் எல்லாம் பசியோடு தவிக்க, நாங்கள் மட்டும் பசியாற உண்டு வாழ நான் விரும்பவில்லை. உங்களுக்கு மறுப்பு இல்லை என்றால் இதைக் கொண்டு, கஞ்சி காய்ச்சி எல்லோருக்கும் தருகிறேன்'' என்றான்.



''ஐயா, உங்களைப் போன்ற ஒரு நல்லவரை நான் இதுவரை பார்த்ததே யில்லை. நான் தினமும் இரண்டு தங்கக் கட்டிகள் தருகிறேன். உங்கள் விருப்பப் படி எல்லோரையும் பரியாற வையுங் கள்'' என்று அழகி கேட்டுக் கொண் டாள்.

அன்றிலிருந்து அந்த அழகி அங் கேயே அவர்களுடன் தங்கினாள். தினமும் சமையலறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டு சிறிது நேரம் இருப்பாள். திரும்பி வரும் போது அவள் கையில் இரண்டு தங்கக்கட்டிகள் இருக்கும்.

''எங்கிருந்து தினமும் உங்களுக்குத் தங்கக் கட்டிகள் கிடைக்கின்றன?'' என்று கேட்டான் வீரசிம்மன்.

''அது இரகசியம். அதை மட்டும் கேட்காதீர்கள். அது மட்டுமல்ல, நான் கதவை மூடி இருக்கும் போது, கதவைத் திறந்து என்ன செய்கிறேன் என்பதையும் பார்க்க முயற்சி செய்யாதீர்கள். பெரிய ஆபத்தாக முடியும்'' என்று அழகி வேண்டிக் கொண்டாள்.

அழகி, தினமும் இரண்டு தங்கக் கட்டிகளைக் கொடுப்பதோடு நின்று விடவில்லை. வீரசிம்மனின் பெற்றோர் களுக்குத் தேவையானவற்றைத் தானே கவனித்துக் கொண்டாள். தானே சமைத் தாள். அவர்களுக்கும் கொடுத்தாள். வீர சிம்மனின் உடைகளில் இருந்த கிழிசல் களைத் தைத்தாள். தினமும் துணிகளைத் தோய்த்து மடித்து வைத்தாள். இரவில் அவன் பெற்றோர்களுக்குக் கால் பிடித் துத் தூங்க வைத்தாள். பகலையும் அன் போடு கவனித்துக் கொண்டாள்.

மொத்தத்தில், வீரசிம்மனுக்கு ஒரு மனைவி இருந்தால் என்னவெல்லாம் செய்வாளோ, அத்தனையையும் அவள் அந்தக் குடும்பத்திற்குச் செய்தாள். அழகி இல்லாமல் எதுவுமே அந்த வீட் டில் நடக்காது என்ற நிலைக்கு எல்லோ ரும் வந்து விட்டனர்.

''என் மேலும், என் குடும்பத்தின் மேலும் இத்தனை அன்பாக இருக்கும் நீங்கள், ஏன் என்னைத் திருமணம் செய்து கொண்டு இந்தக் குடும்பத்தின் மருமகளாகி விடக்கூடாது?'' என்று ஒரு நாள் கேட்டான் வீரசிம்மன்.

''அதற்கு இன்னும் காலம் வர வில்லை. அதுவரை சிறிது பொறுத் திருங்கள்'' என்றாள் அழகி.

ஒருநாள் அழகி தங்கக் கட்டிகளைக் கொண்டு வர அறைக்குள் சென்றிருந் தாள். கதவுகள் மூடியிருந்தன. தங்கக் கட்டிகள் அவளுக்கு எங்கிருந்து கிடைக் கின்றன என்பதை அறிய ஆவ லாக இருந்த வீரசிம்மன், ஆவலை அடக்க



முடியாது திடீரென்று கதவுகளைத் திறந்து விட்டான்.

அறைக்குள் அழகி இல்லை. ஐந்து தலைப் பாம்பிடமிருந்து அவன் காப்பாற்றிய தங்க வால் குரங்குதான் இருந்தது! ஒரு கத்தியால் அது தன் தங்க வாலைத் தானே நறுக்கிக் கொண்டிருந்தது! வீரசிம்மன் காப்பாற்றிய போது மிக நீளமாக இருந்த அதன் தங்கவால், இப்பொழுது சாண் அளவுக்குக் குறைந்திருந்தது! தினமும் நறுக்கினால், குறையாமலா இருக்கும்?


வீரசிம்மனைக் கண்டதும் குரங்கு அழுது கண்ணீர் விட்டது.


''என்ன காரியம் செய்து விட்டீர்கள்? நான் ஒரு தேவதை. சாபத்தால் தங்க வால் குரங்கானேன். நல்ல காரியங்களுக்குப் பயன்பட, சுயநலமில்லாத ஒருவருக்கு என்னுடைய வாலில் இருந்து நானே தினமும் நறுக்கிக் கொடுத்து வந்து என் வாலைக் கடைசி வரை நானே இல்லாது செய்து விட்டால், எனக்கு சுய உருவம் கிடைத்து விடும். நான் வாலை நறுக்கிக் கொடுப்பதை யாராவது பார்த்து விட்டால் வால் பழைய அளவுக்கு மறுபடி வளர்ந்து விடும். இன்னும் இரண்டு நாட்களில் எனக்கு சாப விமோசனம் கிடைத்து விடும் என்று மகிழ்ச்சியாக இருந்தேன். அதற்குள் இப்படி அவசரப்பட்டு விட்டீர்களே!'' என்று தங்கவால் குரங்கு அழுதது.

''இதற்கு மாற்று வழியே இல்லையோ?'' என்று துயரத்துடன் கேட்டான் வீரசிம்மன்.

''இருக்கிறது. என்னைத் திருமணம் செய்து கொண்டு, இந்தக் குரங்குதான் என் மனைவி என்று ஆயிரம் பேரிடம் பெருமையோடும், அன்போடும் என்னை அறிமுகப்படுத்தினால் எனக்கு சுயஉருவம் கிடைத்து விடும். ஒரு குரங்கை எவனாவது தன் மனைவி என்று பெருமையோடு கூறுவானா?'' என்று கேட்டது குரங்கு.

''நான் இருக்கிறேன். கிளம்பு'' என்றான் வீரசிம்மன் மகிழ்ச்சியோடு.





போய் வா, செந்தில்!

"அம்மா, மணி ஐந்தரை ஆயிட்டுது. ஒரு அரைமணி நேரம் விளையாடிட்டு வந்துடறேம்மா," கெஞ்சினான் செந்தில்.

அம்மா ஒரு முறை முறைத்தாள். "அதெல்லாம் கூடாது. அரைமணி நேரம்னா அரைமணி. அந்த நேரத்திலே படித்தால் அரை மார்க் அதிகமா கிடைக்கலாம், புரிகிறதா?"

செந்தில் மௌனமாகப் பாட புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டான்.

ஊர் உலகத்திலுள்ள அவ்வளவு சிறுவர்களும் விளையாடும் போது அவனுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படுகிறது. அவனென்ன, குறைவாக மதிப்பெண் பெறுபவனா! எது எப்படியானாலும் வகுப்பில் முதலாவதாக வரும் மாணவன் அவன். தொண்ணூற்றைந்துக்குக் குறைவாக அவன் எடுப்பதே கிடையாது. ஆனாலும், அவன் தாய்.....!

அவளுக்கு, அவன் அரை மார்க் ஒரு மார்க் குறைவால் பெரிய படிப்பு படிக்க முடியாமல் போய்விடக் கூடாதே என்ற அச்சம். இன்றைய நிலையில் நுழைவுத் தேர்வுகளில் கடுமையான போட்டி அல்லவா நிலவுகிறது!

அவனுடைய கவனம் படிப்பில் நிலைக்காமல் அலை பாய்ந்து கொண்டே இருக்கையில், அவனது தந்தை அலுவலகத்திலிருந்து வந்து சேர்ந்தார்.

"என்ன! இவ்வளவு காரமாகச் சட்னி வைத்தாய்! இன்னமும் நாக்கு எரிகிறது", என்று அம்மாவிடம் குறைபட்டுக் கொண்டார் அவர்.

அம்மா தலையில் கை வைத்துக் கொண்டாள். "கொஞ்சம் காரம் கூட ஆயிட்டுது. அதற்குப் போய்..."

"இல்லை! காரம் சாப்பிட்டுப் பழக்கம் இல்லை இல்லியா எனக்கு?" என்றார் அப்பா.

"ஆமாங்க! பழக்கம் இல்லைன்னா எதுவுமே கஷ்டம்தான். இன்றைக்கு மின்சாரம் இல்லாததால் அரைவை இயந்திரத்தில் அரைக்க முடியலே. ஆட்டுக்கல்லில் கையால் தோசைக்கு அரைத்தேனா. தோளெல்லாம் வலித்து இசிக்கிறது", என்றாள் அம்மா.

"வாஸ்தவம். உடம்பை நன்கு பழக்கப்படுத்தி வைத்துக் கொண்டால் தான் சமய சமயத்திற்கு அது சொன்ன படி கேட்கும்", என்றார் அப்பா.

அம்மா திரும்பிப் பார்த்தவள் செந்தில் தன்னையே பார்ப்பதைக் கண்டாள். அந்தப் பார்வையிலிருந்த கேள்வி அவளை ஒரு கணம் சிந்திக்க வைத்தது.

"செந்தில்! நாளை முதல் மாலையில் ஒரு மணி நேரம் நன்றாக விளையாடிவிட்டு வா. எவ்வளவு படிப்பு இருந்தாலும் பணம் இருந்தாலும், உடம்பு நன்றாக இருந்தால்தான் அவற்றையெல்லாம் உபயோகப்படுத்த முடியும்", என்று புதுமையாகக் கூறிய அம்மாவைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தான் செந்தில்.

– கைலாஸ், திருநெல்வேலி.

கேளுங்கள்

★ உலகின் முதல் பேசும் திரைப்படம் எது? இது எந்த ஆண்டு திரையிடப் பட்டது? - வெ. மாலதி, வெ. தியாகு, சத்தியமங்கலம் மற்றும் பலர்.

உலகின் முதல் பேசும் படம் "LIGHTS OF NEWYORK" என்பது. இது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது. திரையிடப்பட்ட ஆண்டு 1928. ஜூலை மாதம்.

★ குளிர், வெப்ப மாற்றங்களைக் குறிப்பிடும் போது IGY என்று குறிப்பிடுகிறார்களே. இது என்ன?

INTER NATIONAL GEOGRAPHYSICAL YEAR என்பது இதன் விரிவாக்கம். அதாவது இந்த ஆண்டின் (1st July 1957 — 31st Dec 1958) ஆய்வின்படி முடிவு செய்யப்பட்ட தகவல்களின் அடிப்படையில் என்பது இதன் பொருள்.

★ தெரு விளக்குகள் எப்பொழுது போடப்பட்டன? - கு. முத்தையன், சங்கர நாயனார்கோவில்.

மின்சாரத் தெரு விளக்குகளைத்தானே கேட்கிறாய்? மின்சாரத் தெரு விளக்குகளைப் போடும் வழக்கம் இங்கிலாந்தில் நியூகேசில் அபான் டைன் என்ற இடத்தில் 1881 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

★ அப்பாக்கள் தினம் (Fathers Day) என்பது இந்தியாவில் கொண்டாடப்படுகிறதா? - வெ. லோகநாதன், பரங்கிப் பேட்டை.

இல்லை. அமெரிக்காவில்தான் இது ஜூன் 19 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இதை ஆரம்பித்து வைத்த பெருமைக்கு உரியவர் ஜான் புரூஸ் என்ற பெண்மணி.


★ பத்துக் கட்டளைகள் (Ten Commandments) என்ற புகழ்பெற்ற திரைப்படத்தை எடுத்த சிசில் பி. டெமில் இப்பொழுது இருக்கிறாரா? - மு. தெய்வ நாயகி, பிள்ளையார்பட்டி.


இல்லை. இவர் 1959 ஆம் ஆண்டில் மறைந்து விட்டார். ஆனால் இவர் தயாரித்த சாம்சன் அண்டு டிலைலாவும், டென் கமெண்டுமெண்ட்சும் காலத்தை வென்று இன்றும் மக்களால் ரசிக்கப் படுகின்றன.

★ எந்தத் தலைவருடைய சிலை அதிக அளவுக்கு வைக்கப்பட்டுள்ளது? - ஊ. காந்திமதி, திருநெல்வேலி - 2.

தமிழ்நாட்டில், என்றால் அறிஞர் அண்ணாவின் சிலைகள்தான் (30 ஆயிரம்!).







சேரநம்பி

இந்திய அளவில் என்றால் டாக்டர் அம்பேத்கார். (மூன்று இலட்சத்திற்கு மேல்).

★ செயற்கைக் கோள் வாயிலாகக் கல்வி ஒளிபரப்பு இந்தியாவில் எப்பொழுது தொடங்கப்பட்டது? - து. சபாநாயகம், சீர்காழி புதுநகர்.

1974-ஆம் ஆண்டு மே 30 ஆம் நாள் இந்தியாவில் செயற்கைக் கோள் வாயிலாகக் கல்வி ஒளிபரப்பு தொலைக் காட்சியில் தொடங்கப் பட்டது. இந்த செயற்கைக் கோளின் பெயர் A.T.S.6.



★ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் திரைப்படம் எது? - பி. துரைவேலன், காங்கேயம்.

ஆலம் ஆரா என்ற இந்தி பேசும் படமே இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் திரைப்படம். தயாரான ஆண்டு 1931.

★ இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனை எப்பொழுது நிகழ்த்தப்பட்டது? - நே. ஜோசப், பாளையம் கோட்டை.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பொக்கரான் என்ற மாநிலத்தில் இந்த அணுகுண்டு சோதனை 1974-ஆம் ஆண்டு மே 18-ஆம் நாள் நிகழ்த்தப்பட்டது.

★ காரில் இருந்தபடியே திரைப்படத்தைப் பார்க்கும் ''டிரைவ் இன் சினிமா'' முதன் முதலில் எந்த நாட்டில் ஆரம்பிக்கப் பட்டது? - கு. மனோன் மணி, பழனி.

''டிரைவ் இன் சினிமா'' அமெரிக்காவின் நியூஜெர்சியில் உள்ள காம்டென் என்ற ஊரில் 1933 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.


★ முதல் உலகத் திரைப்பட விழாவை எந்த நாடு நடத்தியது? - ஆ. பரணிகுமார், மேட்டுப்பாளையம்.

முதல் உலகத் திரைப் பட விழா வெனிசில் 1932-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

★ இந்தியாவுக்கு தொலைக்காட்சி எப்பொழுது வந்தது? எந்த ஊரில் இதன் முதல் ஒளி பரப்பு நிலையம் அமைக்



சொல்லப்படும்!





கப்பட்டது? - ஓ. விருத்தகிரி, கரூர்.
1965-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்த ஒளிபரப்பு துவங்கப்பட்டது. முதல் ஒளிபரப்பு நிலையம் டில்லியில் அமைக்கப்பட்டது.

★ இந்தியாவில் ரயில் போக்கு எப்பொழுது எங்கு தொடங்கப்பட்டது? முதல் ரயிலில் எத்தனை பேர் பயணம் செய்தனர்? - பூண்டி க. முஸ்தாபா, துங்காபுரம் எஸ். அலமேலு மற்றும் பலர்.
இந்தியாவில் முதல் ரயில் போக்குவரத்து பம்பாய்க்கும் தானா ரயில் நிலையத்திற்குகம் இடையே நடைபெற்றது. ஆண்டு 1853 நாள் ஏப்ரல் 16 பிற்பகல். முதல் ரயிலில் பயணம் செய்தவர்கள் ரயில் டிரைவர் ஃபையர்மேன் உட்பட 402 பேர்.

★ உலகின் முதல் பெண் பிரதமர் யார்? - பூ. யமுனா, பூ. நர்மதா, தூத்துக்குடி.
உலகின் முதல் பெண் பிரதமரைத் தந்த பெருமைக்கு உரிய நாடு ஸ்ரீலங்கா. பெயர் சிரிமாவோ பண்டாரநாயகா. இவர், தனது கணவர் பண்டாரநாயகா படுகொலை செய்யப்பட்டவுடன் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதமரான நாள் 1960 ஆம் ஆண்டு, ஜூலை 21.

★ அதிக எண்ணிக்கையிலான மக்களது உயிர்களைப் பலி கொண்ட பூகம்பம் எது? - மு. ஆரோக்கிய ஜார்ஜ், திருவண்ணா மலை.
1978 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சீனாவில் ஹோப்போ என்ற மாநிலத்தில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. இதில் உயிரிழந்தவர்கள் தொகை ஆறு இலட்சத்திற்கும் மேல்! இதை மிஞ்சக் கூடிய பூகம்பம் இது வரை ஏற்படவில்லை. ஏற்படாமல் இருக்க இறைவனை வேண்டிக் கொள்வோம்.





"அரண்மனைக்குப் போய்
'கிளி ஜோசியம்' சொன்னீரே,
என்ன கிடைச்சது...?"
"நூறு பொற்கிளி...!"

உடைந்த துண்டை அடையுங்கள் - போட்டி

இங்கே உள்ள கோப்பையில் ஓர் உடைசல் இருக்கிறது. இதை அடைக்க வேண்டிய பகுதி இரண்டாகி வேறு சில உடைந்த துண்டுகளுடன் கலந்து இருக்கிறது. இந்த இரண்டு துண்டுகளையும் கண்டுபிடித்து கோப்பையின் உடைந்த பகுதியில் ஒட்டி அனுப்புங்கள். பரிசு உண்டு. கூப்பனையும் கண்டிப்பாக அனுப்ப வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



உடைந்த துண்டை அடையுங்கள் - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

பின்கோடு : ....

குறிப்பு : அயல்நாட்டிலுள்ளோர் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைத் தர வேண்டும்.

முடிவு தேதி : 31.1.1994



பிருந்தாவனக் கதையரங்கம்

பொற்காசா உயர்வு?

வேலன், குப்பன் இருவரும் நண்பர்கள். இவர்கள் தொழில் மீன் பிடிப்பது. இருவரும் ஒன்றாகத்தான் செல்வார்கள்.

அன்று வேலன் ஒரு மீனைப் பிடித்தான். அதன் கழுத்து பொன்னிறமாகவும் உடல் சிகப்பு நிறத்திலும் துடுப்பும், வாலும் பச்சை நிறத்திலும் இருந்தது.

அந்த மீன் ''ஐயா என்னை விட்டு விடுங்கள். உங்களுக்கு பொற்காசுகள் தருவேன்'' என்று ஆசை வேறு காட்டியது.

''பொற்காசுகளா! உனக்கு ஏது பொற்காசுகள்?'' எனக் கேட்டான் வேலன். ''கடலிற்குள் ஒரு பெரிய குவளையில் பொற்காசுகள் உள்ளன'' என்றது மீன்.

வேலன் சம்மதித்து சற்றுத் தொலைவில் வேறொரு படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குப்புவை அழைத்தான்.

''அவனை ஏன் அழைக்கிறாய்?'' எனக் கேட்டது மீன்.

''அவன் என் உயிர் நண்பன். அவனுக்கும் பொற்காசுகள் கிடைக்கட்டுமே?'' என்றான் வேலன்.

வேலனின் நல்ல மனதை எண்ணி மீன் வியந்தது.

குப்பு படகைச் செலுத்திக் கொண்டு வந்தான். வேலன் விஷயத்தைக் கூறினான். பேராசைக்கார குப்பு உடனே சம்மதித்தான்.

''நீருக்குள் செல்லும் போது என்னைத் தொட்டபடியே வாருங்கள். எக்காரணத்தைக் கொண்டும் கையை எடுத்து விடாதீர்கள்'' என்றது மீன்.



மூவரும் புறப்பட்டார்கள். நீரின் வெகு ஆழத்தில் இருந்த போதும் அவர்களுக்கு மூச்சு முட்டவில்லை. அவர்கள் ஒரு குகையை அடைந்தார்கள். அங்கே ஒரு பெரிய பாத்திரம் நிறையப் பொற்காசுகள் இருந்தன.

''சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். ஒரே ஒரு முறைதான் பொற்காசுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது முறை எடுத்தால் அதோ அவன் நிலைதான்.''

மீன் சுட்டிக் காட்டிய இடத்தில் ஒரு எலும்புக் கூடு இருந்தது!

வேலன் ஒரு கையால் மீனைத் தொட்டபடியே ஒரு பிடி பொற்காசுகளை எடுத்துக் கொண்டான். பேராசைக்காரனான சுப்பன் நிறைய பொற்காசுகளை எடுக்க விரும்பி இரு கைகளாலும் வாரிக் கொள்ள மீனைத் தொட்டுக் கொண்டிருந்த கையை எடுக்க - அடுத்த நொடியே அவனுக்கு மூச்சுத் திணறியது. வாயிலும், மூக்கிலும் நீர் புகுந்தது. கண்கள் இருண்டன!

தான் இறந்துவிட்டதாகத்தான் சுப்பன் நினைத்தான். ஆனால் கண் திறந்த போது கரையில் படுத்திருப்பதை உணர்ந்தான். அருகே வேலன்!

''வேலா! நான் எப்படி இங்கே? நான் காண்பது கனவா?''

''கனவில்லை. நிஜம்தான். நீ பிழைத்து விட்டாய்'' என்றான் வேலன்.

''எப்படி? எப்படி நான் உயிர் பிழைத்தேன்'' என்று வியப்பாகக் கேட்டான் சுப்பன்.

''நீ மீனைத் தொட்டுக் கொண்டிருந்ததை விட்டு விட்டதால் நீரில் தடுமாறினாய். நான் என் கையிலிருந்த பொற்காசுகளைப் போட்டு விட்டு, உன் கையைப் பிடித்து மீனின் உடம்பில் வைத்தேன். அப்படியே அழைத்து வந்து விட்டேன். உன்னை விடவா எனக்குப் பொற்காசுகள் உயர்வு? கடுமையாக உழைத்தால் வேண்டியது சம்பாதிக்கலாமே?'' என்றான் வேலன்.

சுப்பனின் கண்கலங்கியது. ''நண்பனுக்காகக் கைப்பிடி பொற்காசுகளைத் தூக்கி எறிந்த நீயல்லவா நண்பன்? என் பேராசை அழிந்தது. இனி நானும் உன்னைப் போல் பொற்காசாய் இருப்பேன்'' என்றான்.

- கே. யுவராஜ், ஆரணி.

என்னுது இல்லே!

மாணவர்கள் தங்கள் கதைகளைக் கொடுக்க வேண்டிய கடைசி நாள். எல்லா மாணவர்களும் தங்கள் கற்பனைத் திறனை, காகிதத்தில் கொட்டிக்



கொண்டிருந்தார்கள். கோபி வகுப்பின் உள்ளே பிரவேசித்தான். பையை வைத்து விட்டு வெளியே போனான். அவனுடைய நண்பன்தான் சந்துரு. அவன் பக்கத்தில் உட்காருபவன்.

என்ன கதை எழுதியிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள சந்துரு கோபியின் பையில் கையை விட்டான். எடுத்துப் படித்துப் பார்த்தான். கோபி எழுதியிருந்த கதை சந்துருவைக் கவர்ந்தது. கதை மிக நன்றாக இருந்தது. அதைச் சந்துரு தன் பையில் எடுத்து வைத்துக் கொண்டான்.

சந்துருவின் மனசு லேசாகக் கனத்தது. ஆனாலும் பரிசு ஆசை அவனை அடிமைப் படுத்தியிருந்தது.

தமிழாசிரியர் எல்லா மாணவர்களின் 'கதை'களையும் வாங்கிக் கொண்டார். கோபி தன் பை முழுக்க அலசிப் பார்த்துவிட்டு கதை எழுதின தாள் கிடைக்காமல், எழுந்து நின்றான். கோபியை அழைத்த ஆசிரியர் ''உன் கதை எங்கே?'' என்று கேட்டார்.

கோபி பயத்துடன், ''சார், நான் கதை எழுதிக் கொண்டுதான் வந்தேன். பைக்குள்ளதான் வைச்சேன். ஆனா இப்பக் காணோம் சார்'' என்றான் அழுகையுடன்.

''சரி, இடை வேளையில் என்னை வந்து பாரு'' என்றார் ஆசிரியர்.

இடைவேளை. ஆசிரியர் அறை. காலையில் மாணவர்கள் கொடுத்த கதைகளை மேஜை மீது வைத்திருந்தார் ஆசிரியர். எதிரே பணிவுடன் கோபி நின்றிருந்தான்.

''உன்னோட கதை இதுல ஏதாவது இருக்கா பார்?'' என்றார் ஆசிரியர்.

கோபி நெற்றியைச் சுருக்கியபடி, ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். சரியாக அந்தத் தாள் வந்ததும் நிறுத்தினான்.

''சார் இதுதான் சார் என் கதை'' என்றான்.

ஆசிரியர் அதை வாங்கிப் பார்த்தார். ''இதில் சந்துருன்னு போட்டிருக்கே? உன்னுதுன்னு எப்படிச் சொல்றே?'' என்று கேட்டார்.

''சார்! இது என்னுதுதான் சார்? நானே சொந்தமா எழுதினது சார்'' என்று அழ ஆரம்பித்தான். ஆசிரியர் அவனைத் தேற்றி, ''நாளைக்கு இது உன்னுதுன்னு நிரூபிக்க ஒரே வழிதான் இருக்கு. சரி நீ போ?'' என்று அவனைத் தேற்றி அனுப்பி வைத்தார்.

மறுநாள்.

ஆசிரியர் சந்துருவை அழைத்தார். சந்துரு உதறலோடு வந்து நின்றான்.

''நீ எழுதின கதை ஏற்கெனவே வேறொரு பத்திரிக்கையில் வந்திருக்கே சந்துரு? இப்படி யாரும் செய்யக்கூடாதுன்னுதான் நான் ஆரம்பித்திலேயே இப்படிச் செய்தால் இருபது ரூபாய் அபராதம்னு எச்சரித்தேன்? இருந்தும், ஏற்கெனவே பத்திரிகையில் வெளியான ஒரு கதையை காப்பியடிச்சு எழுதிக் கொடுத்திருக்கே? உனக்கு எத்தனை தைரியம்? இதைப் பள்ளி மேகசினிலே போட்டா நம்ம பள்ளியின் பெருமை என்ன ஆவது? உனக்கு இருபது ரூபாய் அபராதம். நாளைக்குக் கட்டிவிடு'' என்றார்.

சந்துரு பயத்துடன் ''சார், அந்தக் கதை நான் எழுதினது இல்லே. அது கோபியோடது. கதை நல்லாயிருந்ததுன்னு எடுத்தேன். அவன் பெயரை எடுத்துவிட்டு என் பெயரைப் போட்டிருந்தேன்.''

ஆசிரியர் கோபியைப் பார்த்தார். அவன் நன்றியுணர்வோடு அவரைப் பார்த்தான்.

- -- எஸ்.ஏ. மணிவண்ணன், சென்னை.

பிள்ளையார் சிரித்தார்!

கோபுவும் சுரேஷு"ம் ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் படிக்கும் நண்பர்கள். இருவர் வீடும் அருகருகே இருந்தன. கோபுவிடம் சைக்கிள் இருந்தது. பள்ளிக்குப் போகும் போது கோபு சைக்கிளை எடுத்துக் கொண்டு சுரேஷின் வீட்டுக்கு வருவான். அவனையும் ஏற்றிக் கொண்டு பள்ளிக்குப் போவான். சில நேரங்களில் சுரேஷ் கிளம்பத் தாமத மாகும். இருந்தாலும் கோபு, காத் திருந்து அவனை அழைத்துக் கொண்டு போவான். திரும்பும் போதும் இப்படியேதான்.

ஒரு நாள் பள்ளியில் கடைசி பீரியட். கட்டுரை வகுப்பு. கோபுவின் கட்டுரை நோட்டு ஆசிரியர் கொண்டு வந்த கட்டில் இல்லை.

''கோபு உன் நோட்டு என் வீட்டில் தான் இருக்கும். பியூன் மாணிக்கத்தை அனுப்பிக் கொண்டு வரச் சொல்லுகிறேன். எத்தனை நேரமானாலும் சரி

இருந்து, கட்டுரையை முடித்துக் கொடுத்து விட்டுப் போ. அடுத்த வாரம் பள்ளி ஆய்வு நடக்கப் போகிறது'' என்றார் ஆசிரியர்.


கோபுவின் கைக்கு கட்டுரை நோட்டு வரும்போது நேரமாகி, அவன் எழுதி முடிக்கும் போது ஆறுமணியாகி விட்டது. வெளியே வந்தான். சாதாரணமாக இந்த மாதிரி நேரங்களில் பொறுமையாக அவனுக்காகக் காத்திருக்கும் சுரேஷைக் காணவில்லை. அவனைப் பார்த்த பியூன் மாணிக்கம், ''தம்பி, சுரேஷுக்கு ஏதோ அவசர வேலையாம். அதனால், தான் முதலில் போய் விடுவதாக உன்னிடம் சொல்லச் சொன்னான்'' என்றான்.

கோபுவுக்கு சிறிது ஏமாற்றமாக இருந்தது. ''அவன் எத்தனை நாட்கள் சுரேஷின் வீட்டில் காத்திருந்தது அவனை சைக்கிளில் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான்? சிறிது கூட நன்றி உணர்வு இல்லையே? எனக்காக ஒரு நாள் சிறிது நேரம் இவன் காத்திருக்கக் கூடாதா?'' என்று அவன் எண்ணினான். சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

போகும் வழியில் ஒரு பிள்ளையார் கோயில். இருவரும் போகும்போது அங்கே இறங்கி மூன்று சுற்றுச் சுற்றி விட்டுத்தான் போவார்கள். இன்று சுரேஷ் இல்லாவிட்டால் என்ன? நாம் இறங்கி சுற்றிவிட்டுப் போகலாம் என்று சைக்கிளை விட்டு இறங்கினான் கோபு.

அவனுக்கு முன்னால் சுரேஷ் கோவிலைச் சுற்றிக் கொண்டிருந்தான். இருந்த மனக்கசப்பில் சுரேஷைச் சந்திக்க விரும்பாத கோபு, தேங்காய்க் கடை ஓரமாக ஒதுங்கிக் கொண்டான். சுரேஷ் விழுந்து விழுந்து சுற்றினான். 'இவனுக்கு என்ன ஆச்சு எதற்காக இப்படிப் பிள்ளையாரைக் காக்காய் பிடிக்கிறான்!' என்று மனத்திற்குள் எண்ணிக் கொண்டான் கோபு.

இதற்குள் கோயில் வாசலில் கோபுவின் சைக்கிள் நிற்பதைக் கவனித்து விட்ட சுரேஷ், ''கோபு எங்கே இருக்கே?'' என்று குரல்



கொடுத்தான். இனியும் மறைந்திருப்பது அழகல்ல என்று எண்ணிய கோபு வெளியே வந்தான்.

''என்னடா? இத்தனை நேரமாச்சா?''

''ஆமாம்'' என்று வேண்டாவெறுப்பாகக் கூறிய கோபு, ''நீ என்னடா இன்னும் பிள்ளையாரைச் சுற்றிக்கிட்டிருக்கே? வீட்டுக்குப் போகலே?'' என்று கேட்டான்.

''நீ வராம, எப்படி கோபு போவேன்?'' என்று சிரித்தான் சுரேஷ். தொடர்ந்து ''இன்னிக்கி ஒரு வேண்டுதலை, பிள்ளையாரை நூற்றி எட்டு சுற்றுச் சுத்தறதா போன வருஷம் வேண்டிக் கொண்டேன். யாருக்காகத் தெரியுமா? உனக்காகத்தான். போன வருஷம் இதே நாளில் நீ மாடு முட்டி ஒரு வாரம் படுக்கையிலே படுத்துக் கிடந்ததை நீயே மறந்துட்டியே? அதான் இன்னைக்கு வேண்டுதலையை நிறைவேற்ற முன்னதாகவே கிளம்பி வந்தேன்'' என்றான்.

கோபுவின் கண்களில் நீர் நிறைந்தது. எப்படிப்பட்ட உயர்ந்த நண்பன்! இவனைப் போய்த் தப்பாக எண்ணி விட்டோமே?

''இருடா நானும் ஒன்பது சுற்று சுத்தறேன்'' என்றான்.

''எதுக்குடா?''

''உன்னைப் போன்ற ஒரு நண்பனைக் கொடுத்ததற்காகப் பிள்ளையாருக்கு நன்றி கூறத்தான்'' என்று சிரித்தான் கோபு. பிள்ளையாரும் சிரித்தார்.

— இரா. பிரபாகரன், பட்டுக்கோட்டை.

கல்லுக்குள் தேரை இருப்பது உண்மையா?

நம் தமிழ் மொழிப் பாடல் களிலும் வட மொழிப் பாடல் களிலும் கல்லுக்குள் தேரை இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நீங்களும் படித் திருப்பீர்கள்! உண்மையாகவே கல்லுக்குள் தேரை இருக்குமா? இருக்கிறது என்று கூறுகிறது பிரிட்டனில் வெளி யாகியுள்ள ''தற்கால மர்மங்கள்'' என்ற அந்த நூல். கல்லுக்குள் தேரை இருப்பது பற்றிய பல தகவல்கள் அதில் விவரிக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் இதுவரை கல்லுக்குள் தேரை இருப்பது கண்டறியப்பட்ட 19 நிகழ்ச்சிகள் இதில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

கட்டடங்களைக் கட்டுவதற்காகக் கல் உடைக்கும் தொழிலாளர்கள் கற்களை உடைக்கும் போது அதற் குள்ளிருந்து தேரை தாவிக் குதித்து வெளியே வருவதைப் பார்த்ததாகக் கூறுகிறார்கள். இந்த அதிசயத்தை 1699ம் ஆண்டிலேயே டாக்டர் ரிச்சர்டு ரிச்சர்ட்சன் என்பவர் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு சஸ்செக்ஸியில் உள்ள லூயிஸ் என்ற இடத்தில் ஒருமுறை கல்லை உடைத்த போது தேரை குதித்துக் கொண்டு வெளியே வந்தது. அந்தக் கல்லையும், இறந்து போன அந்தத் தேரையையும் பிரைட்டன் நகர காட்சியகத்தில் பாதுகாத்து வைத்துள்ளனர்.

கருங்கல்லுக்குள் தேரை எப்படிப் போகிறது? இது குறித்து சில விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பாறையில் காணப்படும் விரிசல்கள் மற்றும் ஓட்டைகள் வழியே தேரைகள் உள்ளே சென்றிருக்கலாம் என்றும், காலப்போக்கில் பாறையின் ஓட்டை அடைபட்டிருக்க லாம் என்றும் கூறுகின்றனர்.

ஆனால், சில சுரங்கங்களில் 600 அடிக்குக் கீழே கூட பாறைகளுக்கு நடுவே கூடத் தேரைகள் காணப்படுவது மர்மமாகவே உள்ளது. இதே போல் எந்தவொரு ஓட்டையோ அல்லது விரிசலோ இல்லாத கற்களின் உட்பகுதிக்குள் தேரைகள் இருப்பதும் புதிராகவே இருக்கிறது.


இதைவிட அதிசயமான ஒரு விஷயம். 1920ம் ஆண்டில் அமெரிக்காவில் ஆக்லஹாமா என்ற இடத்தில் பழங்கால எலும்புகளைத் தோண்டி எடுத்த போது அதற்குள் தேரைகள் இருந்தனவாம்!

இது மட்டுமா...
நிலக்கரிக்குள்ளும், பல அடி ஆழமுள்ள களி மண்ணுக்குள்ளும் மற்றும் மரங்களின் உட்பகுதியிலும் தேரைகள் உயிருடன் இருந்த சம்பவங்களும் தெரியவந்துள்ளன. இவை என்ன உணவை உண்டு, எப்படி உயிருடன் வாழ்கின்றன, வளர்கின் றன என்பது சரியாக விடுவிக்கப்பட முடியாத பெரிய புதிராக உள்ளது.

ஆனாலும் இந்தத் தேரைப் புதிரை விஞ்ஞானிகள் விடுவிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை!



–கிருஷ்ண. முத்துராமலிங்கம்



ஆமைக்குப் பற்கள் உண்டா?

டிசம்பர் மாதம் முதல் வாரம். இரவு பன்னிரண்டு மணி கடந்து விட்டது. கோடிக்கரையை அடுத்திருந்த வங்காள விரிகுடா கடல். நூற்றுக்கணக்கான ஆமைகள், கரையை நோக்கி நீந்தி வந்து கொண்டிருந்தன. எல்லாம் பெண் ஆமைகள் தான்!

''இன்னும் எத்தனை தொலைவு அக்கா நீந்தணும்? எனக்குக் கை கால்களெல்லாம் வலிகண்டு போச்சு'' என்று அலுத்துக் கொண்டது பச்சையம்மா.

''இதுதானே நீ முதல் முறையா முட்டையிட வரே? அதான் இப்படி பயப்படறே. ஆச்சு கரையை நெருங்கிட்டோம். நான் சொன்னதையெல்லாம் கவனமா நினைப்பு வைச்சுக்க. கரைக்குப் போனதும் நாம்ப முட்டையிடப் பிரிந்து விடுகிறோம். முட்டையிட ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்பது முதல் வேலை. அமைதியான இடமா இருக்கணும். குழி தோண்டணும். முன் கால்களையும் பின்கால்களையும்தான் பயன் படுத்தணும். ரண வலி வலிக்கும். முட்டையிட்டுக் குழியை மூடிட்டுத் திரும்பணும். இதற்கும் மணல்வெளியில் நடந்து தான் வரணும். முட்டையிடப் போகும் போதும் சரி, திரும்பும் போதும் சரி எத்தனை ஆபத்துகளைச் சந்திக்கணும் தெரியுமா? நாய்கள், பறவைகள், மனிதர்கள் எல்லாரும் நம்மைப் பிடித்து அழித்து விடக் காத்திருப்பார்கள். நம் வாழ்க்கையே முழுக்க அபாயம் நிறைந்ததுதான்'' என்றது அக்கா ஆமை.

கரை நெருங்கியது. ''வாய்ப்பு இருந் தால் மீண்டும் சந்திக்கலாம். கவனமா இரு'' என்று விடைபெற்றுக் கொண்டது அக்கா ஆமை.


முதல் முறையாக முட்டையிட வந்திருந்த பச்சையம்மா முன்கால்களாலும் பின்கால்களாலும் நடந்து மணல்மேட்டில் ஏறியது. அதைப் போலவே முட்டையிடத் வந்திருந்த ஏராளமான பெண் ஆமைகள் கரையேறி மணலில் முட்டையிடத் தகுந்த இடத்தைத் தேடி அலைந்து கொண்டிருந்தன.

லொடரென்று நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. அவ்வளவு தான். அடுத்த நிமிஷமே எல்லா ஆமைகளும்

ரேவதி

கடலை நோக்கித் திரும்பின. சில பாதி முட்டையிட்ட நிலை. சில முட்டையிடக் குழிதோண்டும் நிலை. இன்னும் சில பச்சையம்மாவைப் போல் முதல் முறையாக முட்டையிட வந்து இடம் தேடிய நிலை. என்னதான் முயன்றும் ஆமைகளால் வேகமாக மணல் பரப்பில் நடக்க முடியாதே! உடம்பை ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டன. அப்படியும் ஏராளமான ஆமைகள் நாய்களிடம் சிக்கி முடிவைத் தேடிக் கொண்டன.

நல்லவேளை. பச்சையம்மா தப்பித்துக் கொண்டது. கடலில் நீந்தியபடி சென்றது. பல மணிநேரம் நீந்தி முட்டையிட மறுபடியும் கரையேறியது. இப்பொழுது அது கரையேறிய இடம் ஆற்காடு துறை. கரைக்கு வந்ததும் கூர்ந்து சுற்றுப் புறத்தைக் கவனித்தது. அமைதியாக இருக்கிறதா, இல்லை விரோதிகள் இருக்கிறார்களா என்பதைக் கவனித்துப் பார்த்து உறுதி செய்து கொண்டு மணலில் சிரமப்பட்டு ஏறி அங்கும் இங்கும் அலைந்தது. அரை மணி நேர அலைச்சலுக்குப் பிறகு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தது. முன்னங்கால்களால் குப்பை கூளங்களை அகற்றியது. முன்கால்களாலும் பின்னங்கால்களாலும் மாறி மாறிக் குழிதோண்டியது. நான்கு கால்களாலும் மாறி மாறித் தோண்டி, தோண்டிய மணலை வெளியே தள்ளியது. இளநீரைப் போல் வாய் குறுகி, உள்ளே அகன்ற குழி தயாரானதும் அதற்குள் செங்குத்தாக அமர்ந்து கொண்டது. இரண்டிரண்டாக முட்டையிட ஆரம்பித்து. இருநூறு முட்டைகளுக்கு மேல் இட்டது. கடைசி முட்டையை இட்டதும் வேகமாகக் குழியை மூடத் தொடங்கியது. மேல் மணலை அடிக்கடி நன்றாக அடித்து அழுத்தம் தந்து மூடியது. எல்



லாம் முன்கால்களாலும் பின்கால்களாலும், வால் பகுதியாலும்தான். பிறகு கடலுக்குத் திரும்பத் தொடங்கியது.

பச்சையம்மாவைப் போல் ஏராளமான ஆமைகள் குழிதோண்டி முட்டையிட்டுக் கடலுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

மணல்வெளியைப் பாதி கடந்து கொண்டிருந்த பச்சையம்மா நின்று தலையைத் தூக்கிப் பின்னால் பார்த்தது.

''என்ன பார்க்கிறே பச்சையம்மா? இதான் முதல் முறை முட்டையிட வந்திருக்கியா? முட்டையிடுவதோடு நம்ம கடமை முடிஞ்சுதும்மா. நாற்பத்திரண்டு நாளில் இருந்து எழுபத்து ஏழு நாளுக்குள் நம்ம முட்டைங்க பொரிஞ்சு, குஞ்சுங்க வெளியே வரும். எத்தனையோ ஆபத்துக்களில் இருந்து கொண்டு நம்ம குஞ்சுங்க உயிர் வாழணும்'' என்றது அருகே நடந்து வந்த இன்னொரு ஆமை.

திடீரென்று மனிதக் குரல்கள். எல்லா ஆமைகளும் தலை கால்களை ஓட்டுக்குள் ஒடுக்கி அசைவற்றுக் கிடந்தன.

வந்தவர்கள் இரண்டு முரட்டு மனிதர்கள். இருவர் கைகளிலும் கனமான கம்பு.

''தங்கமுத்து, எல்லா ஆமைகளையும் ஓடு கீழே இருக்கும்படி திருப்பிப் போட்டுடு. அசையாம கிடக்கும்.''

''இதோ செஞ்சிடறேன். இன்னிக்கி நல்ல வேட்டைதான். இருநூறு ஆமைகளாவது தேறும்.''

''அதுக்கு மேலேயே இருக்கும். லாரி சீக்கிரமா வந்தால் தேவலை.''

இருவரும், கம்பை ஆமைகளுக்குக் கீழே கொடுத்து நெம்பி, ஒவ்வொன்றாகப் புரட்டிப் போட்டனர்.

''பச்சையம்மா. நம்ப ஆயுள் இன்றோட முடியப் போவுது. இந்தப் பாவிங்க நம்பளைப் புடிச்சு, உயிரோட வதக்கி சாப்பிட எடுத்துக்கிட்டுப் போக வந்திருக்காங்க'' என்று அழுதது பக்கத்து ஆமை.

பச்சையம்மாவின் உடலுக்குக் கீழே, குச்சியை ஆழமாகக் கொடுத்துத் தூக்கிப் புரட்டும் சமயம்.

திடீரென்று விசில் சத்தம் கேட்டது. டார்ச் விளக்கின் ஒளி வெள்ளம் அங்கு மிங்கும் பாய்ந்தது.

''தம்பி, போலீஸ் வருது. ஆமைப் பண்ணை ஆளுங்க வராங்க. நாம்ப அவங்ககிட்ட சிக்கினால் கம்பி எண்ணணும். ஓடி தப்பிக்கிற வழியைப் பார்'' என்று எச்சரித்த தங்கமுத்து ஓடினான். இன்னொருவனும் வேகமாகப் பின் தொடர்ந்தான்.

''எல்லாம் பச்சை ஆமைங்க, முட்டையிட்டுத் திரும்புது. நல்ல காலம் இந்தப் பாவிங்க கொண்டு போறதுக்கு முன்னாடி பிடிச்சோம். எல்லா ஆமைங்களையும் பழையபடி திருப்பிப் போடுங்க. நடந்து வந்திருக்கிற அடையாளத்தை வைச்சு முட்டையிட்டிருக்கிற இடத்துல அடையாளக் கொடியை நடுங்க. எல்லா ஆமைங்களுக்கும் வால் பக்கத்தில் அடையாள வளையத்தை மாட்டி வையுங்க. கடல்ல கொண்டு போய் விடறதுக்கு முன்னாடி ஒவ்



வொன்னையும் தனித்தனியா எடை போட்டுக் குறிக்க வையுங்க'' என்றார் ஒருவர்.

''என்ன அக்கா, முன்னாடி வந்த பாவிங்களாவது நம்மை மட்டும் பிடிச்சுக்கிட்டுப் போக இருந்தாங்க. இவங்க நம்மோட நம்ம முட்டைகளையும் தோண்டி எடுத்து நாசம் பண்ணிடுவாங்க போல இருக்கே!'' என்று வருத்தம் தாங்காது கூறியது பச்சையம்மா.

''இவங்களைப் பார்த்தா அப்படிப்பட்ட பாவிங்களா தோணலே. நம்ப இடற முட்டைகளைத் திருடி எடுத்துக்கிட்டு, நம்மையும் பிடிக்கத் தின்ன அலையுற மனிதர்களுக்கு இடையே சில நல்லவங்களும் இருக்காங்க. அவங்க நம்ம இனத்தை அழிய விடாம காப்பாத்த பல முயற்சிகளை எடுத்திருக்காங்க. நம்மைப் பற்றி அவங்க ஆராய்ச்சி கூட பண்றாங்களாம். ஆமைப் பண்ணை கூட நடத்தறாங்களாமே? நம்மைப் புடிச்சு நம்ம வாலில் அடையாள கிளிப் மாட்டி விடுவாங்களாம். நம்ம முட்டைகளை பத்திரமா அப்புறப்படுத்தி, பொரிய வைச்சு, வளர்த்து குஞ்சுகளை மறுபடி கடலுக்குள் கொண்டு வந்து விடுவாங்களாம். போன தடவை நான் முட்டையிட வந்தப்ப என்கூட ஓர் ஆமை வந்தது. அதுக்கு வாலில் இந்த மாதிரி ஓர் அடையாள கிளிப் இருந்தது. அதைக் கேட்டேன். அதுதான் இதையெல்லாம் சொல்லித்து'' என்றது பக்கத்து ஆமை.

அது கூறியது உண்மைதான். இப்பொழுது போலீசுடன் வந்தவர்கள் ஆமை ஆராய்ச்சி செய்யும் ஒரு பேராசிரி யரும் அவரது மாணவர்களும்தான். எல்லா ஆமைகளுக்கும் வாலில் அடையாள கிளிப் மாட்டி, கடலில் அவர்களே கொண்டு போய் விட்டனர். ஆமைகள் முட்டையிட்டிருந்த இடத்தைத் தோண்டி, முட்டைகளைச் சேகரித்தனர்.

ஆராய்ச்சிப் பணிகளுக்காக இரண்டொரு ஆமைகளை மட்டும் கொண்டு சென்றனர். அவைகளுள் பச்சையம்மா

போர்ன்விடா பரிசு!

போர்ன்விட்டா என்றால் தெரியாத தம்பி தங்கைகள் இருக்க மாட்டார்கள். விதம்விதமான சாக்லேட், போர்ன்விட்டா மூலமாக நம்மை இனிக்க வைத்து வரும் காட்பரீஸ் நிறுவனம் சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், புதிய சிந்தனைக்கும் ஊக்க மளிக்க அகில இந்திய அளவில் வினாடி வினா என்ற QUIZ CONTEST நடத்தி ரொக்கப் பரிசு வழங்கி வருகிறது. இந்த ஆண்டு இதற்கான இறுதிச் சுற்று அண்மையில் சென்னையில் நடந்தது. இதில் முதல் பரிசான ரூ 5000/- இரண்டாம் பரிசான ரூ 3000/- மூன்றாம் பரிசான ரூ 2000/-ஐயும் முறையே கல்கத்தா டான்பாஸ்கோ, சென்னை டான்பாஸ்கோ, டெல்லி செயின் மேரீஸ் பள்ளி மாணவர்கள் வென்றனர். பத்திரிகை ஆசிரியர் திரு. என். ராம் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். கோகுலமும் பாராட்டுகிறது.



உடலைச் சுருக்கிக் கொண்டு ஓட்டுக்குள் பதுங்கிக் கொண்டது. அவைகளை ஒரு சிறு குட்டையில் விட்டனர்.

மறுநாள் காலையில் குட்டையைச் சுற்றிக் குழந்தைகள் வந்து நின்று ஆவலோடு நோக்கினர். ஒரு குழந்தை முட்டைக்கோஸ் இலையைப் போட்டது.

அதைப் பார்த்துக் கொண்டே வந்த பேராசிரியர், "இவை கடல் ஆமைகள். முழுக்க முழுக்க பூச்சி, புழுக்கள், சிறு மீன்களைத் தின்று உயிர் வாழ்பவை. நில ஆமைகள்தான் முட்டைக் கோஸைத் தின்னும்" என்றார் சிரித்தபடி.

நீந்திக் கொண்டிருந்த ஓர் ஆமையை ஒரு சிறுவன் நீண்ட மெல்லிய வைக் கோலால் தொட்டான். உடனே அது ஓட் டுக்குள் உடலைச் சுருக்கிக் கொண்டது.

"நீ வெளியே வா. உன் பல்லை எல் லாம் தட்டிடறேன்" என்றான் அவன்.

பேராசிரியர் சிரித்தார் : "அது மட்டும் உங்களால் முடியாது. ஏன் தெரியுமா? ஆமைகளுக்குப் பற்களே கிடையாது. அதற்குப் பதில் கனத்த தாடை மடிப்புகள்தான் இருக்கும். அதோடு அவை தொடு உணர்வு மிக்கவை. கனமான முதுகு ஓட்டை, ஒரு கயிறால் தொட்டால் கூடப் போதும். உணர்ந்து கொண்டு, உஷாராகி உடலை ஓட்டுக் குள் இழுத்துக் கொண்டு விடும்."

"இவைகளின் வயதை எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?"

"மரத்தின் நடுவே இருப்பது போல் இவைகளின் ஓட்டில் உள்ள கோடுகளைக் கொண்டு வயதைக் கணக்கிடலாம். விலங்கினங்களில் அதிக ஆண்டு உயிர் வாழ்வது ஆமைதான். முன்னூறு ஆண்டுகள் உயிர் வாழ்ந்த ஆமைகள் கூட உண்டு" என்றார் பேராசிரியர்.

அறிவியல் உண்மைகள் :

★ ஆமைகளின் முன்னோர் பர்மியன் காலத்தைச் சேர்ந்த யூநாட்டோ சௌரஸ் (EUNOTOSAURUS) என்று கருதுகிறார்கள். டிரையாஸ் யுகத்திலேயே இவை இருந்தன.

★ தாடைகளில் பற்கள் கிடையாது. வெட்டும் தகடுகள் உண்டு. இவை கொம்புப் பொருள் போன்றது.

★ கடலில் உள்ளவை பெரும்பாலும் அசைவம்.

★ மூச்சு விடுவதும், நுரையீரல் அமைப்பும் விநோதமானது.

★ 200 சிறப்பினங்கள்.

★ பிறந்த உடனேயே ஓடு உண்டு. இவை முதலில் மென்மையாக இருக்கும். பிறகு கெட்டியாகி இறுகும்.


★ முட்டையிட கடற்கரைக்கு வருகின்றன.



தேசப் பற்று!

* இந்தியத் தொழிலதிபர் ஒருவர் ஜப்பானில் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எதிரில் அமர்ந்திருந்த ஜப்பானிய முதியவர் ஒருவர் சீட்டின் மெத்தை கிழிந்து போயிருப்பதை கவனித்துடன் தைத்துக் கொண்டிருந்தார். "நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" என விசாரித்தார் தொழிலதிபர். அந்த வயதானவர், "இந்த இரயில் எங்களுடைய தேசியச் சொத்து. ஆகவே என்னுடைய சொத்தும் கூட. அதனால் அதைப் பாதுகாப்பதன் மூலம் என்னுடைய சொத்தைதான் பாதுகாக்கிறேன்" என்றார் . தொழிலதிபருக்கு ஆச் சரியம் தாளவில்லை.

- சுகாராஜ், மதுரை - 2.



ஹஜ்ரத்பால்

'ஹஜ்ரத்பால்' பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்களே!

அது ஓர் மசூதி. காஷ்மீரில் உள்ளது. சமீபத்தில் அங்கு ஏற்பட்ட ஒரு பதற்றம், நம் நாட்டின் கவனத்தையே தன்பால் இழுத்து விட்டது. ஏன், உலக நாடுகளின் கவனத்தையே ஈர்த்து விட்டது என்றும் கூறலாம்.

அந்த மசூதியின் சிறப்பு என்ன?

ஸ்ரீநகரில் ஓர் ஏரி. 'தால்' என்று பெயர். அதன் மேற்குக் கரையில்தான் இந்தப் பெருமைமிக்க ஹஸ்ரத்பால் மசூதி உள்ளது. வெண்பளிங்குக் கற்க ளால் ஆனது. கொள்ளை அழகு. இதை ஸ்ரீநகரின் மக்கள் மிகுந்த பயபக்தியுடன் போற்றிக் காத்து வருகின்றனர். அதற்குக் காரணம், அதனுள் வைக்கப்பட்டுள்ள ஒரு புனித நினைவுச் சின்னம்!

அது என்ன?

பல கோடி மக்களால் வணங்கப் படும் நபிகள் நாயகத்தின் திருமுடி களில் ஒன்று! 'ஹஜ்ரத்' என்றால் நபிகள் நாயகம். 'பால்' என்றால் தலைமுடி! நபிகள் நாயகத்தின் தலைமுடிதான் அங்கு புனித நினைவுச் சின்னமாகப் பாது காத்து வைக்கப்பட்டுள்ளது. எனவே தான், அந்த மசூதிக்கு 'ஹஜ்ரத் பால்' மசூதி என்ற பெயரே ஏற்பட்டுள் ளது.

சரி அந்தப் புனிதமுடி எப்படி காஷ் மீர் வந்தது?

காஷ்மீரில் ஒரு வர்த்தகர். பெயர் குவாஜா நூருதீன் அஸ்வாரி. ஒரு சமயம், அவர் மெக்காவுக்குப் புனிதப் பயணம் போனார். அங்கு அவருக்கு ஒரு அரபு நாட்டு ஷேக்குடன் பழக்கம் ஏற் பட்டது. அவர் மெக்காவின் 'காபா' மசூதியைச் சேர்ந்தவர். அவரிடமிருந்து தான் அஸ் வாரி அந்தப் புனித முடியைப் பெற்று வந்து ஸ்ரீநகரில் வைத்ததாகச் சொல்லப் படுகிறது. ஆண்டுதோறும், நபிகள் நாய கத்தின் பிறந்த நாளன்று, ஏராளமானவர்கள் வந்து அதைத் தரிசிப் பார்கள்.

இப் புனிதப் பொருளை மைய மாகக் கொண்டு இப்போது நடந்த பர பரப்பைப் போலவே, ஏற்கெனவே ஒரு தடவை நடந்துள்ளது.

ஜய்ராம்ஜி

1963 டிசம்பர் 27. திடீரென்று அந்தப் புனிதமுடி காணாமல் போய் விட்டது. உடனே, காஷ்மீர் மாநிலம் முழுவதும் ஒரே வன்முறை தீ வைப்பு சம்பவங்கள். அப்போது முதல்வராக இருந்தவர் பக்ஷி குலாம் முகம்மது என்பவர். உடனே அவர் அந்த முடியைத் தேடும் பணியை முடுக்கி விட்டார். அப்பணி பி. என். மல்லிக் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்தான் சி.பி.ஐ.யின் தலைவர். ஒரே வாரம். அப் புனித நினைவுச் சின்னம் திரும்பக் கிடைத்து விட்டது. உடனே, 15 பேர் கொண்ட முஸ்லீம் மதத் தலைவர் குழு அந்த முடியை நன்கு ஆராய்ந்தது. காணாமல் போன அதே முடிதான் அது என்பதை உறுதி செய்தது. பின்னர் 1964 ஜனவரி 4 ஆம் நாள், அது மீண்டும் அதனுடைய இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

அது எப்படித் தொலைந்தது...?

பல காரணங்கள் கூறப்பட்டன. பாகிஸ்தான் ஏஜெண்ட்டுகளின் வேலை என்றனர் சிலர். வேறு சிலர், பிரபலமான ஒரு முக்கியப் புள்ளியின் வயது முதிர்ந்த தாயார், சாகும் நிலையில் அந்தப் புனிதப் பொருளைத் தரிசிக்க விரும்பியதாகவும், எனவே, எடுத்துச் செல்லப்பட்டுத் திரும்பக் கொண்டு வந்து வைக்கப்பட்டு விட்டது என்றும் கூறினர். உண்மையான காரணம் என்ன என்பது இன்று வரையில் வெளிவரவே யில்லை.

சரி.. இப்போது ஹஜ்ரத்பாலில் என்ன நடந்தது?

காஷ்மீர் தீவிரவாதிகள் அதனுள் புகுந்து கொண்டு, அங்கிருந்த மக்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு, அங்குள்ள புனிதப் பொருளையும், மசூதியையும் பாழ்படுத்தி விடுவோம் என்று மிரட்டினர். இந்தத் தீவிரவாதிகளில் சிலர் பாகிஸ்தானால் ஊடுருவல் முறையில் அனுப்பப்பட்டவர்கள். நல்லவேளை! நமது அரசின் கட்டளைப்படி இராணுவத்தினர் ஹஜ்ரத்பாலை முற்றுகையிட்டு எந்த ஓர் அசம்பாவிதமும் நடைபெற விடாமல் தடுத்து அங்கிருந்த 65 தீவிரவாதிகளையும் சரணடையச் செய்து, மசூதியையும் அங்குள்ள புனிதப் பொருளையும் காப்பாற்றி விட்டனர்.

போகுதம்மா!

காலையில் மலர்வது மல்லிகைப் பூ
கலைமகள் அமர்வது தாமரைப்பூ
மாலையில் பூப்பது கொடி முல்லை
மணப்பதில் இதற்கிணை வேறில்லை.

கொடியினில் பூத்திடும் சம்பங்கி
குழலினில் சூடுவோம் நாம் வாங்கி
வடிவினில் சிறியது மகிழம்பூ
வாசத்தில் சிறந்தது தாழம்பூ

முள்ளில் மலர்வது ரோஜாப்பூ
முகத்தில் மலர்வது புன்சிரிப்பு
கொள்ளை அழகாம் நீர்வில்லி
குளத்தினில் பூப்பது செவ்வல்லி.

வண்ணப் பூக்களைச் சோலையிலே
வகையாய் நாமும்; காண்கையிலே
கண்களுக் கினிமை ஆகுதம்மா
கவலைகள் பறந்தே போகுதம்மா!

- கோவூர் இசைதாசன்.





கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கம் முதன் முதலில் 1842-ஆம் ஆண்டு இலண்டனில் ஏற்பட்டது. பதினாறு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் வரைந்த படம்தான் முதல் வாழ்த்தாக வெளியிடப்பட்டது.

கிறிஸ்து+மஸ். ''மாஸ்'' என்றால் ஆலய பூஜை. ஆக கிறிஸ்துமஸ் என்றால், கிறிஸ்துவின் பூஜை என்பது பொருள். கிறிஸ்துவின் பிறந்த நாளைக் குறிக்கும் இந்தச் சொல் கி.பி. 1131-ம் ஆண்டிலிருந்துதான் வழக்கத்திற்கு வந்தது.

கிறிஸ்துமஸ் பரிசுகள்

பாலகனான இயேசு கிறிஸ்துவிற்கு ஆசிய நாடுகளிலிருந்து சென்ற மன்னர்கள், வெள்ளைப் போளம், தூவ வர்க்கம், பொன், என்ற பரிசுப் பொருள்களைக் கொடுத்தார்கள். அந்த நினைவைப் போற்றும் விதமாகத்தான் இன்றும் நட்பின் அடையாளமாகப் பரிசுகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.




கிறிஸ்துமஸ் விழாக் காலங்களில், கிறிஸ்துவர்கள் வீட்டு முன் முகப்பில் நட்சத்திரக் கூண்டுகள் தொங்க விடு வதைக் காணலாம். இந்த ஒளிக் கூண்டு கள் தொங்குவதன் மூலம் அந்த வீட்டி லுள்ளோர், ''இயேசு கிறிஸ்து இங்கே இருக்கிறார்'' என்பதை மக்களுக்குத் தெரிவிக்கும் ஒரு அடையாளம்தான் இது.

இயேசு பிறந்த சமயம். அவரைத் தரிசிக்க வந்த ஞானிகள் மூவருக்கு வழி



காட்டியாக வந்த வால் நட்சத்திரம் ''பெத்லகெம்'' சிற்றூரை அடுத்த மாட்டுத் தொழுவத்திற்கு நேராக வந்து நின்றது. அந்த மூன்று ஞானிகளும் அங்கு சென்று பார்க்கவே இயேசு பிறந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தனர். இந்த வால் நட்சத்திரத்தை நினைவூட்டு வதற்காகத்தான் கிறிஸ்துமஸ் நட்சத் திரக் கூண்டுகள் தொங்க விடப்படு கின்றன.

ஜெர்மனியில் உள்ள ஸ்டிராங் பர்க் என்ற இடத்தில் 1605-ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது கிறிஸ்துமஸ் மரம் இடம் பெற்றது. உலகின் ஒளியான இயேசு வின் அடையாளமாக மெழுகுவர்த்தி களையும், மரத்தின் உச்சியில் விண் மீனையும் தொங்க விட்டனர்.



ஒரு சமயம் இங்கிலாந்து நாட்டு மன்னன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அந்தக் காட்டிலிருந்து நாட் டிற்குச் சென்று குறிப்பிட்ட நேரத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகை விருந்தில் கலந்து கொள்ள முடியாத நிலையில் தனது நண்பர்களுடன் அந்தக் காட்டி லேயே கிறிஸ்துமஸ் விருந்து உண்ண முடிவு செய்தான் மன்னன். இதற்காகத் தன் கையில் இருந்த உணவுப் பொருட் களையெல்லாம் சேர்த்து அவரது சமை யல்காரன் சமைத்தான். அப்படிச் சமைக் கப்பட்டதுதான் கேக். இதுதான் கிறிஸ்து மஸ் கேக் பிறந்த கதை.

- தக்கோலம் அ. முஸ்தபா.



அதிசய

வீரதீரச் செயல்புரிந்த பல சிறுவர்களைப் பற்றிப் புத்தகங்களைப் படித்திருப்பீர்கள்; தொலைக்காட்சி யில், சினிமாவில் பார்த்திருப்பீர்கள். உங்களில் பலருக்கு, கோழைத்தனத்தைத் தூக்கியெறிந்து விட்டு தைரியத்தைக் காட்டும் வாய்ப்புகள் வந் திருக்காது. கரப்பைப் பார்த்து விட்டுப் பயந்து பெரியவர்களின் பின்னால் மறைந்து




கொள்பவர்களும் உண்டு.

இப்போது ஜோராகக் கையைத் தட்டுங்கள். திருடர்களைக் கண்டு கொஞ்சமும் பயப்படாமல், அவர்களைத் துணிவுடன் எதிர்த்த பத்து வயதுச் சிறுமி அம்பிகாவின் வீரச் செயலை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். இது சமீபத்தில் நடந்த நிகழ்ச்சி.

செங்குன்றம் என்ற இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆங்கிலத்தில் ரெட் ஹில்ஸ் என்று சொல்வார்கள். சென்னைக்குக் குடிநீர் வழங்கும் பெரிய ஏரிகளில் ரெட் ஹில்ஸ் ஏரியும் ஒன்று. அந்த செங்குன்றம் பகுதியைச் சேர்ந்த சிறுமிதான் அம்பிகா. அவளுடைய அப்பா செங்குன்றத்தில் ஓட்டல் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார். பெயர் ஆனந்த குமார். அம்பிகாவின் அம்மா ரேவதி. அம்பிகாதான் மூத்தவள். தம்பிப் பாப்பா லோகேஷ் குமார். அம்பிகா, ஹோலி சைல்ட் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படிக்கிறாள்.

இந்த நவம்பர் மாதம் இருபதாம் தேதி சனிக்கிழமை இரவு மணி எட்டு இருக்கும். அம்மாவும் இரு குழந்தைகளும் தொலைக் காட்சியில் இந்தி படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அம்பிகாவும், அவள் தம்பியும் தரையில் படுத்துக் கொண்டு இருந் தார்கள். அந்தச் சமயம், 'லொட், லொட்' என்று கதவு தட்டப்பட்டது. அம்மா எழுந்து சென்றாள். அவள் கதவைச் சற்றுத் திறந்ததுதான் தாமதம். முகமூடி அணிந்த ஒருவன் கதவை நெட்டித் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்து அம்மாவின் வாயைப் பொத்தி, கழுத்தில் கத்தியை வைத்தான். என்ன ஏதோ சலசலப்புக் கேட்கிறதே என்று சிறுமி அம்பிகா திரும்பிப் பார்த்தாள். அம்மாவின் கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு ஒருவன் நிற்கும் காட்சியைப் பார்த்தாள். எங்கிருந்துதான் அவளுக்கு அத்தனை தைரியம் வந்ததோ! மின்னல் வேகத்தில் எழுந்தாள். ஜன்னலில் அப்பா அரிவாள் மாட்டி வைத்திருப் பது அவளுக்குத் தெரியும். எழுந்தவள், கண்ணிமைக்கும் நேரத்தில் அரி



அம்பிகா!

வாளை எடுத்துக் கொண்டு, ''அம்மாவை விடுடா, விட்டுடு...'' என்று ஓங்கிக் குரல் கொடுத்துக் கொண்டே அவனை நெருங்கினாள்.

சிறுமிதானே என்று அந்த முகமூடிக்காரன் அம்பிகாவின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது அலட்சியமாக இருந்தான்.

இனியும் பொறுப்பதில்லை என்று தன் பலத்தை முழுவதும் பயன்படுத்தி, அவன் முகத்தை நோக்கி அரிவாளால் ஒரு வெட்டுப் போட்டாள் அம்பிகா. ஒருகணம் அசந்து போனாலும், உடனே சமாளித்துக் கொண்டே முகமூடி, தலையைக் குனிந்து கொண்டு கையை வைத்து அரிவாளைத் தடுக்கவே, அம்பிகாவின் பலமான வெட்டு அவன் கையில் விழுந்தது. பின்னாலேயே நுழைந்த இன்னொரு முகமூடி, அம்பிகாவின் கையில் இருந்த அரிவாளைப் பிடுங்க, அம்பிகா திமிர, அது அம்பிகாவின் கையில் விழுந்து அவளுடைய விரலைப் பதம்பார்த்தது. அவளுடைய விரலில் இருந்தும் இரத்தம் கொட்டியது. கொஞ்சமும் தாமதியாமல், இரு கொள்ளையர்களும் அம்பிகாவையும், அவள் தம்பியையும் சமையல் அறையில் வைத்துத் தாழ்ப்பாள் போட்டு விட்டார்கள். இருந்தாலும் வெட்டு வாங்கிக் கொண்ட முதல் முகமூடியின் முகத்தில் இருந்து இரத்தம் வருவது நிற்கவில்லை. அதே போல், முகமூடியால் காயத்தை வாங்கிக் கொண்ட அம்பிகாவின் விரலில் இருந்தும் இரத்தம் பெருகி வருவது நிற்கவில்லை. அம்மாவை படுக்கை அறையில் வாயைக் கட்டி, கையையும் கட்டிய கொள்ளையர்கள் பீரோ சாவிகளைக் கேட்டு, எடுத்துக் கொண்டார்கள்.

அடுத்த அரை மணி நேரத்தில் வீட்டில் எல்லா இடங்களையும் தேடி, தங்க நகைகளை எடுத்துக் கொண்டு ஓடி விட்டார்கள்.

அறைக்குள் அடைக்கப்பட்ட சிறுமி அம்பிகா, கதவை ஆட்டி ஆட்டித் திறந்து கொண்டு வெளியே வந்து அம்மாவின் கட்டுகளை அவிழ்த்து விட்டாள். அப்புறம் அப்பாவுக்கும் போலீஸுக்கும் தகவல் கொடுக்க அவர்களும் வந்து சேர்ந்தார்கள். பத்திரிகைகளுக்கும் செய்தி பறந்தது.

மறுநாள் அம்பிகாவின் துணிச்சலான செயலைப் பற்றிக் கேள்விப்பட்ட அவள் சிநேகிதிகளுக்கும், ஆசிரியைகளுக்கும் ஆச்சரியம். ''எப்படிடீ அத்தனை துணிச்சலா அரிவாளை எடுத்து வெட்டினே?'' என்று கண்களை அகல விரித்துக் கேட்டார்கள் சிநேகிதிகள்.

நகைச்சுவைப் போட்டி - முடிவு

இந்தப் போட்டியில் ஏராளமானவர்கள் மிக உற்சாகத்துடன் கலந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் பாதிப் பேர், இது சிறுவர்க்கான நகைச்சுவைப் போட்டி என்பதையே மறந்து விட்டிருக்கிறார்கள். இன்னும் பலர், ஏற்கெனவே பிரபலமான பத்திரிகைகளில் வெளிவந்தவற்றையே, அப்படியே அல்லது இலேசாக மாற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆசிரியர்களைக் கிண்டல் செய்யும் ஜோக்குகளும் உண்டு. மொத்தத்தில் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தாலும், இது பரிசுக்குரியதைத் தேர்ந்தெடுக்கப் பெரிதும் உதவியாக இருந்தது.

முதல் பரிசாக ரூபாய்

முப்பது பரிசு பெறுவோர் :

1. எம். வேல்முருகன், இந்திரா நகர், எலவனாசூர் அஞ்சல்.
2. சீர்காழி வி. ரேவதி, தென்பாதி.
3. தி. மனோகரன், பரமக்குடி.
4. எஸ். ஷேக் முகமது, தாராபுரம்.

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி. பரிசு பெற்ற ஜோக்குகள் அடுத்த மாதம் சிரிப்பு பக்கத்தில் இடம்பெறுகின்றன.

''யாராவது ஒருவர் துணையுடன் பஸ்ஸு"ல பள்ளிக்கு வந்துட்டுப் போ'' என்றனர் அவளது பள்ளி ஆசிரியைகள்.

பெரிய போலீஸ் அதிகாரி திலகவதி, அம்பிகாவைத் தன் வீட்டுக்குக் கூப்பிட்டு, விருந்து வைத்து அனுப்பினார். அம்பிகாவைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காக, நானும், போட்டோகிராபர் கோபிநாத்தும் அவள் வீட்டிற்குப் போயிருந்தோம்.

''எனக்கு ஃபைட் என்றால் பிடிக்கும். திலகவதி ஆன்ட்டி மாதிரி நானும் பெரிய போலீஸ் ஆபீஸரா வரப் போறேன்'' என்று உற்சாகத்துடன் சொன்னாள் அம்பிகா. பரதநாட்டியமும் முழுக்க கத்துக்கிட்டாச்சாம். அரங்கேற்றம்தான் பாக்கி. பள்ளியில் பேச்சுப் போட்டியா, பாட்டுப் போட்டியா அம்பிகா கட்டாயம் கலந்து கொள்கிறாள். பரிசும் பெறுகிறாள். அம்பிகாவுக்கு இப்போது சின்ன வருத்தம். அவள் அப்பா முன்பு மாதிரி மாயாவி கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதில்லையாம். என்னை மட்டும் படம் எடுத்துட்டுப் போறாங்க. என் தம்பியையும் எடுங்க'' என்று வேண்டுகோள் வைத்தாள் அம்பிகா.

சரி, இப்போது சொல்லுங்கள்; உங்களில் எவ்வளவு பேர் இதுபோன்ற நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அம்பிகாவைப் போல் துணிச்சலாகச் செயல்படுவீர்கள்? நீங்கள் முயன்றால் கண்டிப்பாக முடியும். சிறுவர்களாகிய உங்களால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்? வாழ்க்கையில் முன்னேற படிப்பு மட்டும் போதாது; தைரியம், முயற்சி, துணிவு என்று எல்லாமே தேவை. ''பாதகஞ் செய்வோரைக் கண்டால் - நாம் பயங்கொள்ள லாகாது பாப்பா! மோதி மிதித்து விடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.'' என்ற பாரதியின் பாடலை அடிக்கடி பாடிப் பாருங்கள். துணிச்சல் தானே வரும். அப்புறம் என்ன?

- ப்ரியன்

புகைப்படங்கள் மற்றும் அட்டை வண்ணப்படம் : கோபிநாத்

புத்தாண்டே வருக!

புது ஆண்டே வருக!
பொலி வெல்லாம் தருக
புதுமை கொண்டு வருக!
புதிய ஊக்கம் தருக

பேதம் எல்லாம் விரட்டி
பொறுமை குணம் தருக
வேதனை எலாம் ஓட்டி
வன்முறை நீங்க வருக

அன்பு திளைக்க வருக
அறம் வளர்க்க வருக
இன்னல் தீர வருக
இன்பம் அமைதி தருக.


– பொன் குமார், சேலம்.

வாரியார்


வேல்முருகன் பக்தரம்மா எங்கள்
வாரியார்
வேடிக்கையாய் பேசிடுவார்
எங்கள் வாரியார்
பள்ளிக்கூடம் செல்லாமலே எங்கள்
வாரியார்
பட்டம்பல பெற்றவராம் எங்கள்
வாரியார்

குட்டிகுட்டிக் கதைகள் கூறி எங்கள்
வாரியார்
காலட்சேபம் செய்தவராம் எங்கள்
வாரியார்
காந்திபோல வாழ்ந்தவராம் எங்கள்
வாரியார்
கடவுள்நெறி காட்டியவராம்
எங்கள் வாரியார்

– எஸ். கண்ணகி, குரும்பட்டி.



பிருந்தாவனக் கவியரங்கம்



காகம்


காகம் நல்ல காகம்
கருமை நிறக் காகம்
வேக மாகப் பறந்தே
வேண்டி யதைத் திருடும்

உணவு கண்டால் கரையும்
உறவை அழைத்து உண்ணும்
இனத் தாரோடு கூடி
இன்ப மாக வாழும்

இடரை அறிந்து தவிர்க்கும்
இன்ப மாகக் கரையும்
தடையை வெல்ல முயலும்
திருடிக் கூடத் தின்னும்!

- மா. கார்த்திகேயன்,
தென்னம்புலம்.





முயலாரே!

துள்ளி ஓடும் முயலாரே!
தூரத்த வில்லை முயலாரே!
வெள்ளை நிறத்து முயலாரே!
வேகமாய் ஓடும் முயலாரே!

காட்டில் திரியும் முயலாரே!
கண்ணியம் மிக்க முயலாரே!
வீட்டுக்கு வாரும் முயலாரே!
வரவேற்பு அளிப்பேன் முயலாரே!

குட்டிக் குட்டி முயலாரே!
கொள்ளை அழகு முயலாரே!
எட்டிப் பார்க்கும் முயலாரே!
என்னிடம் வாரும் முயலாரே!

- வே. தாமரைச் செல்வன்,
வடமாதிமங்கலம்.

முயற்சி!

முயன்று முயன்று முன்னேறு
முடியா தென்பதே கிடையாது!
பயின்று பயின்று பலநூறு
படித்தோர் படைத்தனர் வரலாறு

தோல்வியைக் கண்டு துவளாமல்
துணிவாய் நிற்கப் பயிற்சி பெறு!
ஆழ்கடல் முத்தே ஆனாலும்
அள்ளி வரலாம் முயற்சியொடு!

- வலங்கைமான் நூர்தீன்.




ஆமை அண்ணே!

ஆமை அண்ணே வா! வா!
அருகில் அழைத்தேன் வா! வா!
ஆமை வடை தாரேன்
அசைந்து நகர்ந்து வா! வா!

வீட்டில் வாணலி காணோமாம்
வந்தே ஓட்டைக் கழற்றித் தா!
வட்ட வடையை சுட்டிடலாம்
வாட்டம் போகத் தின்றிடலாம்!

- மா. வெ. கிருஷ்ணன்,
அம்மையார்குப்பம்.





திறமை காட்டு

பரீட்சை வந்தால் படி
பாலைக் காய்ச்சிக் குடி

காட்டில் உள்ளது யானை
குயவர் செய்வது பானை.

பாட்டி சுடுவது அடை
போரில் வெல்வது படை.

நல்ல இசையால் பாடு
நல்ல நண்பரை நாடு

கண்ணுக்கு அழகு விழி
கரும்பை ஆலையில் பிழி.

உடுக்க அழகு பட்டு
உயர்ந்திட திறமை காட்டு!

வே. பூங்குன்றன்,
வடமாதிமங்கலம்.



பட்டம்

பட்டம் விடலாம் வாருங்க
பறக்குது அழகாய் காணுங்க
குட்டைக் குஞ்சம் ஆடுதுங்க
குனிந்து உயர்ந்து பறக்குதுங்க

விலையோ ரொம்பக் கம்மிங்க
விதம்விதமா வடிவில் இருக்குதுங்க
தலையை ஆட்டி மயக்குதுங்க
தீரும் முன்னே வாங்கிடுங்க

- போரூர் கி. சிவா.





வேப்பம்பட்டி. து. எல்லப்பன், கொளத்தூர் ரா. லட்சுமிராணி, நாமக்கல் வ. கௌஸ்துபன், அம்மையார்குப்பம் மா. வே. கிருஷ்ணன், தம்மம்பட்டி க. கிருஷ்ணமூர்த்தி, மேலப்பாதி எஸ். நாகராஜன், பட்டீஸ்வரம் கே. கருப்பையன் மற்றும் பலர்.

★ அட்டை அசத்துகிறது சார். அப்படியே ஒரு கோகுலத்தை என் நண்பனுக்கு கிருஸ்துமஸ் பரிசாக அனுப்பி வைத்தேன். - திருமலை. ப. அலமேலு, சின்னதாராபுரம் வி. முத்துக்குமரன், மயிலம் வ. அண்ணாத்துரை, திருவாரூர் கமல தியாகராஜன், விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், தருமபுரி எம். சோமசுந்தரம் மற்றும் பலர்.

★ வரிக்குதிரை கறுப்பில் வெள்ளைக் கோடா, இல்லை வெள்ளையில் கறுப்புக் கோடா என்பது இன்னும் முடிவாகவில்லை என்பது சுவையான செய்தி! - நெய்வேலி முத்து சண்முகம், திருப்புகலூர் வ. பெரியநாயகி, வேளாங்கண்ணி வி. சுந்தரபாபு, காமரசவல்லி ரெ. ராமதேசிகன் மற்றும் பலர்.

★ இலங்கையில் கோகுலம் வாசகர்கள் ஏராளம். ஆனால் எங்கள் கைக்கு கோகுலம் வரும் போது போட்டியின் முடிவு தேதி கடந்து விடுகிறது. அதனால் முடிவு தேதியை இன்னும் தள்ளிப் போடுங்களேன். எங்கள் கதைகளையும் போடுங்களேன். - வல்வெட்டித்துறை கார்த்திராசு, கண்ணகம் க. சிரானன், யாழ்ப்பாணம் சரவணபாலன், குமரபுரம் த. சிதிரூபன் மற்றும் பலர்.

(இந்த மாதத்தில் இருந்தே போட்டிக்கான முடிவு தேதியை 15 நாட்களுக்கு ஒத்திப் போட்டு விட்டோம். மகிழ்ச்சிதானே? இலங்கை உட்பட போட்டியில் கலந்து கொள்வோரும், கதை, கட்டுரை, பாட்டுகளை அனுப்புவோரும் இந்தியாவில் முகவரி (நண்பர் அல்லது உறவினர் முகவரி) தர வேண்டும். இது தவிர்க்க இயலாதது.)

★ சிறுவர் ஒலிப்பேழைகளுக்கு மதிப்புரையா! வரவேற்கத்தக்க புதுமை - குறிஞ்சிப்பாடி எஸ். வேலுசாமி, தென்காசி கு. சன்னாசி, எலவானாசூர் கோட்டை எம். வேல்முருகன்.

தவறு எங்கே சார்?

★ 'பற்கள் பலவிதம்' சித்திரத் தொகுப்பில் எலிகளின் பற்கள் மாதத்திற்கு 3 செ.மீ. வீதம்வளருவதாகப் போட்டிருக்கிறீர்களே! தவறு எங்கே சார்? - அரக்கோணம் எஸ். கோபாலகிருஷ்ணன், சாத்தனார்மேடு கப்புலட்சுமி, வளசரவாக்கம் மு. ஆரோக்கியசாமி, தத்தம்பட்டு வி. தமிழரசி, மற்றும் பலர்.


(மாதத்திற்கு 3 செ.மீ. வளர்வதால்தான் அரிப்பு எடுத்து, இந்த வளர்ச்சியைச் சரிசெய்து கொள்ள எலிகள் தங்கள் பற்களைக் கொரித்துத் தேய்த்துக் கொள்கின்றன. இது இயற்கையின் சமன் செய்யும் கொடை. இப்படிச் செய்யாவிட்டால் எந்த எலியும் பிறந்த ஒரு மாதத்திற்குள் பல் வளர்ச்சி தாங்காது இறந்து விடும் - ஆசிரியர்.)

★ அபிராமியின் அட்டிகைக்காகவே கோகுலம் வாங்குகிறோம். கூத்தபிரான் நாடகம்தான் எழுதுவார் என்று எண்ணியிருந்தோம். தொடர் கதையிலும் அசத்துகிறாரே! - திருமங்கலம் ம. சிங்காரன், திருவெண்ணெய்நல்லூர் இ. பார்த்தசாரதி, சூலூர்பேட்டை வெ. கிருஷ்ணா ராவ், பட்டீச்சுரம் லோ. தனபால். மற்றும் பலர்.

★ மீன் மழை, இரத்த மழை, தவளை மழை பெய்வது பற்றி நல்ல அறிவியல் விளக்கத்தைத் தந்தது. - மங்களபுரம் மா. கண்ணப்பன், கவரம்பட்டி வி. தென்னரசு, கல்யாணசுந்தரம், திருவானைக்கா. என். தமிழ்ச்செல்வி மற்றும் பலர்.

★ கருடனை வென்ற கருணை வள்ளல் எங்களுக்கு புராணத்தில் புதிய கதையைத் தெரிய வைத்தது. கருடனுக்குள் இப்படி ஒரு சுவையான வரலாறா? - விருதுநகர் கு. நாகராஜன்,

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காடுதாங்கல், சென்னை - 600 097, தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


காந்தி தாத்தாவின் அன்பு
நாட்டை வாழ வைக்கும் பண்பு
ஜனவரி 30 : சர்வோதய தினம்.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

